

என் மக்களை
வாழவிடுங்கள்
எஸ். ஜே. இம்மானுவேல்

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

தலைப்பு: என் மக்களை வாழவிடுங்கள்

©ஆசிரியர்: எஸ். ஜே. இம்மானுவேல்

பதிப்பகம்: Vidi Druckerei, Dortmund, Germany

வெளியீடு: ஒகஸ்ட் 1997

அட்டைப்படம்: சி.றோய் ரவீந்திரன்

பிரதிகள்: 2000

பக்கங்கள்: 90

வெளியீட்டாளர்: தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் யேர்மனி

Title: EN MAKKALAI VALAVIDUNGALL
(**Let my people go**)

©Author: S.J. Emmanuel

Press: Vidi Druckerei, Dortmund, Germany

First Published: August 1997

Cover: S.Roy Ravendiran

Copies: 2000

Pages: 90

Publishers: Tamilen Seelsorgeramt (Tamil Chaplaincy)
Schützenstr. 87, 49084 Osnabrück
Deutschland

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

# என் மக்களை வாழவிடுங்கள்

அருட் கலாநிதி எஸ். ஜே. இம்மானுவேல்

வெளியீடு: தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்
யேர்மனி

நாடுகாணவென்று தங்கள்
வீடிழந்து காடடைந்த
வாடுதுயர் துச்சமென்று
நீடு துயர் காணுகின்ற
என்னரிய மக்களுக்கும் ...

அந்நியம் களைத்து எங்கள்
புண்ணிய பூமிகாக்க
தன்னுயிர் வலிதே ஈந்து
மண்ணோடு மக்களுக்காய்
போரிடும் வீரருக்கும் ...

படையலாம் மலரிது

# அணிந்துரை



அண்ணன் இம்மானுவேல் அடிகள் தனது மக்களோடு மக்களுக்காக அனுபவித்த துன்பி யலின் மனவுளைச்சலினால் எழுந்து, பன்நாடு களில் பகிரப்பட்ட உரைவீச்சுக்கள் சிலவற் றைக் கூட்டுத்தொகுப்பாக்கி வெளிவரும் இந் நூாலுக்கு, ஆசியுரை வழங்கல் எனக்கும், பணியகத்திற்கும் கிடைத்த பெரும் பாக்கியம் எனக் கருதுகிறேன்.

அடிகளார் குடும்பத்திற்கும் எனது குடும்பத் திற்கும் மூன்று தலைமுறைக்கால நெடிய பழக்கமும் நட்பும் உறவும் உண்டு. அவரது பெற்றோர்கள் எனது வாழ்விற் பெரிதும் அக்கறை கொண்ட மாமனிதர்களாகிய ஞானப் பெற்றோர்கள். யாழ் மறைமாவட் டத்தளத்தில் அவருடன் குருத்துவக் கல்லூரி மாணவனாகப் பணி புரிந்த காலத்தில் திருச்சபையில் பொது நிலையினரின் ஈடுபாடு சம்பந் தமாக அவர் அளித்த உரைகளும் அவர்களை ஊக்குவிக்க மேற் கொண்ட பணிகளும் எனது இளம் சிந்தனைகளைத் தெளிவாக்கியும், சிலையில் எழுத்தாகவும் பதிந்தது.

நெடுந்தீவின் ஆழ்கடலில் அப்பாவித்தமிழர்கள் வெட்டிக் கொலை... நவாலிக் கோவிலில் பொம்பர்த் தாக்கல்... நாகர் கோவிற் பாடசாலையில் குண்டு வீச்சு... நாச்சிக்குடாவில் மீனவர்கள் அழிப்பு... வாகரையில் இரத்தக்களரி... தமிழீழத்தில் நடைபெறும் அகோர நிகழ்வுகளையும் அநியாய மரணங்களையும் எதிர்த்து அடிப்படைச் சுதந்திரத்தையும், உரி மைகளையும் மல்லுக் கட்டி மறுக்கும் அரசோடு பேனாவினால் போர் தொடுத்தார். தொடர்புச்சாதனங்கள் இருட்டடிப்புச் செய்த நிலையில் அநாதைகளாக்கப்பட்ட மக்களின் குரலை வெளிப்படுத்த தனது உயிரைப் பணயம் வைத்து துணிவுடன் உள்ளும், வெளிநாடுகளுக்கு மடல் வரைந்தார். 'அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா' என்ற தமிழ்ப் பண்பாட்டின் விடுதலைக் கனல்களுக்கு இலக்கணமாக வாழ்ந்து வீர உணர்வுகளைத் தட்டி எழுப்பினார். உரிமை கள் இரந்து பெறும் சலுகைகள் அல்ல, தொடர்ச்சியான நீதியின் போராட்டத்தின் கனிகள் என்பார்.

தனது உரைகளில் மூன்று அம்சங்களை மிக ஆழமாக நோக்குகிறார். முதலாவது வன்செயற் சுழற்சி, அடுத்தது கிறிஸ்தவக் கண்ணோட்டத்

தில் தமிழ்ப் போராட்டம்,மூன்றாவது 'உண்மை விடுதலையளிக்கும்'. தாம் இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு சனநாயகம், ஒப்பந்தம், அகிம்சை, உண்ணாவிரதம், பேச்சுவார்த்தை போன்ற வடிவங்கள் அனைத்தும் படுதோல்வி கண்டதும் தமிழர் தமது பாதுகாப்புக்கு ஆயுதம் தாங்கிய சூழமைவைப் போரோட்டத்தோடு அலசுகிறார். தமிழர் ஆயுதம் தாங்கிய நிலைக்கு சுழற்சியான வன்முறை காரணம் என்கிறார். இச் சுழற்சியை நான்காக வகுக்கிறார் பிரேசில் விடுதலை இறையியலர் ஆயர் கெல்டர் கமரா. முதலாவது: அடிப்படை மனித உரிமை பறிக்கப்பட்ட நிலை. அரசின் அரசியல் பொருளாதார அடிமைத்தனங்கள். இதில் இரத்தம் சிந்தாத படியால் அது வெண்மை வன்செயல் (White violence). இதை எதிர்த்து எழும் சாத்வீகப் போராட்டங்களை இரண்டாம் வன்செயல் அல்லது சாத்வீகத்தின் வன்செயல் (Violence of non-violence), இதையடக்குவதற்கு அரச இயந்திரம் பயன்படுத்தும் அடக்கு முறைகள் மூன்றாவது வன்செயல். இதன் விளைவு அரசபயங்கரவாதம்(State terrorism). ஒடுக்கப்பட்டவர்கள் தமது பாதுகாப்பிற்கும் அநியாய அமைப்பு முறையை மாற்றுவதற்கும் தாமாகவே ஆயுதம் தாங்கிய நிலைமை நான்காவது வன்முறை (Revolution). முதலாவது வன்முறைக்கு எதிராக எழுந்த இரண்டாவது சாத்வீகப் போராட்டத்தை சிங்கள அரசு அரசபயங்கரவாதத்தால் தீர்வு காணமுனைந்தது. *அரச பயங்கரவாதத்தின் பிரதிபலிப்பே தமிழ்த் தீவிரவாதம். வன்செயலிலிருந்து துணிவாகவும் பொறுப்பாகவும் வெளிவர வேண்டியது ஒடுக்குவோரேயன்றி, தற்பாதுகாப்பு நடவடிக்கையாகப் பதிலடியைத் தொடங்கிய ஒடுக்கப்பட்டோரல்ல* என்று முழங்குகிறார்

இரண்டாவதாக சிங்கள அரசின் பலத்த இராணுவ நடவடிக்கைகள்: செல்தாக்குதல்கள், ஆகாயப்படையின் குண்டு வீச்சுக்கள், சொந்த வீடுகளைவிட்டு காடுகளில் தஞ்சம் புகுந்தவர்கள், பொருளாதாரத் தடைகள், அதன் விளைவாக வதைக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டு மாண்பிழந்து மானிட உருவமிழந்து வாழும் ஈழத் தமிழர்களின் சூழமைவைக் கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் அல்லது விடுதலை இறையியலில் ஆழமான புரிதலுடன் நோக்குகிறார். மனிதர் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டார் என வேதாகமம் கூறுகிறது. மனித சீரழிவுகளைச் சந்திக்கும் தமிழ் மக்கள் கடவுளுடைய சாயலா? அடிப்படை உரிமைகளை இழந்து தவிக்கும் தமிழ் மக்கள் மத்தியில் கடவுள் எல்லாருக்கும் பொதுவான தந்தையென்று எப்படிக் கூற முடியும்? என்பது இவரது தேடுதல். விடுதலை இறையியல் எழுப்பும் கேள்வியும் இதுதான்.

தமிழ் மானிடம் மாண்பிழந்து உருவிழந்து சீரழிந்து சிதைந்து நிற்கின்ற நிலையில் ஒரு கிறிஸ்தவர் கோட்பாடுகளுக்கு பிரமாணிக்கமாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிற மரபு இறையியலில் மட்டும் திருப்தி காணாமல், அதாவது *–திருச்சபை மரித்தோரை அடக்கம் செய்து, காயப்பட்டவர்களுக்குக் குணமளித்து, போரினால் பாதிக்கப்பட்டவர்களைப் பராமரிக்கும் அரச சார்பற்ற நிறுவனம் போல் இருக்காமல்,–* மாறாக *வன்செயல்களின் மூலகாரணிகளை இனம்கண்டு* அவைகளை ஒழிக்கின்ற, ஈடுபாட்டுச் செயலை எதிர்பார்க்கிற விடுதலை இறையியல் உண்மைகளை வேரோட்டத்துடன் உணர்த்துகிறார்.

இறைவனுடைய வார்த்தையும் அவர் கொடுக்கும் செய்தியும் அழைப்பும் அந்தரத்தில் இருந்து பூமிக்கு விழுவதில்லை மாறாக பொருண்மிய, சமூக, அரசியல், பண்பாட்டு வரலாற்று உண்மைகள் வழியாக வருகின்றன. இன்று நாம் சந்திக்கும் ஈழத்தமிழரின் எதார்த்தநிலைகள், இறைவன் செயற்படும் தளம் என்று கிறிஸ்தவர்களுக்கும், சிறப்பாகச் சிங்கள, தமிழ்த் திருச்சபைகளுக்கும் அறை கூவல் விடுக்கிறார்.

உண்மைதான் விடிவிக்கும் என்பது இவரது மூன்றாவது கருத்தம்சம். உண்மை நிலை தமிழர்களை மட்டு மல்ல சிங்களவர்களையும் விடுவிக்கும், இலங்கையை அழிவிலிருந்து காப்பாற்றும். இப் போராட்ட இறுதி வெற்றியின் அளவுகோல் ஆயுதப்பலமல்ல, ஆனால் நீதி.

தனது மக்கள் இஸ்ராயேலின் அடிமை வாழ்வின் அகோரத்தைச் சகிக்க முடியாமல் என் மக்களைப் போகவிடுங்கள்(யாத்திரை ஆகமம்)–என் மக்களை வாழவிடுங்கள்– என்று மோசேஸ் இறைவனிடம் முறையிட்டது போல் அடிகளாரும் 'என் மக்களை வாழவிடுங்கள்' என்று பன்நாடுகளுக்குச் சமாதான யாத்திரியாகப் பயணம் செய்து, தனது பன்மொழிப் பாண்டியத்தினால்–சிங்களம், ஆங்கிலம், யேர்மன், இத்தாலியம், பிரான்சு– நீதிக்குச் சாட்சியும், உண்மைக்குக் குரலும் எழுப்பி வருகின்றார். நீங்களும் குரல் கொடுக்க... இவ்வேட்டைப் பிரியுங்கள்... குரல் கொடுப்பீர்கள்!

13.07.97

*அ.பி.யெயசேகரம்*

Schützenstr 87
D-49084 Osnabrück

இயக்குனர் ஆன்மீகப் பணியகம் யேர்மனி
ஆசிரியர் தொடுவானம்

# முன்னுரை

ஈழத்தமிழ் மக்களின் நீண்டகால விடுதலைப் பயணத்தில், ஒரு தமிழ் மகனாகவும், கிறிஸ்தவக் குருவாகவும், நடந்து செல்வதில் நிறைவடைகிறேன். முதல் முப்பதாண்டுகள் எமது மக்களின் நீதிக்காகவும் உரிமைக்காகவும் கரிசனையுடன் அவதானித்ததன் பின், கடந்த பத்து ஆண்டுகளாக உரிமைகள் மறுக்கப்பட்டு மௌனிகளாக்கப்பட்ட எமது மக்களின் சார்பில் நீதிக்காகவும் சமாதானத்திற்காகவும் குரல் கொடுக்கும் குருவாகச் செயற்பட அருள் தந்த, இறைவனுக்கு நன்றி.

கடந்த இரு ஆண்டுகளும் ஈழத் தமிழரின் வரலாற்றில் மிகச் சோகம் நிறைந்த ஓர் காலமாகும். தாயகத்திலிருந்து உணவு, உடை, உறைவிடமின்றி, குண்டுகளின் பொழிவினால் துரத்தப்பட்டு, எமது மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக, அனாதைகளாக வாழ்ந்த காலத்தில், வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு நாம் அவர்கள் சார்பில் எழுப்பிய குரலையே இங்கு வார்த்தை வடிவத்தில் தருகின்றேன்.

முதலில், இந்தியாவில் நியு லீடர் என்ற கத்தோலிக்க கிழமைப் பத்திரிகைக்கு நான் **1996**ம் ஆண்டு ஒகஸ்ரில் அளித்த நேர்காணலின் தமிழாக்கத்தைத் தருகின்றேன். ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தில் திருச்சபையின் ஈடுபாட்டையும் நமது ஈடுபாட்டையும் விளக்கமுனைகின்றேன். அதைத்தொடர்ந்து ஐந்து உரைகளையும் இங்கு தருகின்றேன்:

கன்பெறா, அவுஸ்ரேலியத் தலை நகரில் **1996**ம் ஆண்டு யூன் கடைசியில் ***நீதியும் சமாதானமும்*** என்ற தலைப்பில் நடந்த சர்வதேச மகாநாட்டில், யாழ். குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் சார்பில், ***எமது மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்குப் போகவிடுங்கள்*** என்று ஓர் வேதனை நிறைந்த வேண்டுகோளை விடுத்தேன்.

லண்டன், பிரித்தானியத் தலை நகரில் **1996**ம் ஆண்டு செப்ரம்பர் 27–28ம் திகதிகளில், ***தமிழரின் சுயநிர்ணய உரிமை*** என்ற தலைப்பில் நடந்த சர்வதேச மகாநாட்டில், ***உண்மையே விடுதலை அளிக்கும்*** என்ற தலைப்பில், எமது மக்களின் உண்மையான உரிமைகளையும் நீதியான கோரிக்கைகளையும் உறுதியுடன் உரைத்தேன்.

நியூயோர்க், அமெரிக்காவில் **1996**ம் ஆண்டு நவம்பர் **9**ம் திகதி தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாவில், *சமாதானம் வேண்டுமாயின்*

*நீதிக்காக உழைக்க வேண்டும்* என்ற தலைப்பில், ஒரே தமிழ்த்தாயின் பிள்ளைகளாக, முன்னர்–பின்னர் குடியமர்ந்தவர்கள் வேறுபாடுயின்றி நீதிக்கும் சமாதானத்திற்கும் உழைக்கும்படி வேண்டினேன்.

சிக்காக்கோ, ஐக்கிய அமெரிக்காவில் 1997ம் ஆண்டு யூன் 1ம் திகதி தமிழ் சங்கங்கள் கூடி நடாத்திய மகாநாட்டில், *மௌனமாகச் சிறீலங்காவில் நிகழும் இன அழிவின் சாட்சி* என்ற தலைப்பில் சதிக்குட்படுத்தப்பட்ட ஈழத்தமிழரின் வரலாற்றையும் இன்றைய பயங்கர நிலையையும் நிரைப்படுத்தினேன்.

ஜெனிவா, சுவிற்சலாந்தில் 1997ம் ஆண்டு ஏப்பிரல் 4ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுவின் 53ம் அமர்வில் *ஈழத்தின் இடம்பெயர்வுகளும் மனித உரிமைமீறல்களும்* என்ற தலைப்பில் போரை நிறுத்திச் சமாதானம் ஏற்படுத்த சர்வதேச உதவிவேண்டினேன்.

இவை அனைத்தும் எமது திருமறையின் நோக்குடன் இசைந்ததென்பதை வெளிப்படுத்த, யாழ் தலத் திருச்சபையின் பேரில், தலைவி சந்திரிகாவிற்கும் தலைவர் பிரபாகரனுக்கும் விடுத்த மடலையும் இணைத்துள்ளேன்.

இவைகளை ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்க உதவிய பணி. எஸ். எவ். கிருபானந்தன் (லண்டன் கத்தோலிக்க பணியகம்), பணி. சா. நேசரட்ணம்(தமிழ்நேசன்,மன்னார்) அவர்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகுக. இவற்றை மேலும் ஒழுங்குபடுத்தி, அச்சிட்டு பல்வேறு நாடுகளில் இடம்பெயர்ந்து வாழ்ந்தாலும், தாய் நாட்டுப் பற்றுடன் வாழும் ஈழத் தமிழருக்கு, அறிமுகம் செய்ய உதவி செய்த ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக இயக்குனர் பணி. கலாநிதி பிரான்சிஸ் ஜெயசேகரம் அவர்களுக்கும், அவரின் உதவியாளர்கள் திரு ஜெயறூபன், திரு றோய் ரவீந்திரன், திரு சேவியர் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

உண்மைக்கும் நீதிக்கும் ஊற்றாகிய இறைவனின் சமாதானம்
எம் மத்தியில் தாமதமின்றி வருக!

லண்டன், 6. 1. 1997

*எஸ். ஜே. இம்மானுவேல்*

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தமிழ் விடுதலைப் போராட்டமும் தமிழ் திருச்சபையும். | 1 |
| 2. | எனது மக்களை அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரமாகப் போகவிடுங்கள். | 20 |
| 3. | உண்மை விடுதலையளிக்கும் | 39 |
| 4. | சமாதானம் வேண்டுமாயின் நீதிக்காக உழைப்போம். | 55 |
| 5. | தமிழ் மக்களின் மாபெரும் வெளியேற்றமும் சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல்களும் | 68 |
| 6. | சமாதானத்திற்காக யாழ். திருச்சபையின் கோரிக்கை | 73 |
| 7. | எனது நிலைப்பாடு | 81 |

# தமிழ் விடுதலைப் போராட்டமும் தமிழ் திருச்சபையும்

சென்னை, இந்தியாவிலிருந்து வெளியாகும் 'நியூ லீடர்' என்ற ஆங்கிலச் சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணல்.

## 1. தமிழர்களின் போராட்டம் எவ்வாறு கூர்ப்பமைடந்துள்ளது?

1948ல் பிரித்தானியரிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்தே தாம் பிறந்த நாட்டில் நீதியான, சுயதன்னாட்சி உரிமைக்கான தமிழர் போராட்டம் தொடங்கியது. தொடர்ச்சியாக வந்த பெரும்பான்மைச் சிங்கள அரசுக்களின் அரசியல், இராணுவ பதிலளிப்புக்கேற்ப தமிழர் போராட்டமும் பல படிமுறைகளைத் தாண்டி மாற்றம் பெற்று வளர்ச்சியடைந்துள்ளது.

1956இல் உச்சக்கட்டதிலிருந்த சிங்களத் தேசிய இனவாதத்தாலும், பௌத்த வெறித்தனத்தாலும் பதவிக்கு வந்த, தற்போதைய ஜனாதிபதியின் தந்தையார் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, தனிச் சிங்கள சட்டத்தை, பெரும்பான்மையான மக்கள் தமிழ் மொழி பேசிய வடக்கு கிழக்கு பகுதிகள் உட்பட, முழு நாட்டிற்கும் ஏக உத்தியோக மொழியாக ஆக்கினார். இப்போக்குடன் இணைந்து கல்வி, வேலை வாய்ப்பு, அபிவிருத்தி போன்றவைகளிற் தமிழர் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டனர். மேலும், பாரம்பரியமாகத் தமிழ்ப் பிரதேசங்களாக இருந்த வடகிழக்கில் அரச உதவியுடன் சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. (சிங்களப் பகுதிகளில் அரச ஆதரவிலான தமிழ் குடியேற்றங்கள் எதுவும் இல்லை.) இவ் வகைத் திட்டமிட்ட போக்கும், தொடர்ச்சியான அரசுகளின் தமிழர் விரோத நடவடிக்கைகளும் தமிழ் பிரச்சினையை வளர்க்க தொடர்ந்து எண்ணெய் வார்த்தன.

தமிழர் அனுபவித்த துன்பங்களையும், அவமானங்களையும் உணராது, தமிழர் பிறப்புரிமைக்காக விடுத்த கோரிக்கைகளையும், அவர்களின் ஜனநாயக முறைகளிலான எதிர்ப்பையும், சிங்கள மக்களின் தேசியவாத வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் எதிரானவையாக சிங்கள மக்கள் தவறாகப் புரிந்துகொண்டனர். தமிழர் குறைகளையும் கோரிக்கைகளை

யும் விளங்கிக் கொண்டு, தமிழ்த் தலைவர்களுடன் பாராளுமன்ற முறைக் கேற்ப ஜனநாயகமுறையில் உரையாடலைத் தொடங்காமல், தமிழர் எதிர்ப்புணர்வை ஆயுதத்தால் அழிக்கவும், அடக்கவும், இராணுவ காடைத்தனப் பலத்தைப் பாவித்தனர். **1961ம்** ஆண்டு டிசம்பரில் தமிழ்த் தலைநகரான யாழ்ப்பாணத்தில் அமைதியாக நடந்த தமிழ்ச் சத்தி யாக்கிரகத்தைத்தன்னும் சிங்களப் படையினர் நள்ளிரவில் அடித்து உதைத்துக் குழப்பினர்.

அரசினால் கட்டுப்படுத்தப்படாத அல்லது கடிவாளம் போடப்படாத இராணுவ ஒழுங்கீனம், தமிழ்ப் பகுதிகளில் அரச பயங்கரவாதம் என்ற மிகக்கேடான நிலைக்குச் சென்றது. அரச பயங்கரவாதத்தின் அழிவைக் கட்டுப்படுத்தும் பதிலளிப்புக்கு அவசிய தேவையாக தமிழ்த் தீவிரவாதம் பிறந்தது. இன்றைய ஜனாதிபதி இவ் உண்மையை இப்போதுதான் ஏற்றுக் கொண்டுள்ளார்.

சிங்களம் மட்டும் என்ற கொள்கையுடைய சிறீலங்கா சுதந்திரக் கட்சியை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆதரித்த தமிழர்களுக்கு எதிராகவும், தமிழர் நலனுக்கு எதிராக செயற்பட்ட தமிழ் அரசியல்வா திகளுக்கு எதிராகவும்தான் தமிழ்த் தீவிரவாதம் முதன்முதலில் தோன்றியது. பின்னர், அப்பாவித் தமிழ் மக்களைக் கொலை செய்யும், அவர்கள் உடமைகளைக் கொள்ளையடிக்கும், வடக்கில் நிலைகொண்ட ஒழுங்கற்ற இராணுவத்துக்கு எதிராக இத் தீவிரவாதம் நெறிப்படுத்தப் பட்டது. அரச உதவியுடன் நீண்டகாலம் திட்டமிடப்பட்டு தமிழ்ப் பிரதே சங்களில் உருவாக்கப்பட்ட சிங்கள குடியேற்றத்தையும், அதன் ஆயுதம் தாங்கிய ஊர்காவற்படையையும் தாக்கும் நோக்குடன் தொடர்ந்து செயற்பட்டது. தொடக்கத்தில் தமிழ்க் குடியேற்றங்களாக இருந்த கிரா மங்களில் உள்ள தமிழர்களை சிங்கள இராணுவம் பலவந்தமாக வெளி யேற்றிவிட்டு, அவ்விடங்களை சிங்களக் குடியேற்ற வாசிகளுக்குக் கொடுத்தது. இதை எதிர்த்தே தமிழ்த் தீவிரவாதம் எல்லைக் கிராமங் களிற் செயற்பட்டது.

அரச படைகளின் பயங்கரத்துக்கும், காட்டிக் கொடுப்போருக்கும் எதிராக ஆரம்பிக்கப்பட்ட கொரில்லா தாக்குமுறை இன்று அரச படைக ளுக்கும் புலிகளுக்கும் இடையிலான முழு நேரப்போராக மாறியுள்ளது. தமிழ் விடுதலைப் புலிகளை அழித்துவிட அரசு முயற்சிப்பதோடு, முழுத் தமிழ் மக்கள் மேலும் தனது அநீதியான ஒடுக்குமுறையையும், அடக்கு முறையையும் அரசாங்கம் அதிகரிக்கின்றது. இப்போரானது புலிகளுக்கு

எதிரானது மட்டும் என்று அரசு கூறிக்கொண்டாலும் முழுத் தமிழ் மக்கள் மீதும் திணிக்கப்பட்ட மனிதமற்ற அழிவும், பொருளாதாரத் தடைகளும் தமிழ் மக்களை படிப்படியாக இன ஒழிப்பு நிலைக்கு இட்டுச் செல்லுகின்றது. கடந்த 13 வருடங்களாக ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் சுயநிர்ணயத்திற்காகப் போராடும் போராளிகளின் இறப்பைவிட, தமிழ் மக்களின் கழுத்தை நெரிக்கும் பொருளாதாரத்தடை, தொடர்புச் சாதனங்கள், போக்குவரத்து, கல்வி, சமூக வாழ்வு மீதான மறுப்புகள் இவை எல்லாம் ஒட்டு மொத்தத்தில் படிப்படியான இன அழிப்பு அன்றி வேறு என்ன என்று நான் கேட்கவிரும்புகின்றேன்? ஆகையால் தங்களின் அடிப்படை மனித உரிமைகளுக்கான தமிழர் போராட்டம், இன்று அவர்கள் உயிர்தப்பி வாழ்வதற்கான மக்கள் போராட்டமாக மாறியுள்ளது.

*ரிவிரேசா–I* என்று குறியீட்டுப் பெயரில் 1995 ஒக்ரோபர் இறுதியில் தொடங்கிய இராணுவ அழிப்பு நடவடிக்கையானது, வரலாற்றுப் புகழ்மிக்க யாழ்ப்பாணத் தலைநகரிலிருந்து 500,000 தமிழ் மக்களை இரவிரவாக இடம்பெயரவைத்தது. சிங்கள ஆக்கிரமிப்பின் அடையாளமாக யாழ்ப்பாணம் மீது சிங்கக்கொடியை சிங்கள இராணுவம் ஏற்றியது. இவையனைத்தும் அரசின் ஏகாதிபத்திய உள்நோக்கத்தை நிரூபித்ததோடு, தமிழர்களின் உள்ளத்தையும் உணர்வையும் கடினமாக்கியது, விடுதலைத் தாகத்தை உறுதிப்படுத்தியது.

தமிழர்கள் சந்திரிக்காவின் புதிய அரசு போரை நிறுத்தி சமாதானத்தைப் பேசும் என்று பாரிய நம்பிக்கையைப் பேணினர், ஆனால் அவர்கள் விரைவாக ஏமாந்து போனார்கள். முன்பு ஒருபொழுதும் இல்லாதவிதமாக தற்போது தமிழர்கள் இன அடிப்படையில் நெருக்கப்படுகின்றனர், அவமானத்துக்கும், சந்தேகத்துக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

1996ம் ஆண்டு ஏப்பிரல் 19ம் திகதி *ரிவிரேசா*–II என்ற குறியீட்டுப் பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை, யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மயானக்காடாய் கிடந்த யாழ்ப்பாணத்தினுள் வலுக்கட்டாயத்துடன் மீளப்புகுத்தும் உள்நோக்கத்தைக் கொண்டது. இது மனித உரிமையின் இன்னுமொரு மீறலாகும்.

அரசின் கடும் செய்தித் தணிக்கை, 1996ம் ஆண்டு ஏப்பிரல் 19ம் திகதிக்குப் பின்னர் என்ன நடந்தது என்பதை உலகம் ஒருபோதும் அறியா வண்ணம் இருட்டடிப்புச் செய்துள்ளது. ஆனால் நடந்தது

என்ன? யாழ் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்கள், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டிலிருந்த பெரும் வன்னி நிலப்பரப்புக்குள் தப்பிப்போகாமல் தடுப்பதற்காக, விமானத் தாக்குதலாலும், எறிகணைத் தாக்குதலாலும் கிளாலிக் கடற்கரையில் இருந்த நூற்றுக் கணக்கான படகுகளை அழித்தனர், அக்கரைகளுக்கு விரைந்து திரண்ட பல்லாயிரக்கணக்கான மக்களை விரட்டியடித்தனர். இதில் இராணுவம் வெற்றிகண்டது. இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்ட மக்களுக்கு, யாழ்ப்பாணம் திரும்புவதைவிட வேறு வழியிருக்கவில்லை. மக்களற்ற நகரைக் கைப்பற்றி சிங்கக் கொடி ஏற்றியதால் *ரிவிரேசா–I*ல் ஏற்பட்ட தோல்வியை மூடிமறைக்கவும் தமது ஆட்சியைச் செயற்படுத்தவும் அரசு கெடுநோக்குடன் மக்களை யாழ்ப்பாணத்துக்குள் உள்ளிழுத்துக் கொண்டது.

புலிகள் அற்ற பிரதேசமாக யாழ்ப்பாணத்தை உறுதிசெய்ய இராணுவம் பல தொடர்ச்சியான தடுப்புகளையும் விசாரணைகளையும் சிறப்பாக இளம் ஆண்கள், பெண்கள்மீதும் செயற்படுத்துகின்றது. மக்களை இராணுவ கட்டுப்பாட்டு முகாம்களுக்குள் வைத்திருந்தபோதும், வீதிகளில் சடலங்கள் காணப்படுகின்றன. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக, இராணுவத்துக்கு உதவ வந்த மற்றைய தமிழ் குழுவினர், பல தமிழ் இளைஞர் யுவதிகளை தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எனக் குற்றஞ் சாட்டி பழிவாங்குகிறார்கள். கடுமையான செய்தித் தணிக்கையிட்டு யாழ்ப்பாணத்தைப் பத்திரிகையாளர்களிடமிருந்து மறைத்து விட்டு, இராணுவமும் அதன் உதவிக்குழுக்களும் அகோரமான மனித உரிமை மீறல்களில் செயற்படுகின்றனர். சிறீலங்காப்படையிடம் எதனை எதிர்பார்க்க வேண்டும் என்று தமிழர்கள் அனுபவத்தால் அறிந்திருக்கின்றனர். அறுபதாம் ஆண்டுகளில் நடந்தது போல் எதிர்காலத்திலும் பல பிரபாகரன்கள் தோன்ற இன்றைய சம்பவங்கள் விதை தூவுகின்றன.

## 2 இனப் பிரச்சினைக்கு சிறீலங்காத்திருச்சபை எவ்வாறுபதிலளிக்கின்றது? எவ்வாறு பதிலளிக்க வேண்டுமென நீங்கள் எதிர்பார்க்கின்றீகள்?

ஏறக்குறைய கடந்த முப்பது ஆண்டுகளாக,(1956–1983), சிறீலங்கா திருச்சபை தமிழர் பிரச்சினையை வெறும் அரசியல் பிரச்சினையாகக் கருதி, தன்னை அப்புறப்படுத்தி நடந்தது. தமிழர்கள் உயிரையும்,

உடமைகளையும் பெருமளவில் இழந்தபோதும் அவ்வழிவுகளை திருச் சபை மேலெழுந்த வாரியாகப் பார்த்தது. அவை தவறாக வழிநடத்தப்பட்ட சில குண்டர்களின் செயலெனச் சிங்களத் திருச்சபை கொடுத்த வியாக் கியானத்தைத் தமிழ்த் திருச்சபையும் எதிர்ப்பின்றி ஏற்றது. இப்பிரச்சினைபற்றி எந்தவித பொறுப்பான மீளாய்வோ, விமர்சனமோ, முயற்சியோ எடுக்கப்படவில்லை. அரச படைகளின் செயல்களை விமர்சிப்பதிலிருந்து திருச்சபை தன்னைத் துார விலக்கிக்கொண்டது. ஒவ்வொரு தமிழருக்கெதிரான கலவரத்திலும், கத்தோலிக்க நிறுவனங்களில் தஞ்சம் புகுந்த தமிழர்களுக்கு பாதுகாப்பும் உணவும் உதவியும் அளித்தது.

ஆனால் தமிழர்மேல் இழைக்கப்பட்ட அழிவையும் அநீதியையும் பற்றிக் கிறிஸ்துவின் திருச்சபை எழுப்ப வேண்டிய கேள்விகளுக்குத் தேவை யான உறுதியையும் உறுதிப்பாட்டையும் சிறீலங்கா திருச்சபை கொண்டி ருக்கவில்லை. அது மட்டுமல்ல. தமிழருக்கு எதிராக நீண்ட காலமாக வளர்ந்து வரும் அநீதிகள் சிறீலங்கா திருச்சபையின் செயற் திட்டத் தில் இன்னும் முன்னுரிமை பெறவில்லை.

பாரிய இனக்கலவரத்தின் ஒரு வருடத்தின் பின், 1984ம் ஆண்டு யூலை மாதம், திருச்சபை வெளிக்கொணர்ந்த மேய்ப்புப்பணி மடலில் தமிழ ருக்கு எதிரான வன்முறையைக் கண்டித்து, ஒருமைப்பாடு, இறைமை, ஒற்றுமை ஆகியவற்றிற்கு தீங்கு விளைவிக்காமல், கூட்டாட்சி அரசியலமைப்பில் அரசியல் தீர்வை தேடவேண்டும் என ஆலோசனை கூறியது. இம்மடல் திருத்தந்தையின் பாராட்டையும் அங்கீகாரத்தையும் பெற்ற போதிலும், பெரும்பான்மை மக்கள் மட்டத்திலோ, அல்லது திருஆட்சியாளர் மட்டத்திலோ, எந்தவித செயற்பாட்டையோ, உறுதிப் பாட்டையோ இது ஏற்படுத்தவில்லை. நீதிக்கான உறுதியான துணி வான குரலாகவோ அல்லது சமாதானத்தின் இறைவாக்குத்தன்மையு டைய சேவையாளராகவோ திகழவிரும்பாமல், திருச்சபை மரித்தோரை அடக்கம் செய்து, காயப்பட்டவருக்கு குணமளிக்கும் அமைப்புப் போல், அதாவது, போரினால் பாதிக்கப்பட்டவருக்கு வெளிநாட்டு உதவியுடன் உணவூட்டி, உடை கொடுத்து, இல்லிடம் வழங்கி, மருந்திடும், அரச சார்பற்ற செஞ்சிலுவை நிறுவனம் போல் திருச்சபையும் இருக்க விரும்புகிறது.

திருச்சபை சிறுபான்மையாக இருந்தபோதிலும், பெரும்பான்மையான சிங்கள பௌத்தரையும் சிறுபான்மையினரான தமிழ் இந்துக்களையும்

உரையாடலுக்கு தொடர்பு படுத்தி சமாதானத்தை உருவாக்கும் வளமும் அமைப்பியலாற்றலும் கொண்டுள்ளது. ஆனால் உலகின் ஏனைய நாடு களின் மதத் தலைவர்களில் காணப்படும் இறைவாக்குப் பலம் இல்லாது, நீண்டகாலமாக நிறுவன மயப்பட்ட வாழ்வில் இருந்ததினால், அதிகாரத் திலுள்ள அரசின் உதாரதன்மையிலும், பெரும்பான்மையான பௌத்த ரின் பயத்திலும் வாழ்கின்றது.

வன்முறைக்கு எதிராக ஒரு விரலையும் அசைக்காமல், வாய்ப்பேச்சில் மட்டும் பெரியளவில் அதைக் கண்டிப்பது வெறும் பரிசேயத்தனமானதும், வெளிவேடத்தனமானதுமாகும். இதைத்தான் பல திருச்சபைத் தலைவர் கள் செய்கிறார்கள். இதில் பெருமை கொள்ளுகின்றனர், சுயநிறைவடை கின்றனர். இது முறையல்ல. வன்செயல்களின் மூல காரணிகளை இனங்கண்டு, அவைகளைக் கண்டித்து அவைகளுக்கெதிராகத் துணிவு டன் வாதாடவேண்டும். தமிழ்மக்களை நீண்டகால அழிவுக்கும், துன்பத் துக்கும் உள்ளாக்கி அதனால் அவர்களையும் வன்செயலுக்கு இட்டுச் சென்ற ஒடுக்குமுறைகளையும் அநீதிகளையும் அகற்றுவதே இன்றைய முக்கியமான தேவையாகும்.

மேற்குறிப்பிட்ட மடலில் முரண்கையின் விளைவுகளை ஓரளவு ஆராய்ந்து, இனப்பிரச்சினையின் தீர்வாக கூட்டாட்சித் தீர்வுக்கு மறைமுகமாக ஆதரவு நல்கியது. ஆனால் **1995** ஒகஸ்ரில், அனர்த் தங்கள் அதிகரித்திருந்த பொழுதிலும், தமிழருக்கெதிரான போரை மூடிமறைக்க ஜனாதிபதி அரசியற்தீர்வு என்று முன்வைத்த தீர்மானங் களை விழுந்தடித்து ஆதரித்தது. இன்றைய பொது ஜனநாயக முன்னணி அரசின் மற்றைய பங்காளிகளான கொழும்பைத் தளமாக வைத்துள்ள தமிழ்க்கட்சிகளும் இத்தீர்வை ஆதரித்தன. என்ன தொடர்கிறது? அரசியற்தீர்வு அல்ல, அப் போர்வையில் போர் நீடிக்கின்றது.

சிங்கள பௌத்த தீவிரவாதிகளின் எதிர்ப்பு வலுப்பெற்றதனால், சட்ட வாக்க நிலையிலிருந்த தீர்வுப்பொதி ஒடுக்கப்பட்ட தமிழர் சார்பாகவு மின்றி, தொடரும் தீமையான போருக்கு எதிராகவு மின்றி, நாட்டின் ஐக்கியம், ஒருமைப்பாடு, அரசின் பாதுகாப்புக்கருதி குறைக்கப்பட் டுள்ளது.

தற்போதைய திருத்தந்தை முழு உலகுக்கும், சிறப்பாக சிறீலங்காத் திருச்சபைக்கும், சமாதானம் வேண்டுமானால் நீதிக்காக உழைக்க அறைகூவல் விடுத்தார். சிறீலங்காவிலுள்ள நாம் வன்செயலை எதிர்த்து

அறிக்கை வெளியிட்டுள்ளோம், அகதிகளுக்கு வெளிநாட்டு உதவி களைக் கொடுத்துள்ளோம், ஆனால் சமாதானத்துக்கான நீதியின் பெயரில் உண்மையான துணிவுடன் இணைப்பை ஏற்படுத்தும் முயற்சி கள் செய்யவில்லை. ஆகையால் திருச்சபை விரும்பும்வது நீதியின்மேல் கட்டப்பட்ட நிலையான சமாதானமாகத் தோன்றவில்லை. ஏதோ பொதுவாக மக்களும், சிறப்பாகத் திருச்சபையும், தங்கள் வழமையான வாழ்க்கையை நடாத்த ஏதுவான ஒரு போர் நிறுத்தம் போதுமென்றாற் போல் தோன்றுகின்றது.

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பகைமை நிறுத்தம் முடிவுக்கு வந்த அதே நாளில் (19.4.1995) ஆடம்பரமாக ஆரம்பிக்கப் பட்ட இலங்கைத் திருச்சபையின் வரலாற்றுப்புகழ்மிக்க தேசிய மேய்ப் புப்பணி மகாநாட்டில், இலங்கையிலுள்ள திருச்சபை சமாதானம் செய்யும் திருச்சபையாக மாற வேண்டுமென்று உற்சாகத்துடனும், முழு மூச்சுட னும் தீர்மானம் எடுத்தது. ஒரு தலைப்பட்சமான பார்வையையும் பயத் தையும் அகற்றவும், பிளவுபட்ட இருபகுதியினரிடையே தொடர்பாளர் களாகவும், உண்மையை அறிவிப்பவர்களாக மாறவும் தமிழ்—சிங்கள கத்தோலிக்கர் அனைவருக்கும் அறைகூவல் விடுத்தது. ஆனால் நடைமுறையில் ஒன்றும் செய்யப்படவில்லை.

உண்மையில் தெற்கிலுள்ள திருச்சபையானது அரசு 'சமாதானத்துக் கான போர்' என்று வெளியிட்ட போது இரத்த தானம், பண உதவி போன்ற மறைமுக ஆதரவைத் தெரிவித்தது. ஆனால் வடக்கிலுள்ள திருச்சபையானது ஜனாதிபதிக்கும் பிரபாகரனுக்கும் அனுப்பிய கடிதங் களில் போரையும் வன்செயலின் எல்லா வடிவங்களையும் எதிர்த்ததோடு, சமாதானத்துக்கு அழைப்பும்விடுத்தது. இதன் மூலம் யார் போருக்கு, யார் சமாதானத்துக்கு சாதகமாகச் செயற்படுகின்றனர் என்பது தெளிவாகப் புரிகின்றது.

இவ் வளர்ச்சியின் பின்னணியில் நாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப் பாட்டையும் பேண வேண்டுமானால் சலுகைகள் அளிப்பதனால் அல்ல, அதற்குமாறாக சிங்கள, தமிழ் இனங்கள் சம உரிமையோடு வாழ வழி செய்ய வேண்டும் என்று பல தமிழ்க் கிறிஸ்தவர்கள் உறுதியாக உள்ள னர். பொதுவாகத் தமிழர்களும் சிறப்பாகத் தமிழ்க் கிறிஸ்தவர்களும் *மையப்படுத்தப்பட்ட இறைமையின் கீழ் பரஸ்பர எதிர்ப்புணர்வுடனும் பயத்துடனும் வாழாமல், ஒரு நாட்டில் இரு தேசிய இனங்களாக,*

*நாட்டைக் கட்டியெழுப்புவதில் சமாதான ஒருமைப்பாட்டுடன் அன்பில் வாழ்வது நல்லது என நினைக்கின்றார்கள்.*

இத் தீவைச் சமாதான சொர்க்கமாக உருவாக்கத் தமிழரும் சிங்களவரும் தத்தம் வளங்களை ஒருங்கிணைத்துச் சமாதானத்துடன் வாழலாம் என நான் உறுதியாகவுள்ளேன். ஒருவர் மேல் இன்னொருவர் ஆதிக்கம் செலுத்துவதல்ல, மாறாக ஒன்றித்து வாழப் புரிந்து கொள்ளவேண்டும். ஒரு காணியில் அடுத்தடுத்த வீடுகளில் வாழும் குடும்பங்கள் போன்று, உரிமையுடனும் மாண்புடனும் முதிர்ச்சியடைந்த இரு இனக்குழுக்களாக தங்கள் இனத்தை, சமூகத்தை செயற்படுத்த ஒப்புக்கொள்ளவேண்டும்.

சமாதான ஒருமைப்பாட்டிற்கும் ஒத்துழைப்பிற்கும் எதிரானவர்களை இரு வகைப் படுத்தலாம். ஒன்று, எல்லாவகை வரலாற்றையும் மறுத்து முழு நாடும் சிங்கள பௌத்தருடையது, என்றென்றும் அப்படியே இருக்கும், எனவே தமிழருக்கு சம உரிமையோ, ஒரு அடி நிலமோ கூட கொடுக்க முடியாது என எண்ணும் சிங்களப்பௌத்த தீவிரவாதிகள். மற்றவர்கள், பெரும்பாலும் கிறிஸ்தவ ஆதிக்கத்தால் தூண்டப்பட்டவர்களும் ஆங்கிலக் கல்வி கற்று, அரசாங்கப் பணியேற்று தலை நகரில் பரம்பரையாக வாழ்ந்து வருபவர்கள், காலனித்துவ ஆட்சியாற் தொடங்கப்பட்ட மத்திய நிர்வாகம் நாட்டின் ஓரத்திலுள்ளோர்க்கு அநீதி விளைவித்தாலும், தங்களின் வாழ்க்கைமுறைக்கு ஒத்துப் போவதாக இருப்பதால் இவ் வமைப்பு தொடரவேண்டும் என எண்ணுபவர்கள். முன்னைய வரலாற்றில், பிரித்தானிய காலனித்துவ நிர்வாகத்தை முழு நாட்டிலும் வலிந்து புகுத்தக் கருவியாக இருந்து செயற்பட்ட கிறீஸ்தவர்களும் கிறீஸ்தவ நிறுவனங்களும் மீளவும் ஒரு முறை தமிழருக்கு எதிராகச் சிங்கள அரசாங்கம் எடுக்கும் முயற்சியில் கருவிகள் ஆகிவிடுவார்களோ என்று பயப்படுகின்றேன். தமிழருக்கு நீதியை மறுத்தாலும் கூட இந்தப் பாரம்பரிய அமைப்பைப் பேணவே திருச்சபைத் தலைவர்கள் விரும்புகின்றனர் போல் தோன்றுகின்றது.

**3. நீங்கள் அதிகமாக தமிழர்நலனை முன்வைத்துப் பணியாற்றுகிறீர்கள். ஆனால் உங்களின் இந்த நிலைப்பாட்டைப் பலர் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் ஆதரவான நிலைப்பாடாகத் திரித்துக் கூறுகின்றனர். உங்கள்கருத்து என்ன?**

ஆம், என்னைப் பொறுத்த மட்டில், ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் கோரிக்கைகள் நீதியானவை என்பதினால் அதிக அக்கறை காட்டுகிறேன். கடந்த நாற்பது வருடங்களாக என் போன்ற தமிழருக்கு எதிராக, பிறந்த நாட்டிலேயே சிங்கள அரசுகள் செயற்படுத்திய மனிதமற்ற அநீதியான ஒடுக்குமுறைகளை நான் எதிர்க்கிறேன். நான் கிறிஸ்தவனும் ஒரு கத்தோலிக்க குருவும் என்றமட்டில், நீதியானவற்றை ஆதரிக்கவும் அநீதிக்கெதிராகக் குரல்கொடுத்துக் கண்டிக்கவும், பல வடிவமெடுக்கும் ஒடுக்குமுறைகளுக்கெதிராகப் போராடவும் கடமைப்பட்டிருக்கிறேன். அதைவிட வேறு சரியான வழி இல்லை என்று நான் நம்புகின்றேன்.

நான் ஒரு இனவாதியல்ல. சிங்களவர் மத்தியிலோ, அல்லது தமிழர் மத்தியிலோ அநீதிகள் தலை காட்டும் பொழுது, நாம் குறுகிய இனவாதத்திற்குள் செல்லாமல், அவைகளை எதிர்க்க வேண்டும். அவைகளுக்கெதிராகப் போராட வேண்டும். எல்லா விதமான ஒடுக்கு முறைகளுக்கெதிராகவும், எல்லா மட்டத்திலும், சமூக (சாதியமைப்பு) அரசியல் (மனித உரிமை) பொருளாதர (திறந்த பொருளாதரம், லஞ்சம், ஊழல்) போன்ற அநீதிகளுக்கு எதிராகவும், ஒவ்வொரு கிறிஸ்தவனும் குருவும், அது தமிழனாகவோ அல்லது சிங்களவனாகவோ இருந்தாலும் எதிர்த்துப் போராட வேண்டுமென நான் எதிர்பார்க்கின்றேன். ஏழை ஒதுக் கப்பட்டவர்களுக்கு நீதி கோரும் போராட்டத்தில் பல கிறீஸ்தவர் முன்நின்றனர், இன்றும் முன்நிற்கின்றனர். தென்னிலங்கையில் மறைந்த குரு மைக்கல் ரொட்றிகோ, மறைந்த ஆயர்கள் லீயோ நாணயக்கார, லக்ஷ்மன் விக்கிரமசிங்க, இன்று போராடிக்கொண்டிருக்கும் குருக்கள் ரிஸ பாலசூரிய, போல் கஸ்பஸ், ஒஸ்வல்ட் வேர்த் அவர்களும், வடக்குக்கிழக்கில் மறைந்த குருகள் மேரி பஸ்ரியன், சந்திரா பெர்னான்டோ, டொனால்ட் கனகரட்னம் போன்றவர்களும் போற்றத் தகுந்தவர்கள். ஆனால் இத்திசையில் உண்மைக்கும் இன நீதிக்கும் பல இக்கட்டுகள் எதிர்ப்புகள் மத்தியில் இன்னும் செய்ய வேண்டிய பணிகள் எவ்வளவோ இருக்கின்றன.

தமிழ் மக்களின் இப்போதைய தலைமைத்துவமான தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், தமிழரின் உரிமைகளைத் தெளிவாகவும் திடமாகவும் கூறுவதனால், அதே உரிமைகளைக் கூறும் மற்றவர்களையும் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளுக்கு சார்பானவர்கள் என முத்திரை குத்துவது இலகுவானது. நான் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய தொடர்பு உடையவனல்ல, அவர்கள் பேரிலோ, அவர்கள் சார்பாகவோ பேச நான்

முன்வரவில்லை. எனது சிங்கள சகாக்கள் கொழும்பிலுள்ள அரசை ஏற்றுக்கொள்வதுபோல் நானும் வடக்கில் வாழும் தமிழன் என்ற மட்டி லும் கத்தோலிக்க குரு என்றமட்டிலும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்கிறேன். மக்களோடு இணைந்து இனப் பிரச்சினையின் மத்தியில் வாழ்ந்த ஒரு சில கத்தோலிக்க குருக்களில் நானும் ஒருவன் என்பதையிட்டுப் பெருமை அடைகின்றேன். எனது பல்கலைக்கழக நாட்களிலும், பிற்பாடு குருத்துவப் பணிவாழ் வுக்கு முன் ஏரிக்கரைப் பத்திரிகை நிருபராக கடமையாற்றியபோதும் பெற்ற அனுபவங்கள், வரலாற்று உண்மைகளும் என்னை உறுதிப்படுத்த வழிவகுத்துள்ளன.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் சார்பானவன் என்றால் விடுதலைப் புலி கள் செய்வது எல்லாவற்றையும் கண்மூடித்தனமாக ஆதரிக்கிறவன் என்று என்னை அர்த்தபடுத்தினால் அது பெரும் தவறு, அநீதியானது. ஆனால், தமிழினத்தால் 1977 பாராளுமன்ற தேர்தலில் அமோகமாக ஆதரிக்கப்பட்டு பின்பு புலிகளினால் வற்புறுத்தப்பட்டு வரும் தமிழ் உரிமைகளை, தமிழரின் சுயநிர்ணய உரிமை, நாட்டினம், பிரதேசசு யாட்சி, தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களைப் பாதுகாத்தல் இவை போன்ற உண்மைகளை எடுத்து வாதாடுபவன் என்று அர்த்தப்படுத் தினால், ஆயிரக்கணக்கான தமிழர்கள் போல், நானும் அப்படியான ஒருவன் என்று சொல்வேன்.

1996ல் யாழ் திருச்சபையின் சார்பில் ஆயர், குருக்கள், துறவற சபையி னர் விடுத்த அறிக்கையொன்று போரையும் மற்றைய வன்செயல்களை யும் மனித உரிமை மீறல்களையும் கண்டித்தன. அதே வேளையில் தமிழர் களின் மேற்கூறிய அத்தனை கோரிக்கைகளையும் நீதியானதென ஆதரித்தது. ஆகையால் வடக்குத் திருச்சபை தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் சார்பானவர்கள் என்று தெற்கிலுள்ள சிங்களத் தேசியவாதி கள் சொல்லலாம் .

இச்சாடுதலின் மறுபக்கத்தில் இருக்கும் உண்மையைக் குறிப்பிடுவது நல்லது என நான் எண்ணுகிறேன். தமிழினப் போராட்டத்துக்காக எழுபவர்கள் அனைவரையும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் சார்பானவர் கள் என்று முத்திரை குத்தினால், அதன் அர்த்தம் என்ன? உண்மையில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்தான் வடக்குக் கிழக்கில் தற்போதைய தலைமைத்துவம்: அவர்கள்தான் நீண்டகாலமான தமிழ்ப் போராட்டத் தின் தற்போதைய கட்டத்தைத் வழி நடத்துகின்றனர் என்பதே.

நான் மேலே விளக்கமாகக் கூறியபடி, தமிழரின் அடிப்படையான கோரிக்கைகளும் தமிழர் போராட்டமும், விடுதலைப் புலிகளின் போராட்டத்தை விட நீண்டகால வரலாறு உடையது. மாறிமாறி ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்களின் நடைமுறைகள் ஜனநாயகத்திற்கொவ்வாத மனிதமற்ற இராணுவ ஒடுக்குமுறைகளைக் கையாண்டு, அரச பயங்கரவாதமாக மாறியதால், தமிழ்ப் போராட்டமும் இராணுவக் கட்டத்தைத் தாண்டியது. அரசானது தனது போர்த்திட்டத்திற்கு சர்வதேச ஆதரவையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்ள, தமிழ்ப் பிரச்சினையை வெறும் பயங்கரவாதம் என தனக்குச் சாதகமாக முத்திரை குத்தியது. அடிப்படையான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அல்லது மத்தியஸ்தம் வகிக்க சர்வதேச முயற்சிகளை நிராகரித்து விட்டு, பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட பணத்திற்கும், ஆயுதங்களுக்கும் தொடர்ந்து பிச்சை எடுக்கிறது, எல்லாத் தமிழர்களும், சிறப்பாகத் தெற்கில் இருப்போரும் இந்த அரசின் வெற்றிக்கு ஆதரவளித்தவர்கள் கூட, தமது மௌனத்தால் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு சார்பாக இருக்கின்றார்கள் என்று ஜனாதிபதியே குற்றம் சாட்டுகின்றார்.

## 4. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் செயற்பாட்டு வடிவம் குறித்து உங்கள் கருத்து என்ன?

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் செயற்பாட்டு வடிவம் பெரும்பாலும் இரு அம்சங்களாற் தீர்மானிக்கப் படுகின்றது. ஒரு பக்கத்தில் தமிழர்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க, முதல் முப்பதாண்டுகளாக **(1956–1983)** ஜனநாயக ரீதியான அகிம்சைப் போராட்டத்தினால் தமிழ்க் கட்சிகளுக்கு ஏற்பட்ட பயனற்ற விரக்திநிலை. மறுபக்கத்தில் அப்பாவித் தமிழர்களுக்கு எதிராகச் சிங்களப் பொதுமக்களினால் ஏற்படுத்தப்பட்ட அழிவுக்குரிய இனக் கலவரங்களின் வளர்ச்சியோடு தமிழ்ப் பகுதிகளிற் செயற்படுத்தப்பட்ட அரச பயங்கரவாதத்தின் கொடூரமும் இருந்தது.

தமது உரிமைகளை வென்றெடுக்க நீண்டகால ஜனநாயக அகிம்சைப் போராட்டத்தின் பின், கட்டுப்பாடற்ற சிங்கள–அரச பயங்கரவாதம் கட்டு மீறி வளர்ந்ததினால், கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் எதிர்காலமில்லாத தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். நான் ஒரு கிறிஸ்தவன் என்றமட்டிலும் மதகுரு என்றமட்டிலும், வன்முறையை கண்டிக்கிறேன். நோக்கை அடைய வன்முறை ஏற்ற ஒரு வழி அல்ல, இருப்பினும் இராணுவத்தினதும் இனத்துவேசிகளினதும் பயங்கரவாதத்திற்கு எதிராக ஆயுதம் எடுத்து: தற்காப்பின் உச்ச நிலைக்குத் தமிழ்

இளைஞர்கள் தள்ளப்பட்டுள்ளதை நான் தெளிவாக விளங்கிக் கொள் கிறேன். ஆகையினால், ***தமிழ்த் தீவிரவாதம் என்பது சிங்கள–அரச பயங்கரவாதத்தின் எதிரொலியாகும்.*** இருபக்கமும் மடிகின்ற உயிர்கள் மட்டில், சிறப்பாகத் தாம்பிறந்த நாட்டுக்காக உயிரைக் கொடுக்கின்றோம் என எண்ணி மடிபவர்கள் மட்டில், நான் அனுதாபப்படுகின்றேன். இவை அனைத்திற்கும் காரணமான சிறீலங்கா அரசின் அரக்கத்தனமும் பிடி வாதமும் கண்டிக்கப்படவேண்டியது. சிறீலங்கா அரசுதான் குற்றவாளி.

கடந்த முப்பது ஆண்டுகளாக சிங்களக் காடையினர் அப்பாவித் தமிழர்கள்மேல் கைவைத்த போது அருகிலிருந்த அரச படையினர் தமிழருக்கு உதவி வழங்கவுமில்லை, அதைத் தடுக்கவுமில்லை. ஆயுதம் ஏந்தாத அப்பாவித் தமிழர் தாம் பிறந்த நாட்டில் தங்களின் அடிப்படை மனித உரிமைகளைக் கேட்டபொழுது தமிழ்ப் பகுதிகளில் இருந்த அரச படையினர் தொடங்கிய வன்முறை எண்பதுகளில் உச்ச நிலையை அடைந்தது. இது பற்றி அரச கட்டுப்பாட்டுக்குட்பட்ட கொழும்புத் தொட ர்புச் சாதனங்கள் இருட்டடிப்புச் செய்தன. ***அரச வன்செயலை தடுக்க "வன்செயலுக்கு எதிர் வன்செயல்தான்'' என தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் உணர்ந்தனர்.*** அன்றிலிருந்து வன்முறைச் சுற்று எழுச்சியாக, தாக்குதலும் பதிலடியுமாக இருபக்கமும் மாறியது. இதிலிருந்து துணி வாகவும் பொறுப்பாகவும் வெளிவந்து செயற்படவேண்டிய பொறுப்பு ஒடுக்கியோருடையதேயன்றி, தற்பாதுகாப்பு நடவடிக்கையாகப் பதிலடி யைத் தொடங்கிய ஒடுக்கப்பட்டவர்களுடையதல்ல. வன்செயற் சுற்று எழுச்சியைத் தொடங்கியவர்களே இந்த அவல நிலைக்குப் பொறுப் பானவர்கள்.

எனவே சுற்றுஎழுச்சியான வன்முறையையும் போரையும் நான் கண்டிக் கிறேன். ஆயுதம் வாங்குவதைச் சுலபமாக்கி உலகத்தின் முன் தன் பெய ரைக் காத்துக்கொள்ளவும், தெற்கிலுள்ள பொது மக்களின் எதிர்ப்பை அடக்கவும் "சமாதானத்திற்கான போர்'' என அரசு அறிவித்தாலும், போரானது முழு நாட்டுக்கும் சுய அழிவாகும். சிறப்பாக தமிழர்களுக்குப் படுகொலையாகும். வடக்கு, தெற்கு ஆகிய இருபிரதேசங்களிலும் போரையும் அதனோடு தொடர்புடைய மனித உரிமைமீறல்களையும் சிறப்பாக முழுத் தணிக்கையால் உண்மைக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களையும் நான் வரன்முறையின்றிக் கண்டிக்கிறேன்.

வடக்கிலுள்ள எம்மைப்போன்ற பலரும், சிறப்பாக திருச்சபையும், போரை நிறுத்தி, தொடர்புபடுத்தும் முகவர் உதவியுடன் பேச்சு வார்த்தையைத்

தொடங்கும்படி அரசை வேண்டியுள்ளார்கள். தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும் போரை நிறுத்தி மூன்றாம் பகுதித் தொடர்புடன் பேச்சுவார்த் தையை தொடங்கும்படி வெளிப்படையாகக் கேட்டுள்ளனர். ஆனால் அரசு இந்த அழைப்புக்களை அலட்சியம் செய்வதோடு வன்முறைச் சுற்றொழுச்சியில் தொடர்ந்து இருந்து தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை அழித்து இராணுவ வெற்றியை நிலை நாட்ட விரும்புகின்றது. சத்திர சிகிச்சை வெற்றியளிக்கலாம் ஆனால் அதற்கு முன்னரே நோயாளி இறந்து விடலாம் என நான் பயப்படுகின்றேன்.

## 5. அண்மைக்காலத்தில் நடந்த மாபெரும் மக்கள் வெளியேற்றம் பற்றி உங்கள் கருத்து என்ன?

இந்த வரலாற்று வெளியேற்றமானது மனிதமற்றது. படைகள் ஆக்கிர மித்த பகுதிகளில் இருந்த தமது இருப்பிடங்களை விட்டு 500,000 மக்கள் இரவிரவாகச் சரமாரியான எறிகணை வீச்சுக்கள் ஆகாயக் குண்டு தாக்குதல்களுடன் அண்மித்து வந்த இராணுவத்திடமிருந்து தப்பியோடிய கதையாகும். மிகக் குறைந்த உடமைகளுடன் மிகக் குறுகிய நேரத்தில் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டோம். தமிழருடைய வரலாற்றுத் தலைநகரான யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றவும், நவீன சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடையாளமாகச் சிங்கக் கொடியை மேட்டி மையாக எம்மண்ணில் ஏற்றியதும் எம்மாற் கற்பனை பண்ணமுடியாத சோகப் படலமாகும். சிங்கள ஏகாதிபத்தியம் வெற்றி பெற நாம் சொல்லொணாத் துன்பியல்களையும், அவமானத்தையும் அனுபவிக்க வேண்டியதாயிற்று.

தமது இராணுவத் தாக்குதல்கள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு எதிரானதே அன்றி தமிழ் மக்கள் மேல் அல்ல என அரசு அறிவித்தது. தமிழரையும் யாழ்ப்பாணத்தையும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளிடமி ருந்து விடுவிக்கப்போவதாக அரசு அறிவித்தது. இப்படியான ஏமாற்றுக் கதை அர்த்தமற்றவை, ஒரு ஜனநாயக அரசிற்கு ஏற்ற செயலுமல்ல. நாம் வெளியேறியது அரசு கூறவதுபோல் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் துப்பாக்கி முனையிலுமல்ல, அரசு வழங்கிய புத்திமதியிலுமல்ல. சிறீலங்கா இராணுவத்தின் குண்டுவீச்சிலுமிருந்தும் எறிகணைத் தாக் குதலிலுமிருந்தும் உயிரைக் காப்பாற்றவே நாம் வெளியேறினோம். நடமாடமுடியாத சில வயோதிபரையும் நோயாளரையும் கொண்ட ஒரு வெறும் யாழ்ப்பாணத்தையே அரசு கைப்பற்றியது. இன்றுவரைக்கும் கொழும்பிலுள்ள பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணம் சென்று இராணு

வக் கைப்பற்றலின் முழு உண்மையை உலகிற்குக் கூறுவதற்கு அரசாங்கம் தடைவிதித்துள்ளது. எமது சொந்த வீடுகளிலிருந்து விரட்டப்பட்டதையும் எமது உடமைகள் அழிக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டதையும் எண்ணும்போது, நாம் ஆழமாக மனவருத்தப்படுகின்றோம்.

குடாநாட்டின் மற்றைய பகுதிகளிலும் வன்னிப் பிரதேசத்திலும் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் தொடர்ச்சியான அத்தியாவசியப் பொருட்கள் பற்றாக்குறையினால், வாழ வசதிகள் இல்லாமையால் படிப்படியான இறப்பை எதிர்நோக்குகின்றனர். போர்முனையில் இருபக்கத்திலும் மடியும் தொகையிலும் பார்க்க, இப்படிப் படிப்படியாகச் செத்துக்கொண்டிருப்பவர்களே அதிகமாகும். ஐக்கிய நாடுகளின் அகதிகள் ஸ்தானிகராலயம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஒக்ஸ்பாம், சிறுவர் காப்பாற்றும் நிதியம், எல்லைகடந்த மருத்துவம் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் மனித உரிமைப் பணிகளைக்கூட அரசு கட்டுப்படுத்தும் முறையைப் பார்க்கும்போது அரசின் நடவடிக்கை ஓர் படிப்படியான தமிழ் இன ஒழிப்பில் ஈடுபட்டிருப்பது எனச் சந்தேகமின்றி உறுதிப்படுத்துகின்றது.

போரை நிறுத்தி சமாதான நடவடிக்கையை ஆரம்பிக்கும்படி ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் உரத்துக் குரலெழுப்பியுள்ளனர். தமிழ் மக்களின் விடுதலைக்காகவே அரச நடவடிக்கையென்று அறிவித்தாலும் கூட, இன்னுமொரு பெரும் தாக்குதலுக்கு முகம் கொடுக்க மக்களுக்கு சிறிதளவும் பலமில்லை. நலிவடைந்த பொருளாதாரச் சூழ்நிலையில் கூட, வெளிநாட்டு உதவியுடன் போரை உக்கிரமாக்கி, தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை மட்டுமல்ல, விடுதலை விரும்பும் தமிழ் மக்களின் எழுச்சியை அடக்கிடவே அரசு கங்கணங் கட்டி நிற்கின்றது.

**19-4-96** இல் ஆரம்பிக்கப்பட்ட *ரிவிரச II*, இராணுவ நடவடிக்கையில் அரசு கைப்பற்றி, மக்களைத் திரும்பும் படி அழைத்த பகுதிகளிலும் குண்டு வீச்சும், எறிகணைத் தாக்குதலும் தொடர்ந்து இருந்தது. மக்களை மீண்டும் தமது இராணுவ அதிகாரத்திற்குள் கொண்டு வந்து அவர்கள்மேற் தமது பலத்தைப் பிரயோகிப்பதே அரசின் உறுதியான நோக்கமாக இருந்தது. கடந்த ஆறு மாத காலமாகக் கடத்தப்பட்ட வாழ்க்கையினால் அடிப்படைத் தேவைகளின்றி வலுவாகப் பாதிக்கப்பட்ட மக்கள் வீடு திரும்பியபொழுது, அவர்கள் திரும்புதலை இராணுவத்தினர் தமக்கும் தமது நடவடிக்கைக்கும் கிடைத்த வெற்றிபோல் கருதி இராணுவம் மக்களை வரவேற்றது. மக்களே தங்கள் வாழ்க்

கையைப் பார்த்துக் கொள்ள ஏன் இராணுவம் உத்தரவு கொடுக்க முடியாது?

யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடி ஏற்றலும் இராணுவப் பிரசன்னமும் வடக்கு வாழ்க்கைக்கு ஒரு அவசியமான தேவையா? இவ்வாறு தான் அறுபதுகளிலும் தொடங்கியது, மீண்டும் பழைய நிலைமையே தொடர்வது போல் தோன்றுகின்றது.

## 6. எப்பேர்ப்பட்ட தீர்வை நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?

முதலிடத்தில் போரை நிறுத்திச் சமாதானப் பேச்சு வார்த்தையை தொடங்கும் கடப்பாடு போரை நடத்தும் இரு பக்கத்தினருக்கும் உண்டு. விடுதலைப் புலிகள் விலகிக் கொண்டதால் கடைசிச் சுற்றுப் பேச்சு வார்த்தை தோல்வியை தழுவியது. ஆனால் ஏன் அவர்கள் அப்படி விலகிக் கொண்டார்கள்? தாங்கள் ஏற்றுக்கொண்டு வர்த்தமானியில் அறிவித்தவற்றைத் தன்னும் அமுற்படுத்தும் நல்லெண்ணம் அரசிற்கு இருக்கவில்லை. அரசு ஆமோதித்ததை அமுல் செய்ய இராணுவம் தயாராக இருக்கவில்லை. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் விலகிக் கொண்டதினால் விடுதலைப் புலிகளை நம்பமுடியாது என அரசு கூறுகின்றது. சிறீலங்கா அரசு எத்தனைதடவை ஒப்பந்தங்களை ஒருதலைப் பட்சமாகக் கிழிக்காமல் விட்டது? எத்தனை தடவை வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்த முன்வந்தது? ஆகையினாற் தேவையற்ற பழிபோடலைத் தவிர்த்து, இன்னும் தேவையற்ற பரஸ்பர நம்பிக்கையீனங்களைத் தவிர்க்கும்முகமாக மூன்றாம் பகுதியின் உதவியுடன், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைக்கு அரசு இணங்க வேண்டும்.

இரண்டாவதாக, பேச்சுக்கான சூழல் உருவாக்கப்படல் வேண்டும். கடந்த பல வருடங்களாக அரசாங்கம் மனிதமற்ற பொருளாதாரத் தடையை தமிழர்களுக்கெதிராக நடைமுறைப்படுத்தி வருகின்றது. அத் தடை உடனடியாக நீக்கப்பட்டு மக்கள் மனிதர்களாக வாழ வசதிகள் அளிக்கப்பட வேண்டும்.

மூன்றாவதாக யாழ் நகர் உட்பட பல தமிழ்ப் பகுதிகளின் கட்டிடங்களின் பெரும் அழிவுடன் தமிழ் மண்ணைக் கைப்பற்றிய தவறுக்குப் பரிகாரம் காணவேண்டும். இராணுவம் எரித்து அழித்த யாழ்ப்பாணத்தை அவர்கள் கட்டியெழுப்புவதை நாம் விரும்பவுமில்லை, எதிர்பார்க்கவு

மில்லை. வடக்குக்கு வெளியே இல்லாவிட்டாலும் இராணுவம் ஓரளவுக் காவது தங்களின் ஆரம்ப இடமான பலாலி முகாமுக்குத் திரும்ப வேண்டும். அப்போதுதான் மக்கள் பயமின்றிச் சுதந்திரமாகத் தத்தம் சொந்த இடங்களுக்குத் திரும்புவார்கள்.அரசு தமிழ்மக்களின் புனர்வாழ் விற்காக ஏற்கனவே பெற்றுக்கொண்ட வெளிநாட்டு உதவிகளையும், பொருட்களையும் மீளக் குடியேறும் மக்களிடம் கொடுத்துதவ வேண்டும்.

மக்கள் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பும்போது தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அல்லது தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் இலட்சியம் அவர்களோடு திரும்பக்கூடும். கனவுகளும் இலட்சியங் களும் மக்கள் கொண்டிருப்பதை யாரும் தடுக்கமுடியாது. மக்களை அவர் கள் பிள்ளைகளான புலிகளிடமிருந்து முழுதாகப் பிரிக்கலாம் என்ற அர சின் நோக்கு பெரும் ஏமாற்றமாகத்தான் இருக்கும். இராணுவப் பலத் தால் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளைக் காடுகளுக்குள் பின்வாங்க வைத் தாலும், தமிழரின் மனவுணர்வுகளைத் தெளிவாகக் கூறி விடுதலை இலட்சியத்துக்காக ஆயிரக்கணக்கில் உயிர்களைப் பலி கொடுத்த விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் தொடரும். எனவே சிறீலங்கா அரசு கொழும்பிலுள்ள போலித் தலைமைத்துவத்துடன் அல்ல புலிகளுடனேயே பேசவேண்டும்.

## 7. இறையியல் கற்பித்தலை இவ் இனப்பிரச்சினை எவ்வாறு பாதிக்கின்றது?

கடந்த இருபதாண்டுகளாக இறையியலாக்கத்தின் தமிழ்ச் சூழலும் இறையியலின் பொருளும் இறையியல் கற்பிக்கும் முறையும் படிப்படியாக மாற்றம் அடைகின்றது. கடந்த நாற்பது வருடங்களாக ஏனைய மக்களுடன் பல்வேறு இடுக்கண்களுக்கும் அடிமைத்தனங்களுக்கும் உள்ளாக்கப்பட்ட தமிழ் மக்கள், தமது விடுதலைப்பயணத்தில் கடவுளின் திட்டத்தையும் அவரின் கரத்தின் செயலையும் காணத் தொடங்கியுள் ளார்கள். மனித உடலேற்கை, பாஸ்கா போன்ற பாரம்பரிய கிறிஸ்தவ மறைபொருட்களின் கொண்டாட்டங்கள் இன்றைய தமிழ் மக்களின் வாழ்க்கைச் சூழலில் பொருத்தமான வியாக்கியானத்தையும் செய்தியை யும் தருகின்றன. பழைய புதிய ஏற்பாட்டுக் காட்சிகளை படங்கள் மூலமோ, குடில்கள் மூலமோ, அடையாளங்கள்மூலமோ கற்பனையில் பார்க்க வேண்டிய தேவையில்லை. இன்றைய தமிழ் மக்களினது முழுவாழ்க்கையும் சூழலும் நிகழ்வுகளும், உண்மையான விடுதலை நிகழ்வுகளாக, வடிவங்களாக மாற்றம் பெற்றுள்ளன. எனவே எமது

விடுதலைப் பயணத்தின் பொருளிலும் பின்னணியிலும் இறையியலாக்க, இறையியல் கற்பிக்கத் தொடங்கியுள்ளோம்.

மக்களுடனான வாழ்க்கை அனுபவம்தான் எமது இறையியலின் கருத்துப்புலம். அவர்களுடனான உரையாடலும் தோழமையும் எமது இறையியலாக்கப் படிமுறையாக உருவாகின்றது. கீழ் மட்ட அனுபவத்தி லிருந்து வரும் இந்த இறையியல்தான் அர்த்தமிக்கது. இன்னல்கள் ஊடான மக்கள் பயணத்திற்குக் கருத்தும் பொருத்தமுமான ஊட்டம் கொடுத்து உறுதிப்படுத்தி வழிநடத்துகின்றது.

## 8. இந்தியாவிடமிருந்தும், இந்திய திருச்சபையிட மிருந்தும் உங்கள் எதிர்பார்ப்பு என்ன?

சிறீலங்காவில் வாழும் இனக் குழுக்களின் தாய்நாடு என்றமட்டிலும், புவியியல்ரீதியாகப் பெரிய அரசியல் சக்தி என்ற மட்டிலும், எமது இனப் பிரச்சினையை விளங்கிக் கொண்டு, எந்தவித சுயநலமான இலாபமு மின்றித் தீர்க்க இந்தியாவின் உதவி எமக்குத்தேவை.

கடந்த காலங்களில் தனது நலன்களைப் பேணும் நோக்கத்துடன் செயற்பட்டதால் அதன் பங்களிப்பு பல குழப்பங்களையும் சந்தேகங்களை யும் தூண்டியதாகக் கூறப்படுகின்றது. சிறீலங்காவில் தமிழருக்கான முழு சுயாட்சியை ஊக்குவிப்பது இந்தியாவிலிருந்து தமிழ் நாடு பிரியும் ஆபத்தை கொண்டு வரும் என்ற எண்ணத்தை இந்தியா பேணுகிறது. ஆனால் அதே வேளையில் சிறீலங்காவின் சிங்கள இன ஒடுக்கு முறை தமிழர்களை படிப்படியான சாவுக்கு இட்டுச்செல்லுகின்றது. இன ஒடுக்குமுறையையும், வெறுப்புணர்வையும் இந்தியா கவனத்திற்கொள் ளத் தவறிவிட்டது.

கடந்த 13 ஆண்டுகளாக தமிழ் ஈழத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகள் யாவையும் சிந்தனையில் கொண்டு இந்தியா தனது நிலைப்பாட்டை மீளாய்வு செய்யவேண்டும். அத்துடன் அமைதிப் படை எமக்கிழைத்த பேரழிவுகளை மனதிற்கொண்டு எமது பிழைகளைப் பெரிய மனத்துடன் மன்னித்து, இச்சிறிய நாட்டில் சமாதானம் ஏற்பட உதவவேண்டும். இந்திய இராணுவத் தலையீட்டையோ அல்லது இராணுவ உதவியையோ நான் இப்பணிக்குத் தேவையாகக் கருதவில்லை. இடம்பெயர்ந்த எம்மைத் தாக்கி அழிக்க இந்திய ஆயுதங்கள், ஆலோசனைகள்,

விமான ஓட்டிகள் போன்ற உதவிகள் சிறீலங்கா அரசிற்குக் கிடைப் பதாக கூறப்படும் பலமான வதந்திகள் எம்மை வருத்துகின்றன.

இலங்கையிலுள்ள தமிழ் ஆயர்கள் உரிய உதவிகளை வழங்காவிடினும் தமிழகத் திருச்சபை ஈழத்திலிருந்து வரும் அகதிகளை கவனிக்கக் குருக்களை அனுப்பி பல உதவிகளைச் சிறப்பாகச் செய்கின்றார்கள். இந்த பணிக்கு ஈழத் தமிழ் கத்தோலிக்கர்கள் நன்றி கூறுகின்றனர். சிறீலங்கா அரசினது அல்லது தமிழ் ஈழ விடுதலை புலிகளுக் கெதிராக சில இந்திய அரசியல் கட்சிகள் செய்யும் பிழையான பரப்புரைக்கு செவிமடுக்காமல், அங்கு தங்கியுள்ள அகதிகளுக்கு மனிதாபிமான உதவியைத் தொடரவேண்டும். இந்த அகதிகளில் பெரும்பகுதியினர் கரையோரப் பிரதேச மக்கள். இவர்கள் கத்தோலிக்கர்கள். எனவே இந்திய திருச்சபையின் உதவியும் புரிந்துணர்வும் இவர்களுக்குத் தேவை.

மேலும் தென்னிந்திய இறையியல் சிந்தனையின் மையப்பொருள் ஏழைகளும் ஒடுக்கப்பட்டோருமாகும். இதன் விளைவாகத் தலீத் இறை யியல் தோற்றம் பெற்றது. ஈழத் தமிழர்களின் வரலாற்றுப் பயணமும், மக்களின் இடம்பெயர்வும், உலகம் முழுவதும் சிதறுண்ட நிலையும், கோவில்கள் உட்பட வரலாற்றுப் பூர்வீகங்களின் அழிவுகளும், இவை அனைத்தும் எமது தமிழ் உலகிற்குள்ளேயே நாம் நடாத்த வேண்டிய பல விடுதலைப் போராட்டங்களை நினைவு படுத்துகின்றன. சாதி, வறுமை வேற்றுமைகள், மனித உரிமை மறுத்தல்கள் ஆகியவற்றுக்கெதிராக விடுதலைப் போராட்டம் நடத்த நாம் கோரப்பட்டுள்ளோம். இறையியல் சிந்தனைக்கு வளமான சூழல் என்ற மட்டில் இந்திய இறையியலாளர்கள் தமிழர்களின் விடுதலைப் போரட்டத்தையும் உய்த்துணர்ந்து அவர்களது முழுவிடுதலைக்கான தேடலில் கிறிஸ்தவ உந்துசக்தியை வழங்க வேண்டும்.

எமக்கோ எல்லாவற்றிலும் மேலாக உயிர் வேண்டும். எமக்குச் சமாதானம் வேண்டும்: ஏனெனில் போரினால் நாம் மடிந்து கொண்டிருக்கின்றோம். எமக்கு சமாதானம் வேண்டும்: ஏனெனில் இந்த அர்த்தமற்ற போரில் எமது அன்புக்குரியவர்களையும், நெருக்கமானவர்களையும் இழந்து விட்டோம், இழந்து கொண்டிருக்கின்றோம். எமக்கு சமாதானம் வேண்டும்: ஏனெனில் போர் எம்மைத் திணறவைத்து, இல்லாமல் ஒழிக்கின்றது. எமக்கு சமாதானம் வேண்டும்: ஏனெனில் அதுதான் நாம் மாண்புடனும் சுய மரியாதையுடனும் வாழ இயற்கையான சூழலை தரக்கூடியது. எமக்குச் சமாதானம் வேண்டும்: ஏனெனில் அதுதான் எமது அடிப்படையான உரிமை.

இலங்கைத் தீவைச் சமாதான சொர்க்கமாக உருவாக்கத் தமிழரும் சிங்களவரும் தத்தம் வளங்களை ஒருங்கிணைத்துச் சமாதானத்துடன் வாழலாம் என நான் உறுதியாக வுள்ளேன். ஒருவர் மேல் இன்னொருவர் ஆதிக்கம் செலுத்துவதல்ல, மாறாக ஒன்றித்து வாழப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு காணியில் அடுத்தடுத்த வீடுகளில் வாழும் குடும்பங்கள் போன்று. உரிமையுடனும் மாண்புடனும் முதிர்ச்சியடைந்த இரு இனக்குழுக்களாக தங்கள் இனத்தை, சமூகத்தை செயற்படுத்த ஒப்புக்கொள்ள வேண்டும்.

# எனது மக்களை அடிமைத் தனத்திலிருந்து சுதந்திரமாகப் போகவிடுங்கள்!

1996ம் ஆண்டு யூன் 27ம் திகதி, கன்பரா, அவுஸ்திரேலியாவில் *நீதியுடன் சமாதானம்* என்ற தலைப்பில் சிறீலங்கா முரண்கை பற்றிய சர்வதேச மகா நாட்டில் ஆற்றிய உரையின் தமிழ் வடிவம்

## 1. சிறீலங்காவில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் உண்மைக்கான சாட்சியம்.

எனது மக்கள் சார்பாக இம் மகாநாட்டில் பங்கு பற்றுவதிலும், அவர்கள் சார்பாக ஒரு நேரடியான வேண்டுகோளை இங்கு விடுப்பதிலும் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். நான் உங்கள் முன் நிற்பது ஓர் அரசியல்வாதியாகவோ, ஓர் அரசியல் ஆய்வாளனாகவோ அல்ல. சிறீலங்காவிலுள்ள எந்தவொரு அரசியல் குழுவினதோ, அல்லது ஓர் இயக்கத்தினதோ பிரதிநிதியாகவும் அல்ல, மாறாகச் சிறீலங்காவின் வடக்கிலிருந்து வருகை தந்து *எனது மக்களின் இன்றைய நிலைக்குச் சாட்சியம் அளிக்கும் ஓர் தமிழ்க் கத்தோலிக்க குருவாக மட்டுமே இங்கு நிற்கிறேன்.* 1956ம் ஆண்டு தொடக்கம் எமது நாட்டில் இடம் பெற்று வரும் அரசியல் நிகழ்வுகளை நான் உன்னிப்பாக அவதானித்து வருகிறேன். எனது குருத்துவப் பணிவாழ்வின் பதினைந்து நீண்ட வருடங்களை அம்பிட்டியா தேசியக் குருத்துவக் கல்லூரியிலே, இளங் குருக்களை உருவாக்கும் பணியில் செலவிட்டேன். அங்கே சிறீலங்காத் திருச்சபையில் பணி புரிவதற்காகப் பயிற்சி பெற்று வந்த நூற்றுக் கணக்கான சிங்கள தமிழ் குருத்துவ மாணவர்களுக்கு விரிவுரைகள் ஆற்றினேன். 1986 ஆண்டு தொடக்கம் (வடக்கில்)துன்புறும் எனது மக்க்ளுடன் வாழும் வாய்ப்பினை நான் பெற்றேன். இதுவே எனது சாட்சியத்தின் ஊற்றாகும்.

சுதந்திரம், சுயகௌரவம் ஆகியவற்றுக்கான எனது மக்களின் தேடலில், சமயத் தலைவன் என்ற ரீதியில் நானும் தற்பொழுது இணைந்து செல்வதோடு, போர் அவலங்களின் துயரத்துக்குள் சிக்கித் தவிக்கும் மக்களுக்குக் கிறிஸ்தவ வழிகளில் எனது பணிகளைப் புரிகின்றேன். பணியிலும் போராட்டத்திலும் நான் பங்குபற்ற, இயேசு

தான் எனது இலட்சியமும் உந்து சக்தியும். பாவம், மரணம் ஆகிய அடிமைத்தனங்களிலிருந்து, மனுக்குலத்திற்கு விடுதலையளித்து, கடவுளின் பிள்ளைகளுக்குரிய மாண்பையும் சுதந்திரத்தையும் அளித்தவரும், உண்மை எமக்கு நிச்சயம் விடுதலையளிக்கும் என்று உணர்த்துபவரும் அவரே தான். எனவே உண்மைக்கான சேவையில் எம்மை இங்கு அர்ப்பணிக்கின்றோம்.

''சமாதானம் செய்வோர் பேறு பெற்றோர்'' என மலைப்பொழிவில் கற்பித்தவரும் அவரே. தன் வாழ்வை உன்னத காணிக்கையாக்கி, முழு மானிடத்திலும் சமாதானம் செய்வதில் தன்னை ஒரு ஒப்பற்றவராக நிரூபித்தார். எனவே சமாதானம் செய்வதற்கான சேவையில் எம்மை இங்கு அர்ப்பணிக்கின்றோம்.

இம் மகாநாட்டின் மையப்பொருளிற்கிணங்க, இலங்கையின் எல்லாப்பகுதிகளிலுமிருந்து சமாதானத்திற்காகவும் ஒப்புரவிற்காகவும் ஏங்கித்தவிக்கும் பலகோடி மக்கள் சார்பாகவே இப் பணியைச் செய்கின்றேன். எனது சிந்தனையை நேர்மையாகக் கூற வேண்டுமாயின் நாட்டில் நடக்கும் சம்பவங்களை உண்மையாக எடுத்துரைப்பதே எனது சாட்சியமாக அமையும். வரலாற்றின் இந்தக் கட்டத்தில் தமிழன் என்ற காரணத்தினால், ''சமாதானத்திற்கான போர்'' என்ற தலைப்பில் மனிதபண்பிற்கு முரணான ஓர் போரைத் தாங்கி, பல அவலங்களுக்கு உள்ளாகி, சுமக்க முடியாத பல சுமைகளைச் சுமந்து, உயிர் வாழப் போராடிக்கொண்டிருக்கும் எனது மக்கள் சார்பில், எல்லா மக்களும் தாகிக்கும் சமாதானம் அடைய எமது குரல் கொடுத்துப் பணிபுரிவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மண்ணின் மகன் என்ற காரணத்தினாலும், இந்த உண்மைகளை அந்தச் சமூகத்தினுள் இருந்து கொண்டே அனுபவிப்பவன் என்ற ரீதியிலும், சில முக்கியமான உண்மைகளையும் அதன் யதார்த்த சூழ்நிலையையும் எனது கிறிஸ்தவ கடமையுணர்ச்சியுடன் வெளிப்படுத்த விழைகின்றேன். எமது நாட்டின் நிலையான சமாதானத்தை எல்லா மக்களும் கண்டடைய இவை இன்றியமையாதவையாகும். சில சுயநல மிக்க தொடர்புச்சாதன நிறுவனங்களாலும், பொறுப்பற்ற பல அரசியல் வாதிகளாலும் யதார்த்த உண்மைகள் திருப்பப்பட்டுத் திரிவுபடுத்தப் பட்டு வந்திருக்கின்றன. ஆகையினால் என் சாட்சியம் இங்கு முக்கியமானது.

## 2. ஈழத்தமிழர் ஒரு நீதியான சமாதானத்துக்காகத் தவிப்பவர்கள் என்பதில் சந்தேகமேது?

வடக்குக் கிழக்கில் வாழ்பவர்கள் சமாதானத்துக்கு எதிரானவர்கள் என்ற அப்பட்டமான பொய் ஒன்று ''சமாதானம் விரும்புவோர்'' எனக் காட்டும் சில போலிகளாற் தென் இலங்கையில் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. போர்ச் சூழலுக்கு அப்பால் வாழ்பவர்கள், தாங்கள் தான் உண்மையான சமாதானத்தை நேசிப்பவர்கள் என்று தங்களுக்குள் பேசிக் கொண்டு, வடக்குக் கிழக்கில் வாழ்பவர்களின் புனிதமான சமாதான நோக்கிற்கு களங்கம் கற்பித்து சந்தேகமாகப் பார்க்கும் தன்மை ஒரு சாதாரண நிகழ்வாகிவிட்டது. போரினால் துன்புற்று மண்ணில் மடிந்து கொண்டிருக்கும் மக்கள்மீதுகூட ஒரு இழிவான சந்தேகத்தை உருவாக்கி, "வடக்குக் கிழக்கிலுள்ள தமிழர் சமாதானத்திற்கா?" என்ற வேடிக்கையான கேள்வியையும் சிலர் எழுப்புகிறார்கள்.

உலகிற்கு இவ்வுண்மை தெட்டத் தெளிவாகத் தெரியட்டும்! எனது உறுதிப்பாட்டின் முழுப்பலத்திலிருந்து இதைச் சொல்கிறேன்: ***இலங்கையின் வடக்குக் கிழக்கில் இரவும் பகலும் மாரியாகப் பொழியும் குண்டுகளின் மத்தியில் உயிர் வாழத்துடிக்கும் தமிழர்களைவிட வேறு யாரும் சமாதான தாகம் கொண்டு ஏங்க முடியாது.***

சிறீலங்காவில் சமாதானத்தை விரும்புவர்களிற் பல சந்தர்ப்பவாதிகளும் சுயநலவாதிகளும் உண்டு. தமது வெளிநாட்டுப்பணத்தை சிறீலங்காவில் முதலீடு செய்து, பணம் சம்பாதிக்கக் காத்திருக்கும் உள்நாட்டு வெளிநாட்டு முகவர்கள் பலர் இதில் அடங்குவர். இன்னும் சிறீலங்காவில் விசேடமாகத் தெற்கில் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும், சொகுசு வாழ்வு தொடரவேண்டும் என்று தவிப்பவரும் இதில் அடங்குவர். ஆனால் எமக்கோ எல்லாவற்றிலும் மேலாக உயிர் வேண்டும், எமக்குச் சமாதானம் வேண்டும்: ஏனெனில் போரினால் நாம் மடிந்து கொண்டிருக்கின்றோம். எமக்கு சமாதானம் வேண்டும்: ஏனெனில் இந்த அர்த்தமற்ற போரில் எமது அன்புக்குரியவர்களையும், நெருக்கமானவர்களையும் இழந்து விட்டோம் இழந்து கொண்டிருக்கின்றோம். எமக்கு சமாதானம் வேண்டும்: ஏனெனில் போர் எம்மைத் திணற வைத்து, இல்லாமல் ஒழிக்கின்றது. எமக்கு சமாதானம் வேண்டும்: ஏனெனில் அதுதான் நாம் மாண்புடனும் சுய மரியாதையுடனும் வாழ இயற்கையான சூழலை தரக்கூடியது. எமக்குச் சமாதானம் வேண்டும்: ஏனெனில் அதுதான் எமது அடிப்படை உரிமை.

அரசுமட்டும்தான் சமாதானத்துக்குத் தன்னை அர்ப்பணித்துள் ளது என்றும் விடுதலைப் புலிகள் அதற்கு மாறானவர்கள் என்ற அரசின் பெருமையான பொய்ப்பரப்புரை சில காலத்துக்குப் பொருந்தலாம். 1995ம் ஆண்டு ஏப்பிரல் 19ம் திகதி அன்று சமாதான பேச்சு வார்த்தை முறிவடைந்ததற்கான முழுக்காரணமும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் விட்டுக் கொடாத்தன்மையும், சமாதானத்திற்கு அவர்களின் அர்ப்பணிப் பின்மையுமே என்று பல வேளைகளில் அரசாங்கத்தினர் கூறுகின் றார்கள். இது உண்மைக்கு முரணானது. முரண்கையுற்ற இரு பகுதியின ரிடையே பரிமாறப்பட்ட கடிதங்களை வாசித்தவர்களும், பேச்சு வார்த்தை யின் முன்னேற்றத்தில் ஏற்பட்ட மந்தகதியான முன்னேற்றத்தைக் கூர்மையாக அவதானித்தவர்களும், இதைத் தெளிவாக உணர்வார்கள்.

மனித வாழ்வின் அடிப்படைத்தேவைகளை மறுக்கின்ற மனிதத் திற்கெதிரான பொருளாதாரத் தடையினால் வடக்குக் கிழக்கு மக்கள் வாழ்க்கையின் பட்டினி ஓரத்துக்குத் தள்ளப் பட்டிருக்கின்றனர். இந் நிலையில் பொருளாதாரத் தடையை ஆயுதக்கருவியாகப் பாவித்து ஓர் நீண்டகால அரசியற் தீர்வுக்கான பொதியை விவாதிக்க தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மேல் அழுத்தம் பிரயோகிக்க அரசாங்கம் முனைந் தது ஆனால் அதுமுடியவில்லை. மிக எளிதான பொருட்களான இனிப் புப்பொருட்கள், வெள்ளைத் துணி, ரயர் ரியூப், எரி பொருட்கள் மேல் விதிக்கப்பட்ட தடையை எடுக்க மனமில்லாத அரசு, தமிழரின் நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வு காண பாரிய அரசியல்மாற்றத்தைக் கொண்டுவருவார்கள் என்று எப்படி நம்ப இடமுண்டு? அரசின் நம்பகத் தகைமையைப்பற்றி பேச்சு வார்த்தையின்போது மக்கள் மனதில் பெரும் சந்தேகம் உருவானதில் அதிசயமில்லை. மேலும் சில மாதங்களாக ஓரளவிற்குச் செயற்பட்டு வந்த பகுதித் தடை நீக்கம், பேச்சு வார்த்தை முறிவடைந்த அன்றே உடனடியாக ஈன இரக்கமின்றி 100 வீத தடை மீளவும் செயற்படுத்தப்பட்டது. இது அரசின் உள்ளக நோக்கத்தின்மேல் மக்கள் கொண்டிருந்த சந்தேகத்தை இன்னும் உறுதிப்படுத்தியது.

## 3. சமாதானத்திற்கான போர் என்பது ஒரு சுய முரண்பாடான தெரிவு

''இனி போர் இல்லை, சமாதானமே!'' என்ற வாக்குறுதியுடன் அதிகாரத்திற்கு வந்தவர்கள், அதிகாரத்துக்கு வந்தவுடன், வாழ்க்கைக் குத் தேவையான அடிப்படைப் பொருட்களை வழங்க வர்த்தமானியில் தமிழருக்கு அளித்த உறுதி மொழியைச் செயற்படுத்தப் பின்வாங்கினர்.

இப்படி மூன்று மாத இடை வேளைக்குள்ளேயே மானிடமற்ற, அர்த்தமற்ற பொருளாதரத்தடையால், அரசாங்கம் தமிழ் மக்களின் தொண்டையை முழுமையாக நசிக்கும் நிலைமைக்கு மீண்டும் திரும்பியது. சமாதானத் திற்கான முயற்சி உண்மையானதாய் இருந்தால், முதலில் மனிதாபி மானமற்ற பொருளாதரத் தடையை எந்த வித காரணமுமின்றி முற்றாக அகற்றி, மக்களின் அடிப்படை மனிதத்தேவைகளை மீண்டும் நிலை நிறுத்தியபின்னரே, நீண்டகாலத் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைபற்றிப் பேசியிருக்கவேண்டும். ஆனால் அரசானது தமிழ்மக்க ளின் தலைக்கு மேல் இராணுவ அச்சுறுத்தலையும் பட்டினிக் கொடுமை யையும் கழுத்தை நெரித்து நிலத்தைக் கைப்பற்றுவதிலேயுமே ஆர்வம் கொண்டிருந்தது. தனது சொந்த அரசியல் முடிவைத் தமிழ் மக்கள் மேற் திணிக்க அரசு முயன்றது. இதைத் தமிழர்கள் முற்று முழுதாக ஏற்றுக் கொள்ளவில்லை.

அரசின் சமாதான பிரகடனங்களுக்கு வாக்களித்த ஆயிரக் கணக்காக தமிழரை சாந்திப்படுத்தவும், சர்வதேச சமூகத்தின் முன் தங்கள் இரகசிய இராணுவ நிகழ்ச்சிநிரலை மூடி மறைக்கவும் அரசாங்கம் முயன்றது. இதற்காக மிகச் சூழ்ச்சி மிக்க ஒரு தலைப்பில் தமது சதித் திட்டத்தை சர்வ தேசத்திற்கு வெளிப்படையாகக் காட்டியது. சமாதானமே தொடர்ந்தும் தமது நோக்கமென்றும் ஆகையினால் தமது போரைப் "போர்" என்று அழைக்காது "சமாதானத்துக்கான போர்" என்று, மானிட வரலாற்றில் ஒரு பொழுதும் அறியாத புதிய கண்டு பிடிப்பால் முழு உலகையே ஏமாற்ற முயலுகிறது. ஏமாற்றத் துணிகின் றவர்களும் ஏமாற்றப்பட இணங்குகின்றவர்களும் உண்மையின் முன் தங்களையே ஏமாற்றிக் கொள்ளுகின்றனர்.

மாண்புமிகு ஜனாதிபதி தனது நேர்மையான சமாதானத் தேடலின் விளைவாகவே இப்போரை நடாத்தத் தான் நிர்ப்பந்திக் கப்பட்டதாகக் கூறிக்கொண்டார். தனது இராணுவ நடவடிக்கையை நியாயப்படுத்தக் குத்துக்கரண முயற்சிகள் பல எடுத்துள்ளார். இவை அனைத்தும் பிரச்சினைத் தீர்ப்பதற்காக அல்ல. வடக்குக் கிழக்கிற்கு எதிரான போருக்குத் தேவையான நிதியையும் உயர் போர்த்தளபாடங் களையும் சூட்சியாகப் பெறவுமே நடக்கின்றன.

சமாதானப் பேச்சுக்கள் முறிந்து, பிணக்குகள் மீண்டும் தொடங்கியதற்கான உண்மையான காரணங்களை அரசு வெளியி டாமல்,

1. இப்போர் அரசாங்கத்தின் மேல் விடுதலைப் புலிகளினாற் திணிக்கப்பட்டது,
2. இப்போர் தமிழ் மக்களுக்கு எதிராகவல்ல, ஆனால் விடுதலைப் புலிகளுக்கு எதிரானது
3. இப்போர் விடுதலைப் புலிகளின் கோரப் பிடியிலிருந்து தமிழ் மக்களை விடுவிக்க,
4. இப்போர் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை அழிப்பதற்கு அல்லது பலவீனப்படுத்துவதற்கு,
5. இப்போர் விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தை மேசைக்குவர அழுத்தம் கொடுக்க,

என்று அரசு பரப்புரை செய்து வருகிறது. ஆனால் போர் செல்லும் முறையில் இவை ஒன்றிலுமே உண்மை இருப்பதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தின் மீது கொடூர இராணுவ ஆக்கிரமிப்பு நடாத்தியதும், சூன்ய தமிழ்ப் பிரதேசத்தில் சிங்கக் கொடியை ஏற்றிக் கொண்டாடியதும், இரண்டாவது சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கையில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் மக்களைக்கொண்டுவர சதிவலை விரித்ததும், வன்னிப்பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தவர்களுக்குப் புலிகள் அல்லது அவர்களின் ஆதரவாளர்களென்று உணவை மறுத்ததும், இவையெல்லாம் ''சமாதானத்துக்கான போர்'' என்ற தலைப்பில் நடைபெறும் சதித்திட்டத்தின் உள்நோக்கத்தை நிரூபிக்கின்றன. தமிழ் மக்களை இராணுவஆட்சியில் அடிமைப்படுத்துவதையே அரசின் இராணுவ நிகழ்ச்சிநிரல் மறைமுகமாக வெளிப்படுத்துகின்றது.

## 4. போரின் தேர்வையும் அதற்காக அறிவிக்கப்பட்டுள்ள உள்நோக்கத்தையும் சுற்றியுள்ள பொய்கள்.

போர் மூலம் சமாதானம் என்ற சுய முரண்பாடான நோக்கை, உண்மை அடிப்படையில் நீதிப்படுத்த முடியாது. பொய்யுரைகளினால் மட்டுமே அதனைப் பேணமுடியும். சமாதானத்தை அடைதல் என்ற பின்னணியில் அரசாங்கத்தின் போர் நடவடிக்கையின் ஏற்றமானது அரசின் மூடி மறைக்கப்பட்ட உள்நோக்கத்தைப் படிப்படியாக வெளிப்படுத்தியது. இக் கருத்தை இன்னும் விளக்க சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றேன்.

## 4.1 நிகழ்வுறாத நிகழ்ச்சிகளை நிகழ்ந்ததாக அறி வித்தல்.

1995ம் ஆண்டு யூலை 9ம் நாள் அதிகாலை வேளையில் ''முன்னேறிப் பாய்தல்'' என்ற இராணுவ நடவடிக்கையின் முதற் கட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும் அரசாங்கமும் அதன் தொடர்புச் சாத னங்களும் இராணுவ நடவடிக்கை தொடங்கிப் பல மணிகளின் பின் னரே யாழ்ப்பாணப்பகுதிகளில் ஊரடங்குச் சட்டத்தை அறிவித்தது. பொதுமக்கள் கோவில்களிலிலும், ஆலயங்களிலும் தஞ்சம்புகும்படி உலங்கு வானூர்திகள் துண்டுப்பிரசுரம் வீசியதாகப் பேசியது. ஆனால் அவ்வாறு நிகழவில்லை. யூலை 8ம் நாள் யாழ்ப்பாணத்தின் மீது எவ்வித உலங்கு வானூர்தியும் பறக்கவும் இல்லை, யாழ் குடாநாட்டின் எப் பகுதியிலும் துண்டுப்பிரசுரங்கள் போடப்படவுமில்லை. ''பொது மக்களை எச்சரித்தோம்'' என்று கூறப்பட்டது அப்பட்டமான பொய்யாகும். அவ்விரவு இராணுவ எறிகணை வீச்சிலிருந்து தப்பி ஓட எழும்பிய ஆயிரக்கணக்கான மக்கள் இதற்குச் சாட்சியம் கூறுவர்.

## 4.2 தனக்குச் சாதகமற்ற உண்மைகள் மேல் அரசின் சீற்றம்

போர்க்களத்தில் உண்மையில் என்ன நடக்கின்றது என்பதை அறிவதற்கோ நம்புவதற்கோ அரசோ அதன் தொடர்புச்சாதனங்களோ சாதகமாகச்செயற்படவில்லை. உண்மையை அறிய அரசிற்கு ஆவலு மில்லை ஆர்வமுமில்லை. நவாலி புனித பேதுறு பாவிலு ஆலய சூழலில் தஞ்சம் தேடிய அகதிகள்மேற் 'புக்காரா' விமானம் ஆறுக்கு மேற்பட்ட குண்டுகளை வீசியது, பல்லாயிரக் கணக்கான மக்கள் அறிந்த உண்மை. அங்கு 120 பேர் இறந்து 200 மேற்பட்டோர் படுகாயமடைந் தனர். இது விடுதலைப்புலிகளின் வேலையென அரசு கூறித்தப்பப் பார்த்தது. அரசு தோல்வி கண்டவுடன் இவ் உண்மையைச் சர்வதேச சமூகத்திற்கு அறிவித்தவர்களை அரசு குற்றஞ் சாட்டியது. சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினதும் திருச்சபையினதும் நேரடியான உண்மை யான அறிக்கைகளை பாராதினப்படுத்தி, இராணுவ அறிக்கையில் முற்றும் முழுதும் தங்கியிருப்பது அரசின் வெட்கம் கெட்ட முறையாகும். சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அறிக்கைமீதோ அல்லது திருச்சபை யின் அறிக்கைமீதோ அரசு சீறிப் பாய்ந்து வெடிக்கின்றது. தனக்குச் சார்பற்ற உண்மைகளுக்கு அரசு எதிராக உள்ளது என்பதைப் பிரித்தா னியத் தொலைக் காட்சி நிறுவனம் ஐயம் திரிபறக் காட்டியுள்ளது.

## 4.3 மூடிய கதவுகளுக்குப் பின்னால் இராணுவ நடவடிக்கை மேற்கொள்வது அரசின் ஒழுக்க மற்ற தன்மையாகும்.

தமிழர் போராட்டம், வடக்குக் கிழக்கு போராக மாற்றம் பெற்றதிலிருந்து அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் தொடர்புச்சாதனங்கள் அனைத்தும் பெரும் பான்மையாக உண்மையை கட்டுப் படுத்துகின்றன அல்லது திரித்துக் கூறுகின்றன. அடிக்கடி அமுல் செய்யப்படும் செய்தித் தணிக்கைகள், போர்ச் சூழலுக்கு வெளிநாட்டு தூதரகப் பிரதிநிதிகளோ அல்லது வெளிநாட்டு, உள்நாட்டு பத்திரிகையாளர்களோ போவதைக் கடுமையாகத் தடை செய்கின்றன. இந்நிலை ஓரளவுக்கு நிரந்தரமாக்கப்பட்டுத் தொடர்புச் சாதனங்கள் மீதான தணிக்கை எல்லா உள்நாட்டு வெளிநாட்டுப் பத்திரிகையாளரும் வடக்குக்குப் போகாமற் தடுக்கும் வண்ணம் கட்டுப்பாடு இறுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இராணுவம் கொடுக்கும் அறிக்கையைப் பத்திரிகைகள் கிளிப்பிள்ளை போல் மீண்டும் ஒலிக்கின்றன. குளிரூட்டப்பட்ட அறைகளிலிருந்து செயற்படும் பத்திரிகையாளர் போர் இடங்களிலிருந்து வரும் நிகழ்வுகளை ஊகித்தும் செய்தி வெளியிடுகின்றனர். மற்றைய நாடுகளில் உள்ள பத்திரிகையாளர்கள் போர்ப்பிரதேசங்களில் துணிவோடு நுழைந்து உண்மைச் செய்திகளை நேர்முகமாகத் திரட்டி வெளியிடுகிறார்கள். மற்றைய நாட்டிலுள்ள பத்திரிகையாளர்கள் போல் இல்லாமல் நம் நாட்டுப் பத்திரிகையாளர்கள் இராணுவம் தரும் அறிக்கையை உண்மையென எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்கிறார்கள்.

வேறு வார்த்தையில் கூறினால், பாதுகாப்புக் காரணங்களுக்காக என்ற போர்வையின் கீழ் முழுச் செய்தித் தடையை விதித்துவிட்டு, இறுக மூடிய கதவுகளுக்குப் பின்னால், ஒரு மனித மாண்பிற்கு முற்றும் முரணான போர் ஒன்றை அரசு தொடர்ந்து நடத்திக்கொண்டு இருக்கின்றது. எனவே அரசு தன் அதிகாரத்தை தவறாகப் பிரயோகிப்பதுடன் இராணுவம் செய்யும் அநியாயங்களுக்குத் துணைபோகின்றது. மூடிய கதவுகளுக்குப் பின்னாற் போரை நிகழ்த்துவதால், உண்மைகளை திரிவுபடுத்தி, உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் இப்போருக்கு ஆதரவு தேடி வெளிநாட்டில் மலிவான ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வருகின்றது.

ஆனால் இப் போரின் நடுவே அகப்பட்டு அதன் பயங்கரங்களை நாளாந்தம் அனுபவித்து வரும் எம்மை, வாழ்வதே ஒரு தொடர்ச்சியான புதுமையெனக் கருதும் எம்மை, இவ் அரசாங்கம் எப்போதும் ஏமாற்றி வெற்றி பெற முடியாது.

## 4.4 இராணுவ ஆக்கிரமிப்பு ஏற்படுத்திய வரலாற்று வெளியேற்றம்.

பல ஆண்டுகளாக தமது மண்ணில் நிலைகொண்டுள்ள சிறீலங்கா இராணுவத்தின் நடவடிக்கையால் மக்கள் சாவு, அழிவு, சூறையாடல், பாலியற் பலாத்காரம், போன்ற மறக்கடிக்க முடியாத சம்ப வங்களினால் நிரந்தர பீதி அடைந்திருந்தனர். குடாநாட்டில் முன்பு நடந் தேறிய இராணுவ நடவடிக்கைகளினால் யாழ்ப்பாணத்தைச் சுற்றி மக் கள் அடர்த்தியாகத் திரண்டு அலைபோல் இடம்பெயரவைத்தது. ஏறக்கு றைய இரு வாரங்களாக ஆகாய, கடல், தரை மார்க்கமான முதல் சூரியக் கதிர் நடவடிக்கையால் முழு யாழ்ப்பாணமும் இரவும் பகலுமாக முழக் கத்தினால் அதிர்ந்தது. மக்கள் தரையில் விழுந்து அதிர்ந்தார்கள். யாழ்ப்பாணத்தை நோக்கி நகரும் அரச படையிடமிருந்து ஏவப்பட்ட குண்டுகளும் எறிகணைகளும் மக்களை அழிவுத் திசையில் துரத்திய வண்ணமே இருந்தன. இப்பேர்ப்பட்ட நிலையில் உயிர் தப்பி, ''யாழ் மக்களுக்கு விடுதலை அளிக்கச் செல்கின்றோம்'' என்று கூறி வரும் சிறீலங்கா இராணுவப்படையை எவ்வாறு காத்திருக்க முடியும்? பரபரப்புடனும் பதட்டத்துடனும் தப்பி ஓடுவதைத் தவிர யாழ் மக்களுக்கு· வேறு வழியிருக்கவில்லை.

யாழ் நகரின் மூடு நாள் எட்டியது, 1995ம் ஆண்டு ஒக்டோபர் 30ம் நாள். ஓர் எச்சரிக்கை வீதியெங்கும் விடுக்கப்பட்டது. அது தேவை யானதொரு எச்சரிக்கையாகும். ''யாழ்ப்பாண நகரை எதிர் கொண்டு அரச படைகள் வந்து கொண்டிருக்கிறது அதை விடுதலைப்புலிகள் எதிர்த்துப் போராடுவர். தென்மராட்சி போன்ற பாதுகாப்பான இடங்க ளுக்கு இடம்பெயர்தல் புத்திசாலித்தனமான நடவடிக்கையாகும்'' என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஏற்கனவே பதட்டம் நிறைந்திருந்த மக்க ளுக்கு இந்த எச்சரிக்கையே போதுமானதாகும். அரசும், வடக்குக்கு அப்பால் வாழும் அரசசார்பானவர்களும் விடுக்கும் பொய்யான பரப்புரை கூறுவதுபோல் விடுதலைப்புலிகள் பயப்படுத்தியோ அல்லது பலாத்காரம் பிரயோகித்தோ மக்களை வெளியேற்றவில்லை. அல்லது மக்களை யாழ்ப்பாணத்திலிருந்து தாங்கள்தான் பாதுகாப்பாக இடம்பெயர புத்தி

மதி கூறியதாக அரசபடைகள் கோருவதிலும் உண்மையில்லை. உயிருக்குப் பாதுகாப்பற்ற நிலை உருவாகுமானால் பொறுப்புமிகு எந்தத் தலைமையும் தெளிவாகவும் உறுதியுடனும் எச்சரிப்பது கடமையாகும். பாதுகாப்பற்ற சூழலில் இருந்து இடம்பெயர உதவியும் வழங்க நேரிட்டது. இதைத்தான் கடமை உணர்ச்சியுடன் விடுதலைப் புலிகள் செய்தார்கள்.

பாதுகாப்பு நோக்கி நிகழ்ந்த இவ்வெளியேற்றம் அளவிலாத் துயரங்கள் பல கொணர்ந்தது. சிறப்பாக வயோதிபரையும் நோயாளிகளையும் மரணத்தின் விளிம்பிற்குத் தள்ளியது. அநேகரை அனாதைகளாக்கிவிட்டது. அரசபடைகளின் குண்டுகளிலிருந்தும் எறிகணையிலிருந்தும் தப்பி ஓடுவதைவிட மக்களுக்கு வேறு வழி ஏது?

சிறீலங்காவின் **500,000** மேற்பட்ட குடிமக்கள் கடவுள் கொடுத்த புனிதமான யாழ் குடா மண்ணில் பிறந்து வளர்ந்தவர்கள்: குடா நாட்டைத் தாய் நாடாக நேசித்தவர்கள்: பல தலைமுறையாக இந்த மண்ணை தம் வேலையாலும் வியர்வையாலும் பண்படுத்திப், பலனை நாடு முழுவதற்கும் கொடுத்தவர்கள். அழகான வீடுகளாலும் தோட்டங்களாலும் தம் தாய்நாட்டை வணங்கியவர்கள். இவர்கள் தான் அனைத்தையும் இழந்த அனாதைகளாக அரச படைகளினால் துரத்தப்பட்டனர்.

புனித நகராம் யாழ்ப்பாணம் நோக்கி சிறீலங்காப்படைகள் அண்மிக்கின்றனர், பல தலைமுறைத் தமிழர்கள் கட்டி வளர்த்ததை அவர்கள் அழித்து நிர்மூலமாக்கப் போகின்றார்கள், தமிழ்த்தலை நகரில் சிங்கக் கொடியை ஏற்றப் போகின்றனர் என்று அறிந்தவுடன் ஒரே இரவில் மக்கள் இடம்பெயர்ந்தார்கள். சிறீலங்கா அரசாங்கத்தின் இந்த ஏகாதி பத்தியத்தனத்தையோ இரக்கமற்ற அரக்கத்தனத்தையோ பல தலை முறைகளாகத் தமிழர்கள் மறக்கப் போவதில்லை.

பல ஆண்டுகளாகத் தமது அர்ப்பணிப்பான சேவையினால் சிறீலங்கா அரசாங்கத்திற்கு பிரமாணிக்கமாக உழைத்த மூத்தோர் பலர் மழைக்குக் குளிரினால் நடுங்கி, பசியினால் வாடி, அடுத்த இல்லிடம் கிடைக்குமட்டும் தெருக்களிற் காத்திருந்தார்கள். பாலுக்காகத் தவிக்கும் தங்கள் குழந்தைகளைக் கைகளில் ஏந்தி ஆறுதல் வருமா என அன்னையர்கள் பலர் வானத்தின் கருமேகங்களையே பார்த்து நின்றார்கள். குப்பி விளக்குகளுக்குரிய மண்ணெண்ணையின் விலையேற்றத்தால் தாக்கப்பட்ட மாணவர்களும் கல்வியினால் தமது சுபீட்சமான எதிர்காலத்தை சற்று நிர்ணயிக்கலாம் என எண்ணியவர்களும் தங்கள்

புத்தகங்களை அல்ல நோய்வாய்ப்பட்ட வயோதிபரையே தம் தோள் மேலும் துவிச்சக்கரவண்டியிலும் தூக்கிக்கொண்டு தம் தாய் மண்ணி லிருந்து துரத்தியடிக்கப்பட்டார்கள்.

பாதுகாப்புத் தேடி அலைந்த அரை மில்லியன் மக்களின் அழுகுரல்கள் அரசாங்கத்தை அணுவளவும் அசைக்கவில்லை. மக்க ளின்றி நகரைக் கைப்பற்றியது அரச படைகளுக்கு வெட்கத்திற்கு மேல் வெட்கமாய் இருந்தது. இடம்பெயர்ந்த மக்களுக்காக ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலர் புட்ரோஸ் புட்ரோஸ்காலி இரக்கத்துடன் விடுத்த பெருந்தன்மையான வேண்டுகோளுக்கு சிறீலங்கா அரசாங்கம் சினந்து, எதிர்த்தது. வெறிச்சோடிய நகரின் மத்தியில் வெற்றிக் கொடி பறந்தது. ஆனால் சர்வதேசத்தின் முன்னால், இவ் வரலாற்று முக்கியம் வாய்ந்த வெளியேற்றம் தமிழர் பிரச்சினை சர்வதேச மயப்படுத்தப்பட் டுவிடும் என்ற பயமும் பிறந்தது. ஆகையினால் யாழ் குடாநாட்டிலிருந்து வெளியேறியவர்கள் உண்மையிலே அகதிகளா, அல்லது இடம்பெயர்ந் தவர்களா? என்ற கேள்வியை எழுப்பி முட்டையில் மயிர் பிடுங்கியது. அவர்களைப் பற்றிய தொகைத் தகவல்களைப் பற்றியும் விசமத்தனமான தகவல்களைப் பரப்பியது. அரசசார்பற்ற நிறுவனங்களும் அரசஅதிபர் களும் வழங்கிய எண்ணிக்கையையே கேள்விக்குள்ளாக்கி, எந்தவித காரணமுமின்றி தமது எண்ணிக்கையையே சரியென்று முன்வைத்தது. இதனடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவார ணத்தை வழங்க அரசாங்கம் அனுமதிகளையும் மறுத்தது. இக்கட்டான நிலையிலும் கூட பெரும்பான்மையான தமிழ்மக்கள் உயிர்வாழ்வதற்கு உணவோடும் குடியிருப்பு உபகரணங்களோடும் உடன் உதவி வழங்கிய உள்நாட்டு, வெளிநாட்டு அரசு சார்பற்ற நிறுவனங்களின் முயற்சிகளை மறக்க முடியாது.

## 4.5 சொந்தக்காரரை வீட்டிற்குள் அழைக்கவும் ஒரு பொறித் திட்டம் தேவையா?

ஆறு மாதங்களின் பின் இடம்பெயர்ந்த மக்கள் மீது மீண்டும் இன்னுமொரு இராணுவ நடவடிக்கை 'மூன்றாம் சூரிய கதிர்' ஆரம்பிக் கப்பட்டது. இம்முறை இராணுவ நடவடிக்கைக்கு அறிவிக்கப்பட்ட நோக் கம் யாதெனில், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கோரப் பிடியிலிருந்து மக்களை மீண்டும் விடுவிப்பது ஆகும். என்ன நடந்தது? எவ்வாறு நடந்தது? என்ற உண்மையை அரசு கூறவில்லை. அரை மில்லியன் மக்க

ளின் மிகச் சோகமான இடம்பெயர்வை வெளியிடாத அரச தொடர்புச் சாதனங்கள் இப்போது அகதிகளின் திரும்பிவரவை வர்ணப் படமாக வெளியிட்டது. பயத்தினால் மக்கள் வெளியேறிய போதும், தெருவோரங் களிற் குடியிருப்புகளை தேடியபோதும், உயிர் வாழப் போராடியபோதும் இந்த தொடர்புச்சாதனங்கள் எங்கே இருந்தன?

வடக்கிலிருந்து தென்மராட்சிக்கு இராணுவம் முன்னேறியது. ஆயிரக்கணக்கில் மக்கள் இன்னும் தெற்கு நோக்கி கிளாலியைக் கடந்து வன்னிக்கு ஓடினார்கள். ஆனால் இம்முறை அரசாங்கம் இத்தப் பியோடுதலை முறியடிக்கத் திட்டம் தீட்டியிருந்தனர். கிளாலிக் கடலோ ரத்தில் தரித்து நின்ற வள்ளங்களை வானிலிருந்து குண்டு வீசி அழித்தது, பல பொதுமக்களைக் கொன்றது. இதனால் பீதியடைந்த மக்களுக்கு உயிர்தப்ப வேறுவழி இருக்கவில்லை. ஒன்றில் தென்மராட் சிக்கு இடம்பெயர்ந்ததினால் ஏற்பட்ட கடினவாழ்வைத் தொடர்ந்தும் ஏற்கவேண்டும் அல்லது தங்களின் உடைந்த இல்லங்களுக்குத் திரும்ப வேண்டும். மக்கள் கடின வாழ்வின் எல்லைக்கு தள்ளப்பட்டதினால் மனம் வருந்தியவர்களாகச் சொந்த வீட்டிற்குத் திரும்பினர். இப்படித் திரும்பி வந்ததை இராணுவ வெற்றியாக அரசு கொண்டது. மக்கள் வெளியேறிய பொழுது தொகையைக் குறைத்துக் கூறிய அதே அரசு, யாழ் திரும்பிய தொகையைப் பன்மடங்காக்கி கூறியது. அவர்கள் தந்த தரவுகளைப் பார்க்கும்பொழுது இடம்பெயர்ந்த மக்கள் ஆறு மாதங்களில் இரட்டிப்பாகிவிட்டார்களா என்ற அதிசயம் எமக்கு வருகின்றது.

இடம்பெயர்ந்த மக்கள் யாழ்ப்பாணம் திரும்பிப் போனதைப்பற்றி ஒன்று தெளிவாக உலகத்திற்குத் தெரியவேண்டும். இயற்கையான இல்லிடங்கள் இராணுவ அட்டூழியத்தினால் அழிக்கப்பட்டன. ஆறு மாதகாலமாக உணவு, உடை, இல்லிடம் போன்றவற்றில் மிகவும் கடினமான சூழ்நிலையில் உயிர் வாழ்ந்தவர்கள் கிடைத்த முதற் சந்தர்ப்பத்தில் மிகவும் மோசமாக அழிவுற்ற அல்லது களவாடப்பட்ட இல்லங்களுக்குத் திரும்பியதில் அதிசயம் ஏதுமில்லை.

## 5 தமிழர் பிரச்சினையைப் பயங்கரவாதப் பிரச்சினையாகக் கையாள்வது தமிழரின் சமாதானத் துக்கான உரிமையை மறுப்பதாகும்.

மேற்குறிப்பிட்ட கருத்துரையின் பின்னணியில், சிறீலங்காவின் ஆட்சியிற் தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்களின் கவனயீனத்தினால்

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டவில்லை. மாறாக அடிப்படை உரிமை மறுத்தல்கள் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு, தமிழ்மக்களின் ஜனநாயக அகிம்சைப் போராட்டம் அரசாங்கத்தின் முப்பதாண்டுப் பயங்கரவாதத்தினால் (1956–1983), ஆயுதப்போராட்டத்திற்குத் தள்ளப்பட்டது. ஜனநாயகமுறைப்படி நடந்த பாராளுமன்றத் தமிழர் போராட்டம், பயனளிக்காததால் அகிம்சைத் தன்மையையும் ஜனநாயக கட்டமைப்பையும் கடந்து உயிர் உடமையின் அழிவுதரும் போராகப் பரிணமித்தது. தமிழரின் சமாதானத்துக்கான அடிப்படை உரிமையை இவை யாவும் மறுக்கின்றன.

1983ம் ஆண்டு தமிழருக்கு எதிராகச் சிறீலங்கா முழுவதும் நடந்த இன அழிப்புக் கொலைகளை உலகம் மறவாது. இச் சர்வதேச கருத்துருவத்தை மீளமைக்க சிறீலங்கா அரசுக்கு உரிமை உண்டு என எல்லாரும் ஏற்றுக்கொள்வர். ஆனால் அதை மீளவும் தமிழருக்கெதிராக, அவர்களுக்குரிய உண்மைக்கும் நீதிக்கும் எதிராகச் செய்வது சரியல்ல. தமிழரின் ஆயுதப்போராட்டத்தின் விளைவை ஒரு பட்சமாக அதிகப்படுத்தித் தமிழருக்கெதிரான இராணுவ பயங்கரவாதத்தை சர்வதேச அரங்கில் நியாயப்படுத்துவதில் அரசாங்கம் தற்காலிக வெற்றி காணலாம். ஆனால் இவை அனைத்தும் அரச பயங்கரவாதமென்பதை இலகுவில் மறுக்க முடியாது. ஆனால் அரசாங்கத்தின் பொய்ப்பிரச்சாரத்தின் விளைவாகத் தமிழர்கள் பயங்கரவாதிகள் என்றும், போரை விரும்புபவர்கள் என்றும் பொய்யான கருத்துருவம் சர்வதேச ரீதியில் உருவாக்கப்படுகின்றது.

## 6. மக்களின் உள்ளத்தையும் உணர்வையும் களவாடும் சதித்திட்டம்.

இன முரண்கையை தீர்க்க வேண்டுமானால், தமிழ் மக்களின் புண்படுத்தப்பட்ட உள்ளங்களையும் உணர்வுகளையும் தாம் வெல்ல வேண்டும் என்பதே சிறீலங்கா அரசு அடிக்கடி தெரிவிக்கும் நோக்கமாகும். தமிழர்களாகிய நாம் கடந்த கால நீண்ட கொடூரமான அனுபவங்களின் அடிப்படையில் இந்த நோக்கத்தின் மட்டில் மிகவும் சந்தேகமாக இருப்பதில் வியப்பேதுமில்லை. எமது நிலை சரி என்பதை இன்று வடக்கில் நடைபெறும் பல நிகழ்வுகள் தெளிவாக நிருபிக்கின்றன. வெளியே கூறமுடியாதிருந்தாலும், தமது தொகுதி வாக்காளரின் உள்ளத்தையும் உணர்வையும் வென்றெடுப்பது எல்லா அரசியல் வாதிகளின் நோக்கமாகும். இதை அரசு செய்யமுற்படும்போது, அதிலும்

கூலிப்படையினரின் உதவியுடன் முயலும்போது, உள்நோக்கத்தை சந்தேகிக்காமல் வேறு என்ன செய்ய முடியும்? நீண்ட காலம் தன் மனைவியை கொடூரமாக வதைக்கும் கணவன் சடுதியாகச் சில கவர்ச்சி வசனங்களைப் பேசிச் சில சில்லறைச் சலுகைகளையும் வழங்கினால், அவனுடைய செயலைச் சந்தேகிப்பதே புத்திசாலித் தனத்தின் ஆரம்பமாகும்.

பல ஆண்டுகளாக வடகிழக்கின் அபிவிருத்திக்கு வெளிநாடுகள் அளித்த உதவியைத் தடை பண்ணிவிட்டு, கடந்த ஆறு வருடங்களாக மனிதாபிமானமற்ற பொருளாதாரத் தடையினால் தமிழ் மக்களின் உயிருக்கு இன்றியமையாத தேவைகளையும் மறுத்து விட்டு, இன்று சில மேல் நாடுகளால் வழங்கப்பட்ட இரக்க நிதியைக் கொண்டு அரசு கொடைவள்ளல் உருவத்துடன் நிவாரணத்திற்கும் புனர் நிர்மாணத்திற்கும் வடக்கிற்கு விரைவதேன்? பசிக் கொடுமையால் விழுத்தப்பட்டவர்கள் தன் அடிப்படைத்தேவைகளால் வாழ்வின் விளிம்புக்குத் தள்ளப்படுகின்றனர். அவ்விதமே மக்கள் தம் அடிப்படைத்தேவைகளை, உரிமைகளைத்தன்னும் சலுகைகளாகப் பெற்று தற்காலிகமாக ஆறுகின்றனர். இது சூழ்நிலையின் விதியாயிற்று. இதை இராணுவ ஆட்சியில் மக்கள் இருக்க விரும்புகிறார்கள் என்று அர்த்தப்படுத்திப் பிரச்சாரம் செய்வது உண்மைக்கு முரணானது.

இன்றைய நிலையில் போரினால் களைப்படைந்து வாழ்வின் ஓரங்களிற் தவிக்கும் மக்களின் உள்ளத்தையும் உணர்வையும் வென்றெடுக்கும் பாரியபொறுப்பு இராணுவத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. சில புன்னகையும், தமிழில் சில நல்ல வார்த்தைகளும், ஆரம்பத்தில் சில நாட்களுக்கு அதிர்ச்சியான கவர்ச்சியாக இருந்தன. மறு பக்கத்தில் அரச படைகளின் ஆயுதங்களிலிருந்து உயிர் தப்பிய தமிழரின் நன்றி வார்த்தைகள் களைப்படைந்த இராணுவத்துக்குக் களிப்பூட்டி இருக்கலாம். இப்படி இராணுவத்தின் மறைக்கப்பட்ட நிகழ்ச்சிநிரலால் சடுதியாக உருவாக்கப்பட்ட சூழ் நிலைகளும் உறவுகளும் நிலைத்து நிற்க முடியாது. தமிழருக்கு எதிராய்ப் போராடவும் அழிக்கவுமே சிறீலங்காப் படையினர் சேர்க்கப்படுகின்றனர். அந்நோக்கிலேயே பயிற்சி பெறுகின்றனர். அப்படி ஏவப்பட்டவர்களை ஒரே நொடியில் மக்கள் உள்ளத்தையும் உணர்வையும் கவரும் சமாதான தூதுவர்களாக மாற்றுவது முடியாத காரியம். வழமையாகக் குண்டு போட்டுத் தமிழரையும் அவர்களின் சொத்தையும் கொன்றொழித்தவர்கள், தமிழ் மக்களின் உள்ளத்திலும் உணர்விலும் நிலையான பயத்தையும் நடுநடுக்கத்தையும் புகுத்தியவர்கள், சடுதியாக நல்லுறவு நண்பர்களாக, பரிசுகளை வழங்கும் கொடை

வள்ளல்களாக எப்படி மாறுவது? ஆகையால் அவர்களின் முயற்சியில் மறைமுகமான சூழ்ச்சி ஒன்று இருக்கின்றது என்பது ஐயம் ஏதுமின்றி தெட்டத் தெளிவாகின்றது.

சண்டைபிடிக்கவும் கொல்லவும் சேர்க்கப்பட்டு, பயிற்சியளிக்கப் பட்டு. ஏவப்பட்ட இராணுவம் சமாதானத்தை உருவாக்குபவர்களாக எவ் வாறு மாற முடியும்? ''சமாதானத்திற்கான போர்'' என்று அரசு பிரச்சாரம் செய்து வரும் நோக்கம் என்னவென்றும் அதன் அந்தரங்க அர்த்தம் என்னவென்றும் இப்போது மேலும் தெளிவாகின்றது. அரசியல் தீர்வுக்கு முந்திய ஆயத்தக்கட்டம் இது அல்ல. ஏற்கனவே அரசினரால் தயாரிக் கப்பட்டு, பெரும்பான்மையினரால் விவாதிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட ஒரு தீர்வை, விரும்பமில்லாத மக்களின் தலையில் இராணுவ அழுக் கத்துடன் சுமத்திவிடஅரசு விரும்புகிறது. இது தமிழர் பிரச்சினைக்கு அரசாங்கம் அளிக்கும் சுத்த இராணுவத் தீர்வேயாகும்! சண்டை நிறுத் தப்பட்டு இராணுவம் மக்களின் ஆட்சி அதிகாரத்தைப் பொறுப்பேற்கும் படலமாகும். சமாதானமான சூழலில் வாழவும் நம்மையே நாம் ஆட்சிபுரி யவும் எங்களது உரிமையைக் கேட்டோம். ஆனால் சிறீலங்கா அரசோ, ஒன்றில் இராணுவ நடவடிக்கை அல்லது இராணுவ ஆட்சி, இரண்டில் ஒன்றை தேர்ந்து கொள்ளும்படி அரசு நம்மை ஒரு பெருந்தன்மைப் போர்வையோடு அழைக்கின்றது!

## 7. சமாதானம் என்பது உண்மையும் நீதியும் சேர்ந்தளிக்கும் கனி.

சமாதானம் என்பது, நடந்து கொண்டிருக்கும் சிக்கலான வர லாற்று நிகழ்வுகளை உண்மையாக யதார்த்தமாகப் புரிந்து, ஏற்று அவை களுக்கு நீதியுடனும் நேர்மையுடனும் முடிவு தேடும்போது கிடைக்கும் வெற்றி. இப்படி நாம் சமாதானத்தைச் சரியாகப் புரிந்து கொண்டால், சமாதானத்தை உண்மையாகவே நேசிப்பவர்கள் அனைவரும் எந்நிலை யிலும் அநீதியையும், பொய்மையையும் விலக்குவர். இன்றைய திருத்தந் தை இரண்டாம் அருள் சின்னப்பர் தனது சமாதானத் தினச் செய்தியில் உலகிற்கு விடுத்த ஓர் முக்கிய வேண்டுகோள் என்னவென்றால்: ''சமாதானம் வேண்டுமானால் நீதிக்காக உழையுங்கள்''.

எல்லோரும் சந்தேகமின்றி சமாதானத்தை நேசிப்பவர்கள்தான். ஆனால் சிலர்தான் உண்மையில் சமாதானத்திற்காக உழைப்பவர்கள். எல்லோரும் போரையும் வன்முறையையும் வெறுப்பவர்கள்தான். ஆனால்

சிலர்தான் போருக்கும் வன்முறைக்கும் காரணமான வேர்களை அகற்ற முன்வருவார்கள். சமாதானம், நீதி, உண்மை இவைகளுக்காக உதட்டினால் மட்டும் உழைப்பது போதாது. ஓர் வகையில் அப்படி செய்பவர்கள், உதட்டினால் மட்டும் உரக்கக் கூறி விட்டுச்செயலின்றி நிற்பவர்கள், வெறும் போலிகள். மதத்தலைவர்களும் இந்த போலித்தன்மைக்குள் இலகுவாக உள்ளாகலாம்.

சமாதானத்துக்கு அவசியம் தேவையான அம்சங்கள்: உண்மை, யதார்த்தம், நீதி, நேர்மை. இன்றைய நீடிக்கப்பட்ட போர் வன்முறைச் சூழலில், இவ்வம்சங்களைப் பரப்புவதும் நிச்சயப்படுத்துவதும் நாட்டின் எல்லா மதத்தலைவர்களின் மறுக்க முடியாத கடமையாகும். மதங்கள் கற்பிப்பதை இன்றைய காலகட்டத்தின் யதார்த்தத்திற்குக் கருத்தும் பொருத்தமுமான முறையில் விளக்கிக் கூறுவது மதத்தலைவர்களின் கடமையாகும். காலத்தின் அறிகுறியை உணர்ந்து, எல்லா மனிதருக்கும், விசேடமாகப் போரினாற் துன்பப்படும் மானிடத்திற்கு, மகிழ்ச்சி பெறும் வழியைக் காட்ட வேண்டும். சுருங்கக் கூறின், மதத் தலைவர்கள் இனப் பிரச்சினையின் வரலாற்றையும் இன்றைய நிகழ்வுகளையும் காரணங்களையும் உண்மையுடன் வெளிப்படுத்தி, உண்மைக்கும் நீதிக்கும், உயிர் இழப்பினும், துணிந்துநின்று குரல்கொடுக்க முன்வரவேண்டும்.

இலங்கையின் நான்கு மதங்களும் சமாதானத்திற்கு இன்றியமையாத விழுமியங்களான உண்மையையும் நீதியையும் தெளிவாக முன்வைக்கவேண்டும். பல மதத்தலைவர்கள் தீமையை தெளிவாகக் காண்கிறார்கள். ஆனால் அவைகளுக்கெதிராய் வெறும் மறுப்புத் தெரிவிப்பதோடு நின்று விடுகின்றனர். மக்கள் அனுபவிக்கும் அநியாயத்தையும் ஒடுக்குமுறைகளையும் துணிவோடு ஆராய அவைகளின் தொடக்க மூலங்களுக்குச் செல்வதில்லை. உதாரணமாக, அண்மையில், பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போது வணக்கத்துக்குரிய படித்த பௌத்த பிக்கு ஒருவர் ''இது பௌத்த சிங்கள நாடு'' என்றும், ''தமிழர் பிரச்சினை போரினால் தீர்க்கப் படவேண்டும், எனவே யுத்த அமைச்சருக்கு இதைச்செய்ய சகல அதிகாரமும் வழங்கப்பட வேண்டும்'' என்றும் தயக்கமின்றி வெளியிட்டார். இவ்வகையான மதத் தலைவர்கள் நாட்டை அமைதிக்கு அல்ல அழிவுக்குத்தான் இட்டுச் செல்லமுடியும்.

## 8. சமாதானத்திற்கான உரையாடலின் அறிகுறிகள்

நாம்,போரினிலோ வன்முறையிலோ அல்ல உரையாடலிலேதான் சமாதானம் கிடைக்குமென்ற நம்பிக்கை கொண்டவர்கள். திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் தனது சமாதான தினச் செய்தியிற்

கூறியதொன்றை மீண்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ''உரையா டலே சமாதானத்துக்கான ஒரே வழி, அதற்கு முன் ஏற்பாடாக நிகழ்வு களின் உண்மையைத் தேடுவது இன்றியமையாதது".

உண்மைக்காக சிறீலங்கா அரசு காட்டும் மதிப்பும் கடமை உணர்வும் என்ன? வரலாற்றுச் சம்பவங்களின் உண்மையை ஆர்வத் துடன் மூடி மறைப்பவரும் உண்மை அடையும் வழிகளை தடுப்பவரும் சமாதானத்தின் நோக்கத்திற்காகச் செயற்படுபவராக இருக்க முடியாது.

பத்திரிகையாளர் தடை, போர்வலையத்தினுள் பத்திரிகையாளர், வெளிநாட்டு அரச ஆலோசகர்கள் உட்செல்ல முடியாத தடை, துன்பப் படும் மக்களுக்கு பணியாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேல் விடுக்கப்படும் தடுப்பு, யாழ் குடாநாட்டில் இராணுவ ஆக்கிரமிப்பு இவை அனைத்தும் சிறீலங்கா அரசின் இராணுவ போக்கையே சுட்டிக் காட்டு கின்றது. அரசின் அணுகு முறையானது அரசியல் தீர்வும் போரும் அடங் கிய இரு வழிமுறையாக இருக்கும் என அரசு முன்னர் தெரிவித்து வந்தது. ஆனால் தற்போதைய நிகழ்வுகள் முழுக்க முழுக்க இராணுவ அணுகுமுறையே என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளது. தமிழர் உரிமைப் பிரச்சினைதான் இப் போருக்கு ஆரம்பகாரணம் என்பதை மறுத்து, தமிழர் உரிமைப் பிரச்சினையை மூடிமறைத்து, இது வெறும் பயங்கரவாதமே என அப்பட்டமான பொய்யைப் பிரச்சாரம் செய்து தனது போரை நியாயப்படுத்த அரசு முனைகின்றது.

வன்னிப் பகுதியில் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிவாரண, புனருத்தார வேலைகளின் மட்டில் அரசு காட்டும் மனப்பான்மையும், நடந் துகொள்ளும் விதமும் அரசின் சதித்திட்டத்தின் இன்னுமொரு சுயரூபத் தை எடுத்துக் காட்டுகின்றது. அரசு சார்பற்ற நிறுவனங்கள் தங்கள் அலுவலகங்களை வடமாராட்சி தென்மராட்சி வன்னிப் பகுதிக்கு இடம் மாற்றி மக்களின் உடனடித் தேவையைக் கவனிக்க முயன்றார்கள். ஆனால் இவர்களுக்குத் தேவையான தொடர்புச்சாதனக் கருவிகளோ அல்லது நிவாரணத்தை தெற்கிலிருந்துகொண்டுபோகவோ அனுமதி மறுக்கப் படுகின்றது.

மக்களின்றிய பிரதேசமான யாழ் நகர் மீதான இராணுவ வெற் றிக்குப்பின், குடா நாட்டில் பிடிபட்ட மக்களை மீண்டும் கொண்டுவர வெளிநாட்டு உதவியுடன் பெற்ற சில அடிப்படைத் தேவைகளை தற் போது வழங்கி, தனது அரசியற்தீர்வை சுலபமாகத் திணிக்கும் திட்டம்

தோன்றுகிறது. சுருக்கமாகச் சொன்னால், சர்வதேச மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைக்கும் சர்வதேசரீதியில் எழுப்பப்படும் கோரிக்கைக்கும் செவிகொடுக்காமல், மக்கள் மத்தியில் தோன்றியுள்ள தலைமைத்துவத்தை பலவீனப்படுத்தி அல்லது அழித்து விட்டு, அடிமையாக்கப்பட்ட மக்களுக்குச் சில பரிசுகளை வழங்கித் தமிழ்ப் பிரச்சினைக்கு தன் தீர்வை திணிக்க எண்ணுகின்றது.

## 9. எமது வேண்டுகோள்: உண்மைக்கும் நீதிக்கும் இடம் கொடுங்கள்!

சமாதானத்தை நேசிக்கும் ஒரு கண்டத்தின் தலை நகரிலிருந்து, எனது மக்கள் பெயரால் சமாதானத்திற்காக ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். இதை நான் ஓர் அரசியல் தலைவனாகச் செய்யவில்லை. ஆனால் உரிமைகள் மறுக்கப் பட்டு, போருக்குள் அகப்பட்டு அல்லல்ப்படும் மக்கள் சார்பில் வேண்டுகின்றேன், நீதியான சமாதானத்திற்கு ஏங்கும் மக்கள் சார்பில் வேண்டுகின்றேன், வெளி உலகத்தோடு தொடர்பு மறுக்கப்பட்ட மக்களின் சார்பில் வேண்டுகின்றேன், இன ஒழிப்பு முயற்சிகளுக்கெதிராய்ப் போராடி உயிர்வாழப்போராடும் மக்கள் பெயரால் வேண்டுகின்றேன், தகுந்த உணவோ, மருத்துவசதியோ, போக்குவரத்தோ, தொடர்புச்சாதன வசதியோ இன்றி வாடும் மக்கள் பெயரால் வேண்டுகின்றேன். சுதந்திரம். மாண்பு, உண்மை, நீதி போன்ற உயர்ந்த மதிப்பீடுகளுக்காக உயிரைக் காணிக்கையாக்கிய ஆயிரக் கணக்கான இளைஞர் பெயராலும், சிறீலங்காவின் எதிர்காலச் சந்ததியின் பெயரால், சிறீலங்கா அரசையும் அதற்கெதிராகப் போராடிக் கொண்டிருக்கும் தமிழ்மக்களின் தலைமைத்துவத்தையும் ஏன், சிறீலங்காவின் எல்லா அரசியல் கட்சிகளையும் வேண்டுகின்றேன்.

1. **மக்களின் உயிர்களோடு அரசியல் விளையாட வேண்டாம்.**
2. **சமாதானத்துக்கான போர் என்ற அர்த்தமற்ற போரை உடனடியாக நிறுத்தி விடவும்.**
3. **வடக்குக்கான பொருளாதாரத் தடையை உடனடியாக நீக்கி விடவும்.**
4. **பத்திரிகைத் தணிக்கையை நீக்கி, பத்திரிகையாளரும் போர் வலயத்துள் பயணம்செய்து வர**

லாற்று, யதார்த்தமான உண்மைக்கு திறந்த மனத்துடன் சேவை செய்யப் பத்திரிகைத் தணிக்கையை உடன் நீக்குக.

5. சமாதானப் பேச்சு வார்த்தையைத் தொடங்குவதற்கேற்ப இராணுவ சூழ்நிலையை உருவாக்குக.
6. பேச்சுவார்த்தை மேசைக்கு உடன் திரும்புக.
7. பேச்சுவார்த்தைக்கு உதவ அல்லது மத்தியஸ்தம் வகிக்க நடுநிலையான, நட்புறவுடைய அரசிற்கோ, அல்லது அரசு சார் நிறுவனத்திற்கோ அழைப்பு விடுக்க.

துன்புறும் மக்களின் பணியில், ஓர் இறை மனிதனாக உங்கள் முன் நிற்கிறேன். இறைவனதும் மக்களினதும் நன்மைத்தனத்தில் நம்பிக்கை கொண்டவனாக வேண்டுகின்றேன். புனிதமான உயிர்களைப் பலியெடுத்துக் கொண்டிருக்கும் ஆயிரக் கணக்கான குண்டுகள், எறிகணைகள் எமது காதுகளைச் செவிடாக்கி எம்மை அதிர்ச்சியில் தள்ளுகின்றன. இந் நிலையில் தான், பழைய ஏற்பாட்டு மோயீசன் போல் நானும்

**எனது மக்களை அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரமாய் போக விடுங்கள்**

என்று அவலக் குரல் எழுப்புகின்றேன்.

*ஆயுதம் ஏந்தியவன் தனது இலட்சியத்திற்கு எதிரியெனக் கருதப்படும் சிலருக்குச் சாவை விளைவிக்கலாம். அது வருந்தத்தக்கது. ஆனால் ஜனநாயக முறையிற் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி தான் எடுக்கும் பிழையான தீர்மானத்தால் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிரிழப்பையும் அழிவையும் உருவாக்குவது மன்னிக்க முடியாதது.*

# உண்மை விடுதலையளிக்கும்

1996ம் ஆண்டு செப்ரம்பர் 26–27ம் திகதிகளில் லண்டன் ஈலிங் நகர மண்டபத்தில் தமிழரின் சுய நிர்ணய உரிமை பற்றிய சர்வதேச மகாநாட்டில் ஆற்றிய உரையின் தமிழ் வடிவம்

## 1. விடுதலை தரும் உண்மைக்காக ஒரு சாட்சியம்

சிறீலங்கா திருச்சபையின் பொறுப்புணர்வுமிக்க ஒரு கத்தோலிக்க குரு என்ற மட்டிலும், பல ஆண்டுகளாகச் சிங்கள நண்பர்களோடு படித்தவன் பணிபுரிந்தவன் என்ற மட்டிலும், இப்போது முழுமையான அழிவுக்குரிய இப்போரினாலும், சிறப்பாகக் கடந்த பத்துவருடங்களாகப் போர்ப் பகுதிகளில் மனிதமற்ற பொருளாதாரத் தடையைச் சுமப்பதனாற் பாதிக்கப்பட்டவன் என்ற மட்டிலும், இன்று வடக்கில் இடம்பெறும் கொடூரமான நிகழ்வுகளுக்கும் மனித உயிருக்காகப் போராடுவோரின் சோகமான அழுகைக்கண்ணீருக்கும் நான் சாட்சியம் பகர விரும்புகின்றேன். உலகம் உண்மையை அறிய முடியாமல், எல்லா தொடர்புச்சாதனங்களுக்கும் மூடப்பட்ட நிலையில் போர் நடந்து கொண்டு இருக்கின்றது. வடக்கிலிருந்து, மூடப்பட்ட கதவின் பின்னாலிருந்து வந்தவன் என்ற மட்டில் எனது சாட்சியம் முக்கியமானது. இச் சாட்சியத்தினால் யாரையும் புண்படுத்த, அதாவது சிறீலங்கா அரசைத் தன்னும் புண்படுத்த, நான் விரும்பவில்லை. மாறாக உண்மையாகவும் உள்ளத்தூய்மையுடனும் சாட்சியம் பகருவதனால் சிறீலங்காவில் வசிக்கும் எல்லா மக்களுக்கும் நீதியான சமாதானம் கிடைக்க வேண்டுமென்றே விரும்புகின்றேன். உண்மை விடுதலை கொடுக்குமேயன்றி எவ்வித துயரத்தையும் கொடுக்காது என்று கிறிஸ்தவன் என்ற மட்டில் உறுதியாக நம்புகின்றேன்.

## 2. மதத் தலைவர்கள் சமாதானம் செய்பவர்களாக மாறட்டும்

ஒரே நாட்டில் பல்லின, பல்மத மக்களாக சமாதானமாக ஒன்றித்து வாழ வேண்டுமானால், எமது மதங்கள் ஊக்குவிக்கும் அன்பு, நீதி, சமாதானம் ஆகிய விழுமியங்களை எமது இன உணர்ச்சி ஆட்கொள்ள அனுமதிக்கக்கூடாது என்று நான் நம்புகிறேன். நாம் சிறுபான்மையைச் சேர்ந்தவர் என்ற பயஉணர்வினால் உந்தப்பட்டு எமது இனத்தையோ மதத்தையோ மறைக்க வேண்டியதில்லை. பிறப்பில் இனாமாகப்

பெற்றுக்கொண்ட பண்பாட்டுச் செல்வங்கள் இல்லாதவர்கள் போல், இன அடையாளத்தை மறைத்து, ஏதோ சர்வதேசத் தன்மையுள்ள பிராணிகள் போல் பேசவும் செயற்படவும் தேவை இல்லை. கடவுள் கொடுத்த கொடையான விசுவாசத்திற்கு நன்றியாகவும் பெருமையாகவும் இருப்பதுபோல், அதே கடவுள் தந்த எமது மண்ணையும், மொழியையும, பண்பாட்டையும், மெய்யியலையும் நன்றியோடு ஏற்றுப் பெருமைகொள்ள வேண்டும். இன, மத அடையாளங்களை, ஒன்றுக்கொன்று எதிராகவோ முரணாகவோ கருதாது, இரண்டையும் ஒன்றோடொன்று இசைவாக்கி, மற்றவர்களோடு நாம் கொண்டிருக்க வேண்டிய ஒற்றுமைக்கு எமது மத உயர் மதிப்பீடுகள் ஒளியாகவும் பலமாகவும் பயன்பட வேண்டும்.

மேற் கூறிய அடிப்படையில்தான், **1995** ஆண்டு ஜனவரி மாதம் சிறீலங்காவுக்கு வருகை தந்த திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் சகல மதத் தலைவர்களையும் நோக்கி: '***சமாதானமும் ஒற்றுமையும் பிறக்க உங்கள் மதங்களில் உறைந்திருக்கும் உள்சக்திகளைப் பாவியுங்கள்***' என்றார். சிறீலங்காவிலுள்ள நான்கு உலக மதங்களிலும் சமாதானத்திற்கும் ஒற்றுமைக்குமான ஆன்மீகதளங்கள் நிறைய உண்டு என்பதை யார் மறுப்பர்? ஆனால், இவ் உயர் நோக்கத்திற்காக இவ் வளங்கள் போதியளவு பயன்படுத்தப் படாதது மிக வருந்தத்தக்கது. சமாதானத்தையும் ஒற்றுமையையும் உருவாக்க அழைக்கப்பட்ட மதத் தலைவர்களே சில வேளைகளில் சமாதானத்துக்கும் ஒற்றுமைக்கும் எதிராக மத அதிகாரத்தினால் போரையும் அழிவையும் தூண்டி வருகின்றார்கள் என்பது கவலைக்குரியது.

எமது நாட்டின் மதத் தலைவர்கள், முன்னர் இல்லாதவாறு ஆன்மீக மதிப்பீடுகளின் உள்சக்திகளைப் பேணி, நம் பிரச்சினைக்கு இராணுவ முடிவையும், குறுகிய சிங்கள தேசிய வாதத்தைத் தூண்டாமல், நாட்டின் உண்மையான சமாதானத்தையும் ஒற்றுமையையும் பேணுவார்களாக. எமது விசுவாசத்தின் உயர் மதிப்பீடுகளை போதிப்பது மட்டுமல்ல உயர் மதிப்பீடுகளான உண்மை, நீதி, சமாதானத்திற்கு இறைவனின் பலத்துடனும் சுய–அர்ப்பணிப்புடனும் துணிந்து செயற்பட வேண்டும்.

## 3. தமிழர் நிலைப்பாடு

சிறீலங்காவில் நடந்த அண்மைக்கால நிகழ்வுகளை உன்னிப்பாகப் பார்த்துப் படித்து வந்தவன் என்ற மட்டில், நீண்டகால போராட்

டத்தின் விளைவாகத் தமிழரிடையே வளர்ந்து வரும் நிலைப்பாட்டையும் உறுதிப்பாட்டையும் சுருக்கமாகத் தரவிரும்புகின்றேன். இனப் பிரச் சினை என்று ஒன்று இந் நாட்டில் இல்லை, இருப்பது பயங்கரவாத பிரச்சினைதான், அதுவும் தமிழ் பயங்கரவாதப் பிரச்சினைதான், என்று கூறு பிரச்சினையை மறுத்து அதற்குத் தீர்வுகாண விரும்பாதவர்களும் இன்னமும் சிறீலங்காவில் உண்டு. நாற்பது ஆண்டு காலப் போராட் டதின் பின்னும் கூட, சாவும், அழிவும், ஒடுக்குமுறையும், இடம்பெயர்வும் இவை அத்தனையும் பயங்கரவாதமே தவிர வேறு எதுவுமில்லை என்று கூறும் குருடர் இன்னும் நம் மத்தியில் உண்டு. இவர்களோடு உரையாடுவது இயலாது, பயனுமில்லை. இச்சிறுபான்மையிரைத் தவிர்த்து மேல்வாரியாகப் பார்த்தால் நாட்டில் பிரச்சினை உண்டு, அதைத் தீர்க்க முயற்சிவேண்டும் என எண்ணுபவர்கள் பெரும் பான்மையானவர்கள் என நினைக்கின்றோம். இவர்களோடு உரையாட முடியும், இவர்களுக்கு முரண்கையைத் தீர்க்க எனது அன்பான கோரிக் கையை விடுக்கிறேன்.

துன்பப்படும் தமிழ் மக்களிடையே தமது பிரச்சினையைப் பற்றிய நிலைப்பாட்டில் ஒற்றுமை தெளிவாக வளர்ந்து வருகின்றது. அத்துடன் நான் என்னையும் இணைத்துக்கொண்டு, உண்மைக்கான எனது சாட்சி யத்தை வழங்குகின்றேன். சிறீலங்காவிலும் சர்வதேச ரீதியிலும் நல் லெண்ணம் படைத்த சகல சமாதான விரும்பிகளுக்கும் நாம் விடுக்கும் அன்பான அறிவித்தலும் கோரிக்கையும் இதுவே.

## 4. சிறீலங்கா அரசின் சமாதானத்துகான போர் முரண்பாடானதும் எதிர்விளைவானதுமாகும்.

சமாதானத்துக்கான போர் என்பதையும் அதன் நோக்கத்தையும் எந்தவிதத்திலும், மனித கற்பனையாலும் கூட நியாயப்படுத்தமுடியாது. இருந்தும் இப் போர் பெரும்பான்மையான பௌத்த மத ஆசீர்வாதத்துட னும், நட்புறவான அரசுகளின் உதவியுடனும், நடாத்தப்படுவதாகக் கூறப் படுகின்றது. மூடிய கதவுகளுக்குப் பின்னால் நடைபெறும் போர் ஆயுதத் தால் மாத்திரமல்ல, உயிர்தப்பிப்பிழைக்கும் மக்களுக்கு உணவு, மருந்து வகைகள், குடியிருப்பு வசதிகள் மறுக்கப்பட்டு, அவைகளும் ஆயுதமாகப் பாவிக்கப்படுகின்றன. இச்செயல்கள் எமது பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வுகாணும் நோக்கம் அரசாங்கத்திற்கு உண்மையில் உண்டா என்று சந்தேகிக்கவைக்கின்றன. இவற்றை இனப்பிரச்சினைக்கான தீர்வு எனக் கூறிக்கொண்டாலும் அரசு பின்பற்றும் முறைகள் கவலைக்குரிய

னவாகவும் அவை அனைத்தும் எமது இன அழிவை ஏற்படுத்துவன போல்த் தோன்றுகின்றன.

பாராளுமன்ற மக்களாட்சி அமைப்புக்குள் தமிழர் பிரச்சினையை விளங்கி, அரசியற் தீர்வு காணத் தொடர்ந்து வந்த அரசுகள் தவறி விட்டன என்பது எல்லோரும் ஏற்றுக்கொண்ட உண்மை. இதன் பின் இன்றைய அரசு, விரக்தியடைந்த நிலையில், மனிதரால் விளங்கமுடியாத மனிதத்தன்மையற்ற முறைகளுக்குச் செல்லுகிறது. மக்களின் அடிப் படைத் தேவைகளை மறுத்தலும், அவர்களை அடிமைப்படுத்த அல்லது பணயமாக வைத்திருக்க முயலுவதும் இதனையே காட்டுகின்றன.

## 5. வெளியேற முடியாத இருட்டுப்பாதைக்குள் விரைகின்றோம்.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் யாராக இருந்தாலும், மக்களின் நேர்மையையும் பெருந்தன்மையையும் நாம் எந்த வேளைகளி லும் சந்தேகிக்கவில்லை. இத் துன்பத்தின் மத்தியிலும் மக்களோடு மக்கள், மனித மாண்பைப் பேணுவதோடு, அவர்களின் தாய் நாட்டில் சமாதானமான சகவாழ்வையும் விரும்புகிறார்கள். ஆனால் அதிகார பசி பிடித்த எமது அரசியல்வாதிகளும், தவறான தேசியவாதத்தினால் உந்தப்பட்ட சில மதவாதிகளும், இலாப நோக்குடைய தொடர்புச்சாத னங்களும் நாட்டையும், நாட்டு மக்களையும், வெளியேற முடியாத ஒரு இருட்டுப் பாதைக்குள் வழிநடத்தி சாவின் படுகுழிக்குள் மக்களைத் தள்ளுகிறார்கள்.

## 6. பகுத்தறிவு வாய்ந்த சுயநிலைக்கு நாம் திரும்ப வேண்டும்.

பல்வேறு மத இன மக்கள் சமாதானத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழும்படி, இறைவன் இவ் அழகான தீவைப் போதிய இயற்கை அழகுடனும் கலை வளங்களுடனும் எமக்குத் தந்துள்ளார். ஆனால் மனிதர்களாகிய நாம் கண்ணீரும் இரத்தமும் ஓடும் தீவாக இதை மாற்றியுள்ளோம். இந்நிலையை எப்படி மாற்றியமைப்போம்? அழிவுப் பாதையில் தொடராது ஆக்க வழிக்கு எவ்விதம் திரும்புவோம்? பகுத் தறிவு வாய்ந்த எமது சுயநிலைக்கும், மனித மாண்பு மதிப்பிற்கும், எமது மத விசுவாசத்தின் அடிப்படை உண்மைகளுக்கும் மீண்டும் திரும்புவத னால் மட்டுமே, நாம் உண்மையும் நீதியுமான சமாதான வழிகளுக்குத்

திரும்ப முடியும். சுயநல அரசியல் தலைவர்களினால் முன்வைக்கப்பட்டு மத வெறியர்களினால் ஊக்குவிக்கப்பட்ட மிதமிஞ்சிய பௌத்த சிங்கள தேசியவாதமும் எமது மனித, மத உறுதிப்பாட்டை அந்நியப்படுத்தி வைத்து, நாட்டைச் சீர்குலைத்துள்ளது. இவற்றை அவதானிக்கும் நாம் இனிமேலாவது மனம் தெளிந்து எமது சுயநிலைக்குத் திரும்புவோம்.

## 7. இனஅழிப்பு முன்னெடுப்பை நிறுத்தக் குரல் எழுப்புவோம்.

மக்களாற் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் அதிகாரத்துக்கு நாம் சவால் விடுக்க முனையவில்லை. ஆனால் தேர்தெடுத்த மக்களின் பெயரால் நாம் செயற்படுகிறோம் எனக் கூறிக்கொண்டு அதிகாரத்தை காக்கும் ஆவேசத்துடன் மனிதத்திற்கும் ஜனநாயகத்துக்கும் முரணான பல செயல்களில் விரைந்து செயல்படுகின்றது. நாட்டின் ஒரு பகுதி மக்களின் வாழ்வுக்கு இன்றியமையாத பல தேவைகளை மறுத்து, சமாதானத்துக்கான போர் என்ற தலைப்பில் பல்லாயிரக்கணக்கான மக்களின் சாவையும் அழிவையும் ஏற்படுத்தித் தங்கள் சொந்த வீட்டையும் உடமைகளையும் நிலத்தையும்விட்டு ஓடவைக்கிறது. இராணுவ நிலைகொள்ளலால் யாழ் குடாநாட்டு மக்களை அடிமைப்படுத்தியது மாத்திரமல்ல. அங்குள்ள வரலாற்று நினைவுச் சிலைகளையும், நூல் நிலையம் போன்ற பண்பாட்டுச் சொத்துகளையும், போர் நினைவுச் சின்னங்களையும், பெருமையுடன் வளர்த்த வளந்தரு தென்னை பனைமரங்களையும் ஆயிரக்கணக்கில் அழிக்கின்றது. இவைகளெல்லாம் ஒரு மக்களின் தாயகத்தை உருவாக்கும் யதார்த்தங்களை அழிப்பதாகும். இது இன அழிப்புச் செயலாகும். ஆகையால் எவ்வித தயக்கமின்றி சிறீலங்காவிலும், ஏன் உலகம் முழுவதிலுமேயுள்ள சகல உணர்வுள்ள, சமாதான விரும்பிகள் அனைவரும், இவ் இனக்கொலை நிகழ்வுகளை நிறுத்தும்படி குரல் எழுப்பவேண்டும்.

வளர்ந்து வரும் தமிழ் கோரிக்கைகளின் நிலைப்பாட்டில் ஒற்றுமை வளர்ச்சியையும், அக்கோரிக்கைகளைத் தெளிவாகத் துணிவுடன் முன்வைக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தையும் தவிர்த்துவிட்டு, தமிழ் மக்களையும் கோரிக்கைகளையும் நிறைவாகப் பிரநிதித்துவப்படுத்தாத சில குழுக்களின் உதவியுடன் பொருத்தமற்ற கேவலமான தீர்வு முயற்சிகளில் ஈடுபடுவது அரசின் இயலாக்கட்ட முயற்சியின் தெளிவான அடையாளமாகும். இப்பேர்ப்பட்ட

வழிகளில் அரசு தொடருமானால், சிறீலங்காவில் தமிழினம் அழிக்கப் படுவது மாத்திரமல்ல சிங்களவருக்கும் அயலிலுள்ள கோடிக்கணக்கான தமிழரிடையேயும் நிரந்தர பகைமையுணர்வு ஏற்றம்பெறும். அதனால் சிங்கள இனத்தின் வளர்ச்சியும் குன்றிப்போகும்.

சுருக்கமாகச் சொன்னால், தற்போதைய சமாதானத்துக்கான போர் என்ற தலைப்பில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளினால் நாம் எல்லோரும் மெதுவாக, ஆனால் நிச்சயமாக, தேசிய தற்கொலைக்கு இட்டுச்செல்லப் படுகின்றோம். எனவே சிங்களவரோ தமிழரோ, சிறீலங்காவிலுள்ள நிதானமாகச் சிந்திக்கும் அனைவரும், தமது ஞானத்தைப் பாவித்து இராணுவ போக்கைக் கைவிட்டுச் சமாதான வழிக்குத் திரும்பவேண்டும்.

## 8. அர்த்தமுள்ள தீர்வுக்கு அடிப்படையான சில விளக்கங்கள்

### 8.1 நீண்டகாலம் சிறீலங்காவில் வாழ்ந்ததன் காரணமாகச் சிங்களவர் தாம் ஒரு தனி இனமென்றும், சிறீலங்கா தம் தாயகமென்றும், உரிமையுடன் உணர்வது போல, ஈழத்தமிழரும் தாம் ஒரு தனி இனமென்றும் வடக்குக்கிழக்கு தம் தாயகமென்றும் அதே உரிமையுடன் உணருகின்றனர்.

தமிழ் அரசுகளின் வரலாற்று அடிப்படையில் மாத்திரமல்ல, தனித்துவமான வரலாறும் பண்பாடும் கொண்ட மக்கள் என்பதில் மட்டுமல்ல, காலனித்துவ ஆட்சியின் பின் கடந்த 40 ஆண்டுகளாக பெரும்பான்மைச் சிங்களவராலும் அவர்களது அரசுக்களினாலும் இழைக்கப்பட்ட ***சாவையும் அழிவையும் ஓர் இனமாக அனுபவித்ததனால்***, தமிழர் தாங்கள் ஒரு தனித்துவ தாயகம் கொண்ட தனி இனம் என்ற கோரிக்கையை உரிமையுடன் விடுக்கிறார்கள். சுதந்திரம் பெற்றதற்குப் பின் நாட்டில் வாழும் எல்லா இனங்களும் ஒரு ஐக்கிய நாட்டைக் கட்டியெழுப்ப நேரமும் அவகாசமும் இருந்தது. ஆனால் தமிழர்கள் மேலும் மேலும் கடுமையாகப் புறக்கணிக்கப்பட்டார்கள், ஒதுக்கப்பட்டார்கள். அவர்களது ஜனநாயக எதிர்ப்புகளும் போராட்டங்களும் மேலும் மேலும் சிங்கள இராணுவத்தின் ஒடுக்குமுறையைவிட வேறு

எதனையும் கொண்டுவரவில்லை. தமிழருக்கு எதிராக அரச பயங்கர வாதம் செயற்பட்டதென்பதை, வேறு எவருமல்ல, தற்போதைய ஜனாதி பதி சந்திரிகாவே ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அப்பயங்கரவாதம் எற்றம்பெற்றுத் தொடர்கின்றது.

தமிழர் மத்தியில் சிறீலங்கா அரசாங்கத்தின் செயலால் ஏற்பட்ட ஆயிரக்கணக்கான அப்பாவி உயிர்களின் இழப்பும், தமிழரின் சொத்து, நிலவள அழிவும் தெளிவாக எடுத்துக்காட்டுவது என்னவென்றால் பெரும்பான்மைச் சிங்கள அரசுகள் தமிழரை அடிமைப்படுத்தி அவர்கள் மேல் அவர்கள் விருப்பத்திற்கு மாறாக ஓர் *அநீதியான சமாதானத்தை* வலிந்து புகுத்தும் எண்ணம் கொண்டுள்ளது. அழிவுகளும், மரணங் களும் கலந்த துன்பவரலாறு அனைத்தும், தமிழர் சுயநிர்ணய உரிமையு டைய ஓர் தனித்துவமான மக்கள் என்பதற்கான திட மனோபாங்கை பலப்படுத்தியுள்ளது.

இலங்கை சிங்களவரும் தமிழரும் வாழும் ஒற்றை நாடு அல்லது தேசம் என எண்ணுபவர்கள், தங்கள் மனத்தில் பிரித்தானிய காலனித் துவம் விட்டுசென்ற ஓர் நிர்வாக ஐக்கியத்தையே கொண்டுள்ளார்கள். இதன் அடிப்படையில் முன்னைய ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜய துங்கா கூறியது போல், சிங்கள–தமிழ் உறவு மரம்–கொடி ஒற்றுமை அல்லது அதிகாரி–பணியாள் ஒற்றுமை அல்லது உடமையாள்–வாடகைக் காரன் ஒற்றுமை இப்பேற்பட்ட அடிமைத் தனத்தையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

நாட்டின் ஒற்றுமையைக் குலைக்கும் சவாலாக அமைவது இரு நாட்டினரும் அக்கம் பக்க அயலவர்களாக வாழ்வதல்ல, மாறாக ஒருவர் மற்றவருடைய தொண்டையைப் பிடித்து அடிமை உறவு ஏற்படுத்தி வாழ்வதாகும். சமஷ்டியமைப்பில் அதிகாரத்தைப் பகிர்ந்து சிங்களவரும் தமிழரும் சமாதானமான ஒற்றுமையுடன் வாழக் கூடிய அமைப்பை கட்டிப் பெலப்படுத்தக் கால அவகாசம் இருந்தது. ஆனால் அப்படிச் செய்யாது, பெரும்பான்மையினரின் கடுமையான எதிர்ப்பு இன்று கணக்கற்ற உயிர், உடமை இழப்புகளையும் தணிக்க முடியாத இனப்பகைமையையும் உருவாக்கியுள்ளது. இந்நிலையை ஓரளவு சீராக்கி நாட்டின் ஒற்றுமை யைக் காப்பாற்ற வேண்டுமாயின் அதிகார பரவலாக்கம் செய்யப்பட்டு இனங்களுக்கிடையிலான சுயாட்சி வழங்கப்படுதலே ஒரே ஒரு வழி.

## 8.2 தமிழர்களின் எதிர்காலத்தைப் பெரும்பான்மைச் சிங்கள அரசுகள் நிர்ணயிக்க முடியாது.

சுதந்திரத்துக்குப் பின் சிறீலங்காவின் பெரும்பான்மையான சிங்களவர்கள் தாங்கள் தான் இம்மண்ணின் மக்கள் என்ற உற்சாகத்துடன், புதிய நாட்டைக் கட்டியெழுப்பவும் தமது மதத்தைப் புதுப்பிக்கவும் சிறப்பான கடமையுண்டு என்று புத்துணர்வு கொள்வது அதிசயமான ஒன்றல்ல, உண்மையில் வரவேற்கத்தக்கது. உண்மையான சிங்கள தேசிய உணர்வை ஊக்குவிப்பதிலும் பௌத்தத்தின் சரியான இடத்தை நாட்டில் மீண்டும் அடைய மக்களை நெறிப்படுத்துவதிலும் பௌத்த குருமார் முன்னணிப் பொறுப்புடன் செயற்படுவதை யாரும் இலகுவாக விளங்கிக்கொள்ளலாம். ஆனால் இவை அனைத்தும், எவ்வளவுதான் சிறந்ததாகவும் உயர்ந்த இலட்சியங்களாகவும் இருந்தபோதிலும், இந்த நாட்டின் மற்றைய மத இன மக்களின் பேரிழப்பில் அமையக் கூடாது. சிறீலங்காவின் மத, இன சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளை மீறாமல், அவைகளையும் மதிப்பில் கொண்டே சிங்கள பௌத்த தேசிய முயற்சிகள் அமைய வேண்டும். இலங்கையில் 2000 ஆண்டுகளாக வாழ்ந்துள்ள தமிழர்களை நாட்டின் இரண்டாம் தரப் பிரசைகளாக அல்லது பிந்தி வந்தவர்களாக அல்லது இந்நாட்டில் வாடகைக்கு இருப்பவர்களாக மட்டும் கணிப்பது அநீதியும் மடமைத்தனமுமாகும்.

## 8.3 தமிழர் போராட்டத்தை வெறும் பயங்கரவாதமென கொச்சைப்படுத்தல், நாற்பதாண்டுகளாக நடைபெறும் போராட்டத்தின் வரலாற்று உண்மையை அரக்கத்தனமாக மறுப்பதாகும்.

அடிப்படை உரிமைக்கான தமிழர் போராட்டம், 1956ம் ஆண்டு தொட்டு கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேற் தொடர்கிறது. தெற்கிலிருந்த பெரும்பான்மைச் சிங்களக் கட்சிகள் தமிழரின் நியாயமான கோரிக்கையை உதாசீனப்படுத்தி அப்பிரச்சினைகளுக்கு உகந்த அரசியற் தீர்வு காணத் தவறியது மாத்திரமல்ல தமிழரின் ஜனநாயக போராட்டத்திற்கெதிரான ஆயுத அடக்கு முறைகளை அதிகரித்தன. ஆகையினால் அரசின் இராணுவ ஒடுக்குமுறைக்கு எதிராக தமிழரின் போராட்டமும் ஆயுதப்போராட்டமாக மாறியது. இராணுவ ஒடுக்குமுறை ஆகாயக் குண்டு வீச்சாலும் எறிகணை வீச்சாலும் ஏற்றம் கண்டது. வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவைகளை மறுத்தும் தமிழர் உயிரையும்

உடமையையும் மேலும் மேலும் அழித்ததினாலும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தாக்குதலும் வளர்ச்சி கண்டுள்ளது.

## 8.4 பாதுகாப்புக் காரணங்கள் என்ற போர்வையில் நீண்டகாலமான பொருளாதாரத் தடையை வடக்கிலுள்ள தமிழ் மக்களுக்கெதிராக செயற்படுத்துவதும் அதை ஓர் அடக்குமுறை ஆயுதமாகப் பாவிப்பதும், தமிழரின் கூட்டு மனித உரிமையை மீறலாகும்.

ஐக்கிய நாடுகள் சபையினால் 1966ம் ஆண்டு பிரகடனப் படுத்தப்பட்ட மனித உரிமை சாசனத்தின் இரண்டாம், பதினொராம் அலகுகளிற்கு எதிராக தமிழர்களின் கூட்டு மனித உரிமை சிறீலங்கா அரசினால் மீறப்பட்டு வருகிறது. தாங்கள் தான் எதிரிகளின் எல்லைக்குள் வாழுகின்றவர்களுக்கு உணவு அனுப்புகின்ற ஒரே ஒரு அரசு என உலகத்திற்குப் பெருமையாகப் பறைசாற்றினாலும், கடந்த ஆறு வருடங்களாக வடக்குக் கிழக்கிலுள்ள தமிழர் மேல் ஓர் பரந்த பொருளாதாரத் தடையை விதித்து, மக்களைப் பல வகையிற் பலவீனப்படுத்தி, சிங்கள அரசின் காலடிகளில் தமிழினம் பிச்சைக்கு விழும்படி தள்ளுகின்றது. உதாரணமாக, 1996ம் ஆண்டு ஏப்பிரல் 19ம் திகதி, *ரிவிரச III* தாக்குதலிலிருந்து தப்ப 50,000 மக்களுக்கு மேல், கிளாலிக் கடல்நீரேரியைக் கடந்து கிளிநொச்சிக்குப் போனவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்ற காரணம் காட்டி, அவர்களுக்கான அடிப்படைப் புனர்வாழ்வு நடவடிக்கையை அரசு மறுத்தது. இச்செயல் அடிப்படைத் தேவைகளை ஒரு போர் ஆயுதமாகப் பாவித்து மக்களை அடிபணியச் செய்வதாகும்.

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்க சர்வதேச அரசு சார்பற்ற நிறுவனங்களின் உதவியை சிறீலங்கா அரசு ஏற்றுக் கொண்ட போதிலும், அவர்களது பணியை பல வழிகளிற் தடைசெய்கின்றது. தொடர்ச்சியான ஊரடங்கு உத்தரவினாலும், தடை முகாம்களில் அவர்களின் வாகனங்களை நீண்ட காலம் தடுத்து வைப்பதினாலும், அவர்களது அடிப்படைத் தேவைகளைத் கட்டுப்படுத்துவதனாலும், அவர்களது நடமாடும் சுதந்திரத்தை மறுப்பதினாலும் அவர்களது பணி கடினமாகின்றது. உதாரணமாக, 1996ம் ஆண்டு யூலை 25ம் நாள் அரசு ஊரடங்கு உத்தரவை அறிவித்து கிளிநொச்சியைத் தாக்கியபொழுது

அரசு சார்பற்ற நிறுவனங்கள்தான் முதன்முதலில் வெளியேறினவர்கள். ஏனெனில் அவர்களது நடமாடுதல் தடை செய்யப்பட்டது அவர்களுக்குத் தேவையான பொருட்கள் பல வாரங்களாக வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டன. அவர்கள் வெட்கத்துடன் வெளியேறி மல்லாவிக்கும் மடுத்திருப்பதிக்கும் சென்றனர்.

## 8.5 1966ம் ஆண்டு பிரகடனமான மனித உரிமை சாசனத்தில் வரையறுக்கப்பட்ட சமூக பொருளா தரப் பண்பாட்டு உரிமைகளைச் சிறீலங்கா அரசு தமிழர்களுக்கு மறுப்பதால் இனப் பிரச்சினை மேலும் மோசமடையும்.

மனித உரிமைக்காக உழைப்பவர்களும், அவர்களின் நிறுவனங்களும், மற்றும் மேற்குப்புல அரசுகளும் மனித உரிமைகளையும் அவற்றின் மீறல்களையும் தமது வரலாற்று அனுபவத்தின் ஒளியிற் பார்க்கின்றன. இரண்டாம் உலக யுத்தத்தின் கொடூரமான நிகழ்வுகளுக்குப் பின், ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டு, பன்னாட்டு அரசுகளின் ஆதரவோடு மனித உரிமை சாசனம் அறிவிக்கப்பட்டது. பல ஜனநாயக அரசுகளும் கண்காணிப்பு நிறுவனங்களும், மனித உரிமை சாசன அலகுகளின் அடிப்படையில் தமது திறமைக்கு ஏற்ப மனித உரிமைகள் மீறல்களைக் கண்காணிக்கின்றன. இது ஓர் திறமையான பணி மட்டுமல்ல, அடிப்படை மனித உரிமைகளையும் மதிப்பீடுகளையும் ஒருங்கிணைந்த முறையில் உறுதிசெய்வதாகும்.

ஆனால் இவ்வுரிமைகளைப் பொறுத்த மட்டில், பல மூன்றாம் உலக நாடுகளின் அனுபவங்களை, அங்கு செயற்படும் அமைப்புகளின் அனுபவங்களை, மேற்குப்புல அரசுகள் முக்கிய கவனத்திற்கு எடுத்துக் கொள்வதாக எமக்குத் தெரியவில்லை. முதல் மனித உரிமைச் சாசனத்தின் பின், இருபது ஆண்டு அனுபவத்தின் பின்னேதான் **1966**ம் ஆண்டு மனித உரிமை சாசனம் எழுதப்பட்டது. இவைகளை சிறீலங்கா உட்பட பல நாடுகள் ஏற்றுக் கையெழுத்து இட்டபொழுதிலும், இன, பண்பாட்டு உரிமைகளுக்கு எதிரான மீறல்கள் நடைபெறுகின்றன. ஆனால் இவைகளைப்பொறுத்த மட்டில் எப்பொழுதும் அக்கறையின்மை கடைப்பிடிக்கப் படுகின்றது. ஒரு பொழுதும் கண்டனம் செய்யப்படுவதில்லை.

உதாரணமாக, 1982ம் ஆண்டு தமிழரின் பண்பாட்டுப் பூர்வீக மான யாழ்ப்பாண பொது நூலகம், யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த சிறீலங்கா பொலிஸ் படையால் எரிக்கப்பட்ட போது எந்த அரசும் எதிர்ப்போ கண்டனமோ தெரிவிக்கவில்லை. மேலும் 1996ம் ஆண்டில் சிறீலங்காப் படைகள் யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய பொழுது, மக்களின் வீடுகள் அனைத்தையும், வரலாற்றுச் சின்னங்களையும், போரில் மடிந்த மாவீரர்களை மதிக்க, கோப்பாய் கொடிகாமம் இடங்களில் கட்டப்பட்டிருந்த மாவீரர் மயானங்களையும் உழவு இயந்தரம் கொண்டு அழித்த போதும், பனை, தென்னை மரங்களை ஆயிரக் கணக்கில் பகையுணர்வுடன் அழித்த போதும், ஒரு அரசும் இந்த அநாகரீச் செயலைக் கண்டிக்கவில்லை.

குண்டு வெடித்துப் பலர் கொல்லப்படும் பொழுது நாம் அதை பயங்கரவாதமென நீதியோடு வெறுத்துக் கண்டிக்கிறோம். தனிப்பட்டவர்களின் உரிமைகளும் சுதந்திரமும் அரச பயங்கரவாதத்தினாலோ அல்லது தமிழ் ஈழ விடுதலைப் புலிகளினாலோ, மீறப்படும் பொழுது அம்மனித உரிமை மீறலை நாம் கண்டிக்கின்றோம். ஆனால், வாழ்வின் அடிப்படைத் தேவைகளை மறுக்கும் மனிதமற்ற பொருளாதரத் தடையினாலும், நோக்கற்ற குண்டுவீச்சாலும் எறிகணைத் தாக்குதல்களாலும் ஆண்டுகளாகவும் மாதங்களாகவும், சாவையும் அழிவையும் முகம் கொடுக்கும் ஆயிரக்கணக்கான அப்பாவிக் குடிமக்களுக்காக எந்த நாடும் சிறீலங்காவின் செயலை எதிர்க்கவுமில்லை அரச பயங்கரவாதத்தைக் கண்டிக்கவுமில்லை.

1948 மனித உரிமை சாசனமும் 1966 சாசனமும் ஒருங்கே சம முக்கியத்துவத்துடன் விவாதித்து விழிப்புடன் செயற்படுத்தப் பட்டாலொழிய, உரிமைக்காகப் போராடிக்கொண்டிருக்கும் பல சிறுபான்மைச் சமூகங்கள் பலமுள்ள நாடுகளினால் தொடர்ந்து நசுக்கப்படும் அபாயமுண்டு. பொருளும் பலமும் பொருந்திய நாடுகள் இன்று பலவீன நாடுகள் தப்பிப் பிழைப்பதைத் தீர்மானிப்பது போல், சிறுபான்மையினரை உறிஞ்சி–உழக்கி வாழும் செல்வந்தரும் பலவீனரும் எப்போதும் இருப்பார்கள்.

ஆகையினால் ஐக்கிய நாடுகள் சபையிலுள்ள அனைத்து நாடுகளும், தனிப்பட்ட நபர்களின் உரிமைகளை மட்டுமின்றி, மக்கள் மக்களாக வாழும் ஒருங்கிணைந்த கூட்டு உரிமைகளையும் பாதுகாக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று நாம் கோருகின்றோம்.

## 9. சமாதான நடவடிக்கையை நோக்கி: பேச்சு வார்த்தைக்கு சாதகமான சூழலை உருவாக்குதல் அடிப்படை தேவையாகும்.

### 9.1 யாழ்ப்பாணத்திலிருந்து இராணுவம் பின் வாங்க வேண்டும்.

மிக அண்மையில் கைப்பற்றிய யாழ். குடாநாட்டு பகுதிகளிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்ற தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கோரிக்கை, ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்ற அரசின் கோரிக்கையுடன் எவ்விதத்திலும் ஒப்பிடமுடியாது. ஆயுதப் படைகளின் அடக்கு முறைக்கு எதிராக ஆயுதம் தூக்கியது தமிழ் உரிமைப்போராட்ட வளர்ச்சியின் ஒரு பின்னைய கட்டமாகும். அரச பயங்கரவாதத்தின் எதிரொலி தமிழ்த் தீவிரவாதம். அரச படைகள் தொடர்ந்தும் தமிழரை ஆயுதப்படையினால் அடிமைப்படுத்திக் கொண்டு அதே நேரத்தில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் ஆயுதத்தைப் போட வேண்டும் எனக் கேட்பதில் எது வித நியாயமுமில்லை.

இராணுவம் யாழ் குடாநாட்டை கைப்பற்றுவதற்குக் காரணம் விடுதலைப் புலிகளின் கோரப்பிடியிலிருந்து மக்களை விடுவிப்பதே எனக் கூறுகின்றது. ஆனால் ஏகாதிபத்திய வெற்றி வடிவில் யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடியேற்றுதலும், ஆடம்பரமாகக் கொழும்பில் நடந்த யாழ்–கையளிப்பு வைபவமும், நீண்ட காலமாகத் தமிழரை நசுக்கும் மனிதமற்ற பொருளாதாரத் தடையும், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்ற கார ணங்காட்டி நிவாரணம் மறுத்தலும், இன்னும் மேலாக வடக்கின் உண்மைநிலையை மூடிமறைக்கும் பத்திரிகையாளர்கள் தடையும், இவைய னைத்தும் பேச்சு வார்த்தைக்கு ஏற்ற சூழல் இல்லை. இவற்றை மாற்றி நிலைமையைச் சீர்ப்படுத்துவது அரசின் பாரிய கடமை. இதை ஏதோ தமிழருக்கு விட்டுக்கொடுப்பதாகவோ அல்லது பேச்சு வார்த்தைக்குத் தமிழர் போடும் நிபந்தனையாகவோ கருதக்கூடாது. இரு பகுதியினரும் மதிப்புடன் ஒன்றாக அமர்ந்து உரையாடத் தேவையான அவசிய சூழல் இதுவாகும்.

### 9.2 புரிந்துணர்வின் அடிப்படையிற்தான் பேச்சுவார்த்தை நடக்க முடியும்.

ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசையும், அது பிரநிதித்துவம் செய்யும் மக்களையும் ஏற்றுக்கொள்வதோடு மட்டுமல்ல, சிறப்பாக இன்றைய அரசையும் கூட, நாம் ஏற்றுக்கொண்டாலும், கடந்த கால ஜனநாயகத்தில் நிகழ்ந்த சில கொடூர சம்பவங்களை நாம் மறக்க முடியாது. பாராளுமன்ற தமிழ் உறுப்பினர்களின் ஜனநாயகமான அகிம்சை எதிர்ப்புக்கு எதிராக இராணுவம் கடைப்பிடித்த அரச பயங்கர வாதத்தையும், சிங்கள அரசியல்வாதிகள் தமிழருக்கு எதிராக ஏவி விட்ட தொடர்ச்சியான இனக்கலவரங்களையும் அதன் அழிவுகளையும் மறக்க முடியாது. இவையனைத்தும் சிறீலங்கா அரசாங்கத்தின் ஜனநாய கத்தின் பெயரால் நடைபெற்றவை. ஒரு ஆயுதம் ஏந்தியவன் தனது இலட் சியத்திற்கு எதிரியெனக் கருதப்படும் சிலருக்குச் சாவை விளை விக்கலாம். அது வருந்தத்தக்கது. ஆனால் ஜனநாயக முறையிற் தேர்ந் தெடுக்கப்பட்ட ஜனாதிபதி தான் எடுக்கும் பிழையான தீர்மானத்தால் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிரிழப்பையும் அழிவையும் உருவாக் குவது மன்னிக்க முடியாதது. 1977ம் ஆண்டின் ஜனநாயகத்தில் 52 விழுக்காட்டுச் சிங்களமக்களின் ஆதரவைப்பெற்ற அன்றைய ஜானாதி பதி ஜெயவர்த்தன தமிழதரின் பிரதேச சுயாட்சிக்காக 75 விழுக்காட் டிற்கு மேற்பட்ட தமிழ் மக்களின் ஆதரவைப்பெற்ற பிரதிநிதிகளின் ஏகோபித்திய நோக்கத்தை அவமானப்படுத்தி நிராகரித்துக் கழித்து விட்டது, ஜனநாயகத்திற்கு மாறானது. இதுதான் அன்றைய ஜனநாயகம்!

ஆகையால் உலகில் ஜனநாயக ஆட்சி அரசுதான் எல்லா மக்களுக்கும் எல்லா வேளைகளிலும் நீதியையும் ஜனநாயகத்தையும் வழங்கக்கூடிய நிறைவான அரசியல் வடிவம் என்று முற்று முழுதாகக் கூறமுடியாது. தமிழர்களும் பாராளுமன்ற ஜனநாயக ஆட்சியை மதிக் கின்றனர். அதனை அடைய ஆசிக்கின்றனர். ஆனால் ஜனநாயகத்தின் பேரில் தமிழர் அனுபவித்த கொடூர அழிவுகளின் காரணமாக ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகத் தோன்றிய மாற்றீடான தலைமைத்துவம் தான் இன்றைய தமிழ் தலைமைத்துவம்.

தமிழர் போராட்டத்தின் இரண்டாம் கட்டம், சிறீலங்கா இராணு வத்தின் பயங்கரவாதத்திலிருந்து தமிழரைப் பாதுகாக்கும் இராணுவ தலைமைத்துவமாகும். எனவே போராட்டத்தின் புதிய கட்டத்தின் சூழ் நிலையால் தோற்றுவிக்கப்பட்ட இந்தத் தலைமைத்துவத்தை அரசாங் கம் தன்னுடைய நடவடிக்கையாற் தோன்றிய தமிழ் தலைமைத்துவமாக ஏற்று நடக்க வேண்டும். அதற்குத் தகுந்த மதிப்பையும் சமத்துவத்தையும் அளிக்க வேண்டும். தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட உண்மையான

தலைமைத்துவமாகத் தங்களைக் கணித்து மற்றவர்களை வெறும் இலட்சிய வெறிபிடித்த மனநோயாளர்களாகவும் பயங்கரவாதிகளாகவும் நோக்குவது எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

## 9.3 பரஸ்பர நம்பிக்கையீனத்தை மேற்கொள்ள மூன்றாம் பகுதி இடையீட்டாளர் தேவை.

இரு பகுதியினருக்கும் இடையிலான பேச்சு வார்த்தையை நெறிப்படுத்த மூன்றாம் பகுதியினரின் உதவியைப் பெறுவது பெரும்பான்மையினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தைக் குறைத்து கணிப்பதல்ல. அல்லது உள்நாட்டுப் பிரச்சினையைச் சர்வதேசமயபடுத்தி அரசின் மேல் அரசியல் லாபம் பெறும் எண்ணத்தோடுமல்ல. இது உள்நாட்டுப் பிரச்சினை என்றும் அது அர்த்தமுள்ள பேச்சு வார்த்தையாற்தான் தீர்க்கப்பட வேண்டும் என்றும் தெளிவாக எல்லோருக்கும் தெரியும். ஆனால் கடந்த காலப் பேச்சுவார்த்தையிலும், ஒப்பந்தத்திலும் இரு பகுதியினரும் அனுபவித்த முரண்கையும், வளர்ந்துவந்த நம்பிக்கையீனமுமே, மூன்றாம் இடையீட்டாளரின் உதவியை நிச்சயமாக வேண்டுகின்றது.

அரசுக்கும் தமிழ்த் தலைவர்களுக்குமிடையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் ஒரு முறையல்ல பலமுறை அரசினால் ஒரு பக்க சார்பாகக் கிழித்தெறியப்பட்டன. அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடந்த கடைசிப் பேச்சு வார்த்தையின் போது தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் பின் வாங்கியதால் பேச்சுவார்த்தை முறிந்தது என்றும் எல்லோருக்கும் தெரியும். ஆனால் பேச்சுவார்த்தை சடுதியாகவும், ஒருபக்க சார்பாகவும், தகுந்த காரணம் காட்டாமலும் புலிகளினால் முறிக்கப்பட்டதென்ற குற்றச்சாட்டு உண்மை அறிந்தவர்களினால் ஏற்கமுடியாதது. அரசாங்கத்தின் தவறான தகவல்களினால் அரசுக்கு நட்புறவான ஏனைய நாடுகள் மத்தியிலும் இக் குற்றச்சாட்டு வளர்ந்து வந்திருக்கின்றது. பேச்சுக்களில் இணக்கங்கண்ட சிறு விடயங்களைத்தன்னும் அமுற்படுத்த அரசபடைகள் தவறியமை, மக்களின் தேவைக்கான பாதையைத் திறக்க பின் வாங்கியமை போன்ற போதிய காரணங்களும் ஆறு வார கால அவகாசமும் கடிதங்கள் மூலம் வழங்கிய போதும், அரசு அவைகளை அலட்சியம் செய்தது. மேலும் பல சிங்கள அரசியல்வாதிகள் சுட்டிக்காட்டியது போல் அரசு பேச்சுவார்த்தையைக் கையாண்ட விதத்தில் உள்ள பலவீனமும் பேச்சுவார்த்தை படிப்படியாக முறிவதற்குக் காரணமாக அமைந்தது. முரண்கையுற்ற இரு பகுதியிலும்

நம்பிக்கையீனம் வளர்ந்துள்ளது. ஆகையால் இரு பக்கத்தாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய மூன்றாம் பகுதி பிரசன்னமே நம்பிக்கையீனத்தை உடைக்கமுடியும்.

## 9.4 மூன்றாம் பகுதி இடையீட்டை சிறீலங்கா அரசு வெறுத்தல்

மூன்றாம் பகுதி இடையீடு உள்நாட்டு அரசியலிற் தலையீடு என்று அரசு மறுப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. மூன்றாம் பகுதி இடையீட்டு உதவியுடனும் சாதகமான சூழலுடனும் பேச்சுவார்த்தையைத் தொடக்கும்படி தமிழர் சார்பால் பலமுறை வேண்டுகோள் விடப்பட்டுள் ளது. ஆனால் அரசாங்கமோ போர் ஏற்றம் பெறவேண்டும் என்ற அதீத வாதிகளினதும் வெறியர்களினதும் கூச்சலில் செவிடாகியது போல் பதிலளிக்காது போரை முன்னெடுக்கின்றது. முரண்கையின் தீர்வுக்கு அப்பாற் சென்று புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும் என்ற நிபந்தனையை விதிக்கிறது. இது சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் திரும்பும் நல்லெண்ணம் அரசுக்கு இல்லை என்பதைக் காட்டுகின்றது.

## 10. முடிவுரை:

இப் போரில் விழுந்துமடிந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் பெயராலும், போரின் மத்தியில் உயிர் வாழப் போராடிக் கொண்டிருக் கும் மக்கள் பெயராலும், உலகம் முழுவதும் இடம்பெயர்ந்து வாழும் தமிழருக்கு நாம் விடுக்கும் அன்பான கோரிக்கை இது. இந்த வேளை யின் முக்கியத்துவத்தை உணர்ந்து, சில்லறை வேறுபாடுகளையும் தனிப் பட்ட கோபதாபங்களையும் பெருமனதுடன் அகற்றி, தமிழினத்தின் அடிப் படைக் கோரிக்கைகள் மட்டில் ஒருமைப் பாடன நோக்குள்ளவர்களாக, ஓர் நீதியான வழிக்கு உதவவும், ஒருமைப்பாடான நோக்காகச் செயற் படவும் அனைவரும் ஒன்று சேருங்கள். அரசுக்கோ அல்லது எமது நாட்டவருக்கோ எதிராகக் கோபம் சாதிக்காது, தெளிவாக முன்வைக் கப்பட்டுள்ள தமிழ்க் கோரிக்கைகளின் ஒருமைப்பாட்டில் நீதியான சமா தானத்தை ஆதரிப்போம்.

சிறீலங்காவில் தமிழருக்கு எதிரான பொருளாதாரத் தடை யாலும் ஏற்றம் பெறுகின்ற இராணுவத் தாக்குதலினாலும் உருவாக்கப் படும் பிரிவின் புண்களை நாம் இன்னும் ஆழமாக்கக் கூடாது. ஒரு தீர்வு வேண்டும். அந்தத் தீர்வு பெரும்பான்மையினரின் ஜனநாயக

நிலைப்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், அதை இரத்தக்கறை படிந்த, சிறைவைக்கப்பட்ட மக்களின் மேல், அவர்களின் எதிர்ப்பின் மத்தியிற் திணிக்கப்பட்டால், அது நீதியான தீர்வாக இருக்க முடியாது. குறுகிய பார்வையுடன், இராணுவக் கைப்பற்றல், பொருளாதாரத் தடை போடல், வலுக்கட்டாயமான சிங்கள குடியேற்றம் செய்தல், இனங்களுக்கிடை யிலான கட்டாயத் திருமணம், இவை அனைத்தும் தமிழரை அடிமைப் படுத்தும் சூழ்ச்சி முயற்சியாக இருக்குமானால் அது பெரும் முட்டாள் தனமாகும். இந்த வழிகள் யாவும் ஒரு நாகரீக அரசின் தீர்வாகாது.

நாற்பது ஆண்டுகள் முன்னதாக அரச படைகளால் தொடங்கிய வன்செயலின் சிக்கலுக்குள்ளும் ஏற்றம் பெறும் போரின் மத்தியிலும் அகப்பட்டுள்ளோம். இப்படியே செல்வோமானால் தீவின் எல்லா மக்க ளும் அழிவையே அடைவர். நாட்டுப்பற்றுள்ளோர் செயற்பட வேண்டிய முக்கிய கட்டம் இதுவாகும். போரையும் வன்செயலையும் நிறுத்தவும் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்குக் கதவுகளைத் திறக்கவும் ஏகமன தாய்க் குரல் எழுப்புவோம்.

**உண்மை எம்மை விடுவிக்கும்!**
**நீதி நிரந்தர அமைதி!**

*நான் ஒரு கிறிஸ்தவன் என்றமட்டிலும் குரு என்றமட்டிலும், வன்முறையை கண்டிக்கிறேன். நோக்கை அடைய வன்முறை ஏற்ற ஒரு வழி அல்ல. இருப்பினும் இராணுவத்தினதும் இனத்துவேசி களினதும் பயங்கரவாதத்திற்கு எதிராக ஆயுதம் எடுத்து: தற்காப்பின் உச்ச நிலைக்குத் தமிழ் இளைஞர்கள் தள்ளப்பட் டுள்ளதை நான் தெளிவாக விளங்கிக் கொள்கிறேன். ஆகையினால், தமிழ் தீவிரவாதம் என்பது சிங்கள-அரச பயங்கரவாதத்தின் எதிரொலியாகும்.*

# சமாதானம் வேண்டுமாயின் நீதிக்காக உழைப்போம்

–திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் விடுத்த
உலக சமாதான நாட்செய்தி

1996ம் ஆண்டு நவம்பர் 9ம். திகதி, ஐக்கிய அமெரிக்க தமிழ் சங்கத்தினர் நியூயோர்க்கில் நடாத்திய வருடாந்த மாலை விருந்து நிகழ்ச்சியின் போது ஆற்றிய உரையின் தமிழ் வடிவம்.

## 1. இன்றைய பிரதம விருந்தினர் யார்?

தமிழ்ச் சங்கம் 1996ம் ஆண்டு வருடாந்த மாலை விருந்துக்குப் பிரதம விருந்தினனாக என்னை அழைத்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித் துக் கொள்கிறேன். உங்கள் அழைப்பு எனக்குத் தனி மனிதன் என்ற ரீதியில் கிடைத்ததாக நான் கருதவில்லை, நீங்கள் நேசிக்கும் தமிழ் மக்கள் போரின் பிடியில் அகப்பட்டிருக்கும் நிலையில் அவர்களையும் அவர்கள் தேவைகளையும் நான் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்பதாற்தான் உங்கள் அழைப்பு எனக்குக் கிடைத்தது. நம்பிக்கையின்றி உதவியற்ற நாடோடிகளாக அலைந்த மக்களுடன் அலைந்து திரிய எனக்கும் சந் தர்ப்பம் கிடைத்தது. மனிதமற்ற பொருளாதரத் தடையின் விளைவாகப் பட்டினிச் சாவிற்கும், குண்டுகளாலும் எறிகணைகளாலும் ஏற்படும் அழிவின் சாவிற்கும் முகம்கொடுத்து, வீடற்று, அனாதரவாக நிற்கும் மக்களோடு இணைந்து நிற்கின்றேன். கடந்த சில மாதங்களாக நடந்த பயங்கர நிகழ்வுகளால் நானும் நேரடியாகப் பாதிக்கப்பட்டவன். மேலும், நாட்டின் நிலைமை பற்றிய உண்மைகள் வெளிவராமற் தடுக்கப்பட்டு மறைக்கப்படுவதால் உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் தமிழ் மக்க ளின் நிலைப்பாட்டிற்கு எதிராக அநீதியான அபிப்பிராயங்கள் தோன்றி யிருக்கின்றன. இந் நிலையில் தவறான விளக்கத்தைப் போக்கி உண் மைக்குச் சாட்சியம் பகர இங்கு முனைகின்றேன்.

ஆகையால், உங்களது வருடாந்த ஒன்று கூடலில் என்னைக் கௌர விக்கும் பொழுது, தம் உயிரை விடுதலைப் பயணத்தில் பலி கொடுத் தவர்களுடனும், தமிழ் ஈழத் தாயகத்திலேயே அநாதரவாக்கப்பட்டு, இடம் பெயர்ந்து வாழத்துடிக்கும் மக்களுடனும் உங்கள் தோழமையை வெளிப் படுத்துகிறீர்கள். போரிற் பலியானவர்க்கு மதிப்பளிப்பதன் அடையாள மாகவும், உயிர்வாழத் துடிதுடிக்கும் மக்களுடன் உங்கள் தோழமையைக்

காட்டும் அடையாளமாகவும் சில நிமிடங்கள் தமிழ்த்தாய்க்கு மௌனஞ் சலி செலுத்தும்படி தாழ்மையுடன் கேட்கின்றேன்.

## 2. பணி உணர்வுடன் உங்களிடம் வருகின்றேன்

ஐக்கிய அமெரிக்காவுக்கான எனது முதற் பயணம் இது. 1984ம் ஆண்டில் ஜேர்மன் (முன்ஸ்ரர்) பல்கலைக் கழகத்தில் என் பணியை முடித்ததன் பின், முதன்முறையாக இந்நாட்டுக்கு வரத் திட்டமிட்டிருந் தேன். அதற்கான ஆயத்தங்களையும் ஆர்வத்துடன் மேற்கொண்டிருந் தேன். ஆனால் அந்நாட்களில் தாயகத்தில் ஏற்பட்ட துக்ககரமான நிகழ்வுகளின் தாக்கங்கள் எனது அமெரிக்கப் பயணத்தைக் கைவிட்டு, உடனடியாக சிறீலங்கா திரும்பச் செய்தன. இத் தீர்மானத்தை எடுக்க, ஜேர்மன் கிட்லர் ஆட்சியில் பலியான போதகர் டியேட்றிச் பொன்கோப ரின் வார்த்தைகள் என்னை ஊக்குவித்தன. அதாவது, 'கிட்லர் ஆட்சி யில் அன்று நடந்து கொண்டிருந்த துன்பத்தில் ஒருவன் பங்கெடுக்கா விட்டால், மலரும் புதிய ஜேர்மனியின் மகிழ்ச்சியில் பங்கு கொள்ள அவனுக்கு உரிமையில்லை'.

இன்று சிறீலங்காவின் நிலைமை, 1984இல் இருந்ததை விட மிகவும் மோசமான நிலைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. இருந்தும், அந்த கொடூரப் போர்ச் சூழலில் இருந்து, உங்கள் முன்வரப் போதிய காரண முண்டு. தாய் நாட்டில் போரின் கொடூரமான சூழ்நிலையால் பலர் இறந்து விட்டார்கள், இன்னும் பலர் பொருளாதாரத் தடையாலும், இடம் பெயர்வாலும் ஏற்படுகின்ற இக்கொடூரமான அழிவிலும் சாவிலுமிருந்து உயிர் வாழப்போராடிக் கொண்டு, நம்பிக்கை இழக்காது விடுதலைப் பயணத்தில் முன்நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். இத்துன்பங் களைப் பற்றி அவர்களின் உடன் பிறப்புக்களான உங்களிடம் எடுத்துக் கூறவேண்டும் என்ற பணி உணர்வுடனேயே இங்கு வந்திருக்கின்றேன்.

எனது உடன் பிறந்த தமிழ்ச் சகோதரர் சார்பில் இக் கடமையை நிறை வேற்றும் போது, சிறீலங்காவின் பெரும்பான்மையினரான பௌத்த–சிங்களவருடைய நேர்மையான அபிலாசைகளிலிருந்து என்னை நான் விலக்கிக்கொள்ளவுமில்லை, அல்லது அவற்றை மறக்கவுமில்லை. நான் இங்கு ஆணித்தரமாகக் கூற விரும்புவது என்னவெனில்: *எவ்வளவிற் குச் சிங்களவர், பௌத்தர்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் சுதந்திர மாகவும் நாட்டுப் பற்றுள்ள மக்களாகவும் வாழவேண்டுமென்று நாம் விரும்புகின்றோமோ, அவ்வளவிற்குத்தான் சுதந்திரத்திற்காகவும் விடுதலைக்காகவும் நாம் எடுக்கும் முயற்சியும் வெற்றி பெறும்.*

எமது நாட்டின் இன்றைய நிகழ்வுகள், தமிழருக்கு மட்டுமல்ல, சிங்களவர், முஸ்லிம்கள், பௌத்தர், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய அனைவருக்குமே பேரழிவின் பாதையைச் சுட்டிக் காட்டுகின்றன. ஆகையால் ***இத்தகைய தேசிய தற்கொலையின் வழிகளை விட்டு விட்டு, உடனடியாகப் பாதையை மாற்றுவோமாக.***

இத் தருணத்தில் கடந்த நாற்பது ஆண்டுகளாக தமிழர் போராட்டம் தாண்டிய வளர்ச்சிப் படிகளைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, இன்று எந்நிலையை அடைந்துள்ளோம் என்றும், எப்படிப்பட்ட எதிர்காலத்தை எதிர் நோக்குகின்றோம் என்றும் சிந்திப்போம்.

## 3. போராட்டத்தின் வடிவ மாற்றங்களைத் திரும்பிப் பார்த்தல்

### 3.1 தமிழருக்கு எதிரான இனக் கலவர அலைகள்

சிங்கள பௌத்த பேரினவாதத்தையும் தமிழருக்கு எதிரான உணர்வுகளையும் சாரமாகக் கொண்ட ஒரு சிங்களத் தேசியம், பிரிட்டனிடமிருந்து விடுதலை பெற்றுச் சுமார் 20 ஆண்டுகளுக்குள் பெரும் எழுச்சி கண்டது. இதனால் எழுந்த பல தமிழ் இன ஒடுக்குமுறைகளுக்கும் மனிதஉரிமை மீறல்களுக்கும் எதிராக அன்றைய தமிழ் தலைமைத்துவம் வகித்தவர்கள் ஜனநாயக வழிகளில் போராடினார்கள். ஒருமைப்பாடான ஜனநாயக பாராளுமன்ற அமைப்புகள், அரசியல் சாசனப் பாதுகாப்பை ஜனநாயக முறையில் தேடினார்கள். ஆனால் அடிப்படை இனவாத வெறியினால் பிழையான பாதைகளில் வழி நடத்தப்பட்டு வந்த சிங்கள மக்கள், தமிழரின் ஜனநாயக சாத்வீக எதிர்ப்புக்கு, எந்த விதத்திலும் மதிப்பளிக்காமல், தமிழர் உயிருக்கும் உடமைக்கும் சாவையும் அழிவையும் விளைவிக்கும் காடைத்தனத்தாலும் இராணுவப் பலாத்காரத்தினாலுமே பதிலளித்தனர்.

### 3.2 ஏமாற்றப்பட்ட அல்லது விலைக்கு வாங்கப்பட்ட தமிழ்த் தலைவர்கள்.

தமிழருக்கு எதிராக வன்முறைகளை ஒரு பக்கம் தூண்டிக் கொண்டு, சிங்கள அரசியல்வாதிகள் மறு பக்கத்தில் தமிழர்களின் தலைவர்களை ஏமாற்றினார்கள், இன்னும் சில தமிழ்த்தலைவர்களை பதவிகள் சலுகை

கள் கொடுத்துத் தம் பக்கம் ஈர்த்துக்கொண்டனர். தமிழ் சமூகத்தின் உயிர் நலனை விட, தமது செல்வாக்கையும், பொருளையும், அதிகாரத்தையும் பெரிதாக மதித்த தமிழ் அரசியல்வாதிகள் சிலர் எம்மை அன்றும் காட்டிக் கொடுத்தனர். நேர்மையும் நம்பிக்கையுமுள்ள தமிழ்த் தலைவர்களுடன் செய்த ஒப்பந்தங்களைச் சிங்களத் தலைவர்கள் ஒரு தலைப் பட்சமாகக் கிழித்தெறிந்தனர். இப்படியான ஏமாற்றங்களுக்குத் தமிழ் அரசியற் தலைவர்கள் மாத்திரமல்ல, தமிழ் சமூக, மதத் தலைவர்களும் புத்திஜீவிகளும் உயர் அதிகாரிகளும் கூட உள்ளாகியிருக்கின்றனர்.

## 3.3 தமிழர் பெரும்பான்மையாக தமிழ் ஈழத்துக்கு வாக்களித்தனர்

உயர் கல்வியிலும் உத்தியோக புலத்திலும் அநீதியான ஒடுக்கு முறை அதிகரிப்புடன், மீண்டும் மீண்டும் தொடர்ந்த இனக் கலவரத்தினால் தமிழ் உயிர்களும் உடமைகளும் மேலும் மேலும் அழிக்கப்பட்டன. பாராளு மன்றத்தில் தமிழ்ப் பிரநிதித்துவத்தை குறைக்கும் வஞ்சக எண்ணத் துடன் அரச உதவியுடனான சிங்களக் குடியேற்றங்கள் தமிழ் பகுதிக ளில் மிக மும்முரமாக மேற்கொள்ளப்பட்டன. இவைகள் அனைத்தையும் ஆழமாக ஆராய்ந்த பின்னர், 1976ம் ஆண்டில் வட்டுக்கோட்டையில் நடந்த மகாநாட்டில், தமிழ் அரசியல் தலைவர்கள் ஜனநாயக ரீதியில் உறுதியானமுறையில் ஏகமனதாகத் தீர்மானமொன்றை நிறைவேற்றி னர். அதாவது, *தமிழருடைய பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு சிறீலங்கா அரசிடமிருந்து பிரிந்து வாழ்தலே.* அதைத் தொடர்ந்து 1977ம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இதுவே ஜனநாயக முறையில் தமிழர்கள் மத்தியில் இறுதியாக நடத்தப்பட்டதும், தமிழர்கள் முழுமையாகப் பங்கெடுத்ததுமான இறுதித் தேர்தலாகும். இதில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு ஆதரவாக, அதாவது *தமிழ் ஈழத்திற்கு, 75 விழுக்காட்டுக்கு அதிகமான தமிழ் மக்கள் ஜனநாயக முறையில் ஆதரவைத் தெரிவித்தனர்.* சிறீலங்காவிலுள்ள தமிழர்கள், வரலாறுடைய ஒரு தனித்துவ நாட்டினம், பண்பாடும் நிலமும் உடையவர் கள், தங்கள் சொந்த எதிர்காலத்தை நிர்ணயிக்க அவர்களுக்குச் சுய நிர்ணய உரிமை உண்டு என்று தெட்டத் தெளிவாக ஜனநாயகமுறைப் படி தமிழ் ஈழம் அமைக்க அங்கீகாரம் வழங்கினர்.

## 3.4 தமிழர்களின் கோரிக்கையும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும்

தமிழரின் சுயநிர்ணய உரிமையைப் பாதுகாப்பதற்கும், சிங்களக் காடைத்தனத்திலிருந்து தம்மைக் காத்துக்கொள்ளவும் அடுத்த கட்ட நடவடிக்கையான ஆயுதமேந்திய போராட்டத்திற்குத்தள்ளப்பட்டனர். தமது நிலையான கோரிக்கையாலும், பல்லாயிர உயிர்களைப் பலிகொடுத்து நாட்டையும் மக்களையும் அரச படைகளின் அழிவு சக்திகளிலிருந்து பாதுகாத்ததாலும், விடுதலைப்புலிகள் வடகிழக்குத் தமிழர்களின் இன்றைய தலைவர்களாகத் தோன்றியுள்ளனர். 1977ம் ஆண்டின் ஜனநாயகத் தேர்தலில் தமிழ் மக்கள் தெளிவாக விடுத்த தமிழ் ஈழக் கோரிக்கையே தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கையாக அமைந்துவிட்டது. அதையே இன்று விடுதலைப்புலிகள் முன்னெடுத்துச் செல்லுகின்றனர். இக்கோரிக்கைகள் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை நிலை நாட்டி, தாயகத்தைத் தமிழ் ஈழமாக நிர்வகிப்பதற்கும் மக்கள் அவர்களுக்கு பெரும்பான்மையான சம்மதத்தை அளித்துவிட்டனர்.

1983இல் ஏற்பட்ட கொடூர இனப் படுகொலையின் பின்னும், வடக்கில் நடந்த தற்போதைய நிகழ்வுகளின் பின்னும் கூட, தமிழ் ஈழத்துக்கு மாற்றீடாக அரசாங்கம் பிரதேச ஆட்சி வடிவத்தில் ஒரு பிரேரணை முன்வைப்பின் அதைப் பரிசீலனை செய்யத் தாம் தயார் என விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் வெளிப்படையாகக் கூறியது. இருந்தும் இற்றைவரைக்கும் அப்படியான ஒரு செயற்திட்டமோ அல்லது அதற்கான ஓர் அழைப்போ தலைமைத்துவத்திற்கு அரசாங்கத்திடமிருந்து வரவில்லை. இதற்குப் பதிலாக, தமிழரின் தமிழ் ஈழக் கோரிக்கை வெறும் விடுதலைப் புலிகளின் கோரிக்கையென கொச்சைப்படுத்தி, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் வெறும் பயங்கரவாத இயக்கம் எனப்பட்டம் சூட்டியும், அரசாங்கம் தமிழருக்கு எதிரான படுகொலைப்போரை முன் எடுத்து செல்லுகின்றது. இத்தகைய நடவடிக்கை எமது அடிப்படைக் கோரிக்கையின் நீதித்தன்மையை குறைக்கவோ அதற்குச் சரியான தீர்வு காணவோ ஒரு போதும் வழி வகுக்காது.

## 3.5 சந்திரிகாவின் சமாதானப் பேச்சுகள்

'சமாதானமே தவிர இனிப் போருக்கு இடமில்லை!' என்ற வாக்குறுதியுடன் ஆட்சிக்கு வந்த சந்திரிகா அரசாங்கம், தமிழரின் தலைமைத்துவத்துடன் சமாதானப்பேச்சுக்களை நடாத்த முன்வந்தது. முக்கியத்துவம் குறைந்த முறையில் இணைந்த அரசின் சமாதானக் குழு, மனிதமற்ற பொருளாதாரத் தடையை நீக்க அரசு காட்டிய தயக்கம், அரசுவர்த்தமானி அறிவித்தல் மூலம் அங்கீகரிக்கப்பட்ட அரச தீர்மானங்களைத் தன்னும்

நிறைவேற்ற இராணுவம் பின்வாங்கியது, இவை அனைத்தும் தமிழ் தலைமைத்துவத்தை விரும்பாத ஒரு முடிவுக்குத் தள்ளியது. ஆகையினால், இக்குறைபாடுகள் பற்றிய ஒரு மாத அறிவித்தலின் பின், பேச்சு வார்த்தையில் இருந்து தமிழ் தலைமைத்துவம் விலகிக் கொண்டது.

பேச்சுவார்த்தை காலங்களில் அரசுக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் பரிமாறிக் கொண்ட கடிதங்களின் உண்மை நிலையில், பேச்சு வார்த்தையை தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அறிவித்தலின்றி போதிய காரணமின்றி ஒரு தலைப்பட்சமாக முறித்துக் கொண்டனர் என்று அரசின் பொய்ப்பரப்புரை ஏற்றுக் கொள்ளமுடியாது. அது பிழையாகும், இதற்கு நாம் சாட்சிகள்

## 4. எமது போராட்டத்தின் தற்போதைய நிலைமை

போராட்டத்தின் இன்றைய நிலைமையைத் தாயகத்தில் நிலவும் மூன்று நிலையைக் கொண்டு எடுத்துக் கூறலாம்.

### 4.1 யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் இராணுவ நிலை கொள்ளல்.

யாழ்ப்பாணத்திலிருந்து **500,000** குடிமக்கள் வரலாற்று ரீதியாக சிங்களப் படைகளினால் வெளியேற்றப்பட்ட நிகழ்வும், கைப்பற்றிய வெறும் யாழ்ப்பாணத்தில், சிங்கக் கொடி ஏற்றியதும், கொழும்பில் சந்திரிகா–ரத்வத்தை தலைமையில் நடாத்தப்பட்ட வெற்றிவிழாக்களும் சடங்குகளும், இந்த 20ம் நூற்றாண்டிற் கூட சிங்கள ஆட்சியினரின் ஏகாதிபத்திய வெறியைக் காட்டுகின்றது. இதைத் தொடர்ந்து கிளாலிக் கடலூடாக நடாத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை, தென்மராட்சி வடமராட்சியில் இடம்பெயர்ந்து ஆதரவற்றிருந்த மக்களை மீளவும் வெறிச்சோடியிருந்த யாழ்ப்பாணத்துக்குள் உட்தள்ளும் சூழ்ச்சிகரமான செயல், தமிழினத்தின் சுயமதிப்பிற்கெதிரான பெரிய தாக்குதலாகும். **1981**ல் சிறீலங்கா பொலிசாரினால் எரிக்கப்பட்ட யாழ் நூலகம், அதைத் தொடர்ந்து இன்று குடாநாடு முழுவதையும் இராணுவத்தின் கீழ் அடிமைப்படுத்துவது, நாளாந்த ஊரடங்கு மூலம் போக்குவரத்து கட்டுப்படுத்தல், யாழ்நகரை அழகுவித்த வரலாற்று, பண்பாட்டுச் சின்னங்களை அழித்தல், போரில் உயிர் நீத்தவர்களின் கல்லறைகளை உடைத்தெறிதல், ஈழ மண்ணை அழகுபடுத்தும் ஆயிரக் கணக்கான தென்னை, பனை மரங்களை அழித்தல். இவை அனைத்தும் யாழ்ப்பாணத்தையே

கற்பழித்தலாகும். நாளாந்தம் நூற்றுக்கணக்கில் நடைபெறும் படை வீரர்கள் புரியும் பாலியல் வன்முறையுறவு பற்றிச் சொல்லத் தேவை யில்லை, சில காலத்திற்கு முன்னர், மாணவி கிறிசாந்தியையும் தாயையும் அயலவரை யும் எப்படி பாலியல் வன்முறைக்கு உட்படுத்திக் கொலை செய்தனர் என்ற ஒரு சம்பவமே உதாரணமாகும்.

கிளிநொச்சிப் பகுதியிலிருந்து 250,000 மேற்பட்ட தமிழ் மக்கள் வன் னிக்காட்டுக்குள் ஓடிய இரண்டாவது இடம்பெயர்வு இன்னும் பரிதா பமானது. யாழ் நகரிலிருந்து வெளியேறிய பொழுது அரச சார்பற்ற நிறு வனங்கள் பேருதவிகளைச் செய்தனர். கோவில்கள் பள்ளிக்கூடங்கள் உதவியாக இருந்தன. ஆனால் வன்னிக் காடுகளில் எவ்விடம் தங்கு வது? அதிலும் மேலாக, அரசு சார்பற்ற நிறுவனங்களிடம் உதவிப் பொருட்களும் இருக்கவில்லை, அவர்களுடைய வாகனப் போக்குவரத் துக்கும் அரசாங்கம் தடை விதித்தது. இதனால் அவர்களும் ஏற்கனவே இடம்பெயர்ந்து தமிழ் மக்களைத் தனியாய்த் தவிக்கவிட்டனர்.

இக்கொடூர நிகழ்வுகள் அனைத்தும் 1995, 1996ம் ஆண்டுகளை தமிழினத்தின் வரலாற்றின் கரியாண்டுகளாக ஆக்கிவிட்டன. இந்த ஆண்டுகளிற் தான் ஏறத்தாழ 100,000 தமிழர்கள் தம் பிறந்த நாட்டிற்குள்ளேயே சிங்கள அரச படைகளின் கொடுமைத்தனத்தால் ஒன்றில் இடம்பெயர்ந்தவர்களாக அல்லது படையினரின் கீழ்ச் சிறைப் படுத்தப்பட்டவர்களாக வாழத் தள்ளப்பட்டனர்.

## 4.2 பொருளாதாரத் தடை

ஐந்து ஆண்டுகளுக்கு மேல் சிறீலங்கா அரசு உணவு, மருந்து விநியோகத்தைத் தடுத்துள்ளது. வாழ்வின் அடிப்படைத் தேவைகளான மின்சாரம், தொடர்புச்சாதனங்கள், போக்கு வரத்து, காகிதாதிகள், இனிப்புப் பொருட்கள், பாலுணவுகள் ஆகியவற்றை நிறுத்தி, மக்களை மெதுவாக இன அழிவிற்கு இட்டுச்சென்றது. எவ்வித நியாயமுமின்றி அரசாங்கம் மக்களின் ஒட்டு மொத்தமான உரிமையை மறுப்பதை பல மனித உரிமை இயக்கங்கள் பார்த்திருந்தும் தமது மௌனத்தால் இவ் அநியாயத்துக்கு துணைபோகின்றன. இது வருந்தத்தக்கது.

## 4.3 தொடர்பு சாதனங்களின் தடுப்பு

கொழும்பில் ஆறு மாத காலமாக இருந்த பத்திரிகைத்தடை தற்போது இறுதியாக விலக்கப்பட்டாலும், மூடிய கதவுகளுக்குப் பின்னால்

கொலைத்தனமான போரை மிகைப்படுத்த முடியாது. ஆகாய குண்டு வீச்சினாலும் எறிகணைத் தாக்குதல்களாலும், எல்லாவிதத் தடைகளாலும் மக்கள் உயிர்வாழப் பயந்து காடுகளுக்கு ஓடிய வேளைகளில், போர் பரிணாமமடைந்த வேளையில் உள்நாட்டு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை வடக்குக்குப் போகமுடியாமல் அரசாங்கம் உண்மையைத் தடுத்து மூடிமறைத்தது. மூடிய கதவின் பின்னால் நடக்கும் போர் கொடூரம் இல்லையானால், வேறு யாது?

## 5. அரசின் நிகழ்ச்சிநிரல்பற்றி மூன்று கருத்துக்கள்.

### 5.1 தமிழ்ப் பகுதிகளில் மேலெழுந்த வாரியான ஆகாயவிமானக் குண்டுவீச்சு. எறிகணைத்தாக்குதல். மனிதமற்ற பொருளாதரத் தடை இவையனைத்தும் சமாதானத்துக்கான போர் என்ற போர்வையிலோ பயங்கரவாதத்தை தடுக்கின்ற நடவடிக்கையென்றோ நியாயப்படுத்தமுடியாது.

1995ஆம் ஆண்டு ஏப்பிரல் 19ம் திகதியின் பின் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையை நோக்கும் போது, முன்னோக்கி பாய்தல், கை குலுக்கல், இடியும் மின்னலும், *றிவிரச I, II, III.* என பெயரிடப்பட்ட இவை அனைத்தும் 'போரல்ல சமாதானம்' என்று கூறிக்கொண்டு பதவிக்கு வந்த அரசின் வெட்கக்கேடான நடவடிக்கையாகும். தனது ஆதரவாளர்களை ஏமாற்றவும், தமிழருக்கு எதிரான போருக்குத் தேவையான நிதி ஆயுத உதவிகளைப் பெறவும் 'சமாதானத்துக்கான போர்' என்ற பெயருடன் நடாத்தும் அசுங்கீதமான நடவடிக்கையே இது. அரசு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை வெறும் பயங்கரவாத இயக்கம் என அழைப்பது, தனது இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்தவும், தமிழருக்கு எதிராக 1956, 58, 77, 83ல் நடத்தப்பட்ட இனக்கலவரங்களின் வரலாறுகளையும், அரச பயங்கரவாதத்தையும் மூடிமறைப்பதற்குமான அரச முயற்சியாகும். இப்படித்தான் தமிழருக்கெதிரான போரில் நிதி ஆயுத உதவியையும் ஆதரவையும் வெளி நாடுகளில் பெற முயலுகிறது. நீண்ட காலமாக இருந்த இனப் பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினை என கூறிக்கொண்டு, தனது இராணுவ முடிவை நியாயப்படுத்துகிறது.

## 5.2 தற்போதைய தமிழ்த் தலைமைத்துவத்தை அழிக்க முயலுவது சமாதான பேச்சுவார்த்தையின் கதவு களை மூடுதல் ஆகும்.

வடக்கு கிழக்கலிருந்த எல்லாத் தமிழ்மக்கள் கடைசியாக பங்கு பற்றிய பாரளுமன்றத் தேர்தல் 1977 ம் ஆண்டிலாகும். இத் தேர்தலில் 1976ம். ஆண்டு வட்டுக்கோட்டையில் தமிழ்த் தலைவர்கள் ஏக மனதாக தமிழ் ஈழத்திற்கு வழங்கிய ஆதரவை மக்கள் 75 விழுக்காட்டுக்கு மேலான வாக்குகளுடன் ஆமோதித்தனர். அதாவது இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகள் அடங்கிய பகுதி தமிழ் ஈழம் எனவும் பண்பாட்டை யும், வளங்களாம் நில, கடல் வளங்களை அபிவிருத்தி செய்ய சுய உரிமை தேவையெனவும் பெரும் பான்மையாகத் தீர்மானித்தார்கள். 1948, 66ம் ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட கூட்டான மனித உரிமை சாசனங்களுக்கு இது ஏற்றதாக இருந்தது.

தற்போதைய தலைமைத்துவம் இராணுவமயமான ஒன்றாக இருந்தாலும் அவர்கள் முன் எடுத்துச் செல்லும் வேண்டுகோள்கள் அதிகார பூர்வ மாக தமிழ்மக்களால் அங்கீகாரம் பெற்றதொன்றாகும். அவர்கள் கோரிக் கைகளைத் திடமான உறுதியுடன் முன்னெடுத்துச் செல்லுகின்றனர். முன்னைய சிங்கள ஆட்சியாளர்கள் செய்ததுபோல் இவர்களைப் பதவிகள் கொடுத்து வாங்குவது இயலாதமுயற்சியாகும். எனவே இன் றைய அரசாங்கம் இத்தலைமைத்துவத்தை அழிக்க முயன்றால் தமிழ ருடன் உள்ள அர்த்தமுள்ள பேச்சு வார்த்தையின் கதவுகளை மூடுவ தாகும்.

## 5.3 அடிமைப்படுத்தப்பட விரும்பாத தமிழ்மக்கள்மேல் பெரும்பான்மை சிங்களவரின் தீர்வை புகுத்தல் விடுதலைக்கும். மக்களாட்சிக்கும் விரோதமானது.

தலைமைத்துவமில்லாத தமிழர் மேலே அல்லது ஒரு பழைய–தலைமைத் துவத்தின் உதவியுடன், பெரும்பான்மை சிங்களவரினால் எடுக்கப்பட்ட ஒரு முடிவை மக்கள் மேல் வலிந்து புகுத்தலாம் என்ற மனக்கோட் டையுடன் அரசாங்கம் நடப்பது ஒரு வகை ஏகாதிபத்தியவாதமாகும் .

அரசியல் தீர்வொன்றை பெரும் பான்மையினர் கலந்துரையாடி முடிவுக் குக் கொண்டு வந்தாலும், அத்தீர்வுக்குத் தமிழரின் பெரும் பகுதியி னரின் பங்களிப்பு இல்லாவிட்டால் அல்லது தற்போதைய தலைமைத்

துவத்தின் பங்களிப்பு இல்லாவிட்டால் அத்தீர்வை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆடி 1995ல் சமாதானத்துக்கான போர் தொடங்கி பல காலத் திற்கு பின்னர், பரவலாக்கல் பொதி வெளியிடப்பட்டது. இருப்பினும் வட கிழக்கு தமிழ் மக்களும் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளும் இதனை விவாதிப்பதில் விலக்கப்பட்டனர். ஜனாதிபதியும் அரசியலமைப்பு அமைச்சரும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு இப்பொதி அனுப் படமாட்டாது என வெளியரங்கமாக அறிவித்துள்ளார். மறுபுறம் ஒகஸ்ட் 3ல் தீர்வு திட்டம் வெளிக்கொணர்ந்த பொழுது தமிழர்கள் தம் உயிரைக் காப்பாற்றக் காடுகளுக்கு ஒடத்தொடங்கிவிட்டார்கள். ஆகையால் அரசி யல் விவாதத்திற்குப் பொருத்தமான காலமும் இல்லை சூழலும் இல்லை. எனவே பெரும்பான்மைச் சிங்களவர் அரசியல் திட்டத்தைத் தங்களுக் குள் விவாதித்து முடிவெடுத்து இடம்பெயர்ந்த நிலையில் உள்ள தமிழர் மேற் திணிப்பதுதான் அவர்கள் திட்டம் என்பது தெளிவாயிற்று.

## 6. புலம்பெயர்ந்தோரும் அகதிகளும்

நீண்ட கால புலம்பெயர்ந்தவர்களாக அல்லது அண்மையில் வந்த அகதிகளாக ஏறக்குறைய அரைக்கோடி சிறீலங்கா தமிழர் நாட்டுக்கு வெளியே வாழ்வது மிகவும் துக்ககரமானது. ஏற்கனவே நாட்டை விட்டு வெளியேறிய புத்திஜீவிகள், அதிகாரிகள், அண்மைக் காலங்களில், நாட்டில் நடக்கும் வன்செயல்களின் விளைவாக ஆற்றல்களும் கொடை களும் படைத்த பல இளைஞர்களும் தாய்நாட்டுக்கு வெளியே வாழ்கிறார்கள்.

அண்மைக் காலங்களில் சிறீலங்கா அரசாங்கம் தாய் நாட்டிற்கு வெளி யே வாழும் தமிழர்களைப் பற்றி பொய்யான அபிப்பிராயங்களை ஏற்ப டுத்தி இருக்கின்றது. இவர்களை ஒன்றில் திரும்பவும் நாட்டிற்கு அனுப்ப வேண்டும். அல்லது இவர்கள் பயங்கரவாத இயக்கத்தை ஆதரிப்பவர் களெனக் கண்டிக்க வேண்டும் அல்லது சிறீலங்காவில் சாவைத் தழுவும் மக்களுக்கு உதவிகளையும் நிதி சேகரிப்பதையும் தடுத்து பயங்கரவா தத்திற்கு உதவுவதாக அறிவிக்க வேண்டும் என சிறீலங்கா அரசு வெளிநாடுகளைக் கேட்டு வருகின்றது.

ஒவ்வொரு நாடும் அந்தந்த நாட்டிலுள்ள புலம்பெயந்தோர் அகதிகளை தமது நாட்டின். சட்டங்களுக்கும் வரைமுறைகளுக்கும் ஏற்ப கையா ளட்டும். புலம்பெயர்ந்த தமிழர் மேல் மனிதபிமான முறையில் போதிய அக்கறை காட்டாமல், மற்றைய நாட்டு விவகாரங்களில் தலையிடுவது

தவறு. தமிழ் அகதிகளில் சிலராவது நாடு திரும்பிவர சிறீலங்கா அரசாங்கம் உரிய சூழலை உருவாக்க வேண்டும்.

அண்மையில் நான் மேற்கொண்ட பயணங்களின் பொழுது மிகக் கடினமான காலநிலையில், அந்நிய மொழி, அந்நிய வேலைச்சூழலில் தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டு வருகின்றனர்கள் என்று தெரிந்து கொண்டோன். இருந்தும் தற்போதைய போரில் அகப்பட்டு தவிக்கும் மக்கள் மீது மிகவும் கரிசனையுடையவர்களாக உள்ளனர். இக் கரிச னையைத் தொடர்புச்சாதன வழியாகப் பேணி வருகின்றனர். மேலும் தமது வசதிக்கேற்ப தாயகத்தில் அன்புப்பணிகளை மேற்கொள்வதற்கு நிதி உதவிகள் வழங்குகின்றனர். இது போற்றத்தக்கது.

## 6.2 இறுதியாக ஒரு வேண்டுகோள்

எனது பயணங்களின்போது அகதியாய் வந்தவர்களுக்கும் இடம்பெயர்ந் தவர்களுக்கும், போரின் மத்தியில் துணிவோடு உயிர்வாழும் மக்கள் பெயராலும், இராணுவ நடவடிக்கைகளால் உயிரிழந்தவர்கள் பெயராலும், வேண்டுகோள் விடுப்பது வழக்கமாயிற்று. இன்று உங்கள் மத்தியில் எனது வேண்டுகோள் என்னவென்றால், சுருக்கமாக, ***உங்கள் மத்தி யில் மனித பெலவீனத்தால் தோன்றும் சிறுசிறு வேறுபாடுகளை அகற்றிவிட்டு, எமது தமிழன்னையின் அரவணைப்பில் கைகோர்த்து, எமது தாயக மண்ணில் நடந்துகொண்டிருக்கும் போராட்டத்தில் அதிக அக்கறைகாட்டி, உங்களது திறமையாலும் பணியாலும் தமிழ ரின் போராட்டத்திற்குப் பங்களித்து, சுயகௌரவத்துடனும் மனித மாண்புடனும் நம் மக்கள் வாழ உதவுங்கள்.***

அமெரிக்காவில் வாழும் உங்களுக்கு இன்னொருபடி கூடச்சென்று, ஓர் மேலதிகச் கோரிக்கையை விடுக்க விரும்புகின்றேன்.

ஒரே தமிழ்த்தாயின் பெருமைமிக்க பிள்ளைகளாக இருப்பினும், தாய் நாட்டின் விவகாரங்களில் ஒரே கரிசனை கொண்டிருப்பினும், நிகழ்கால வருங்கால தமிழ்ப் பிள்ளைகளின் நலனையிட்டு உண்மையான அக்க றை கொண்டிருப்பினும், தமிழ் மக்களின் உன்னத நோக்கத்திற்காகப் பலமாக ஒன்று சேர்ந்து சேவை செய்வதை, உங்கள் மத்தியில் நிலவும் புரிந்துணர்வு குறைவுகள் தடை செய்கின்றதாக அறிகின்றேன். இது மன வருத்தத்திற்குரியது.

உங்களில் சிலர் ஏற்கனவே தாயகத்தில் படிப்புகளை நிறைவுபடுத்தி இந்நாட்டில் மேலும் உங்கள் படிப்பை பணியை வாழ்வை மேம்படுத்த இந் நாட்டிற்கு வந்து குடியேறினீர்கள். இன்னும் சிலர் நாட்டில் உயர்ந்தபதவி வகித்திருந்தும், இனக் கலவரங்களில் துன்புறுத்தப்பட்டு இந்நாட்டில் குடியேறியிருப்பீர்கள். இன்னும் சிலர் அண்மைக் காலங்களில் நாட்டில் நடக்கும் அகோர நிகழ்வுகளின் காரணமாக இந்நாட்டில் தஞ்சம் கோரியிருப்பீர்கள். அதாவது இங்கு குடியேறியிருக்கும் எல்லாத் தமிழர் களும் ஒரே காலத்தில் ஒரே தரமான விதமான சூழலிலிருந்து வந்தவர் களல்ல. ஆகையால் ஒருவரையொருவர் ஏற்பதில் அல்லது புரிந்து கொள்வதில் இடைவெளிகள் இருக்கின்றன. துன்பப்படும் ஈழ மக்கள் உங்களிடமிருந்து எதிர்பார்க்கும் உதவியை நீங்கள் செய்வதற்கு இந்த இடைவெளி பெரும் தடையாக இருக்கின்றது.

உங்கள் தாயகத்தின் சார்பில் ஒருவரையொருவர் புரிந்து ஏற்றுக்கொள் ளுமாறு உங்களை வேண்டுகின்றேன். மூத்தவர்கள் அல்லது முந்தி வந்தவர்கள் இளையவர்கள் அல்லது பிந்தி வந்தவர்களை உடன்பிறவா சகோதரராகப் பார்க்காதீர். நல்ல கல்லூரிகளில் படிப்பித்து உங்களை அன்று வெளி நாடனுப்பிய அதே அன்னைதான் இன்றும் தன் பிள்ளை களை வெளிநாடனுப்புகிறாள், ஆனால் அன்றைய வசதியான கல்லூரி களின் படிப்பு, வசதிகள், பளபளப்பு இன்று இல்லை. ஏனெனில் எமது தாயகம், அண்மைக் காலத்தில் அனுபவித்த கொடுமைகளின் வடுக் களையும் போராட்டத்தின் காயங்களையும் இன்று வருபவர் ஓரளவில் தாங்கி நிற்கின்றனர். இதன் காரணத்தால் இவர்கள் முன்னர்வந்தவர் களை விட தாயகத்தின் மேல் கூடிய பற்றும் ஆர்வமும் உள்ளவராகவும் திகழக் கூடும். இதை மனதில் கொண்டு நீங்கள் வேறுபாட்டைப் பாராட் டாது உங்களுக்குள் சகோதரத்துவ உறவைப் பேணுங்கள்.

அதே வேளையில் அண்மையில் குடிபுகுந்த இளம் சமுதாயத்திடம் நான் வேண்டுவது: மூத்தசகோதரரிடமிருந்தும் முந்தி வந்தவர்களிடமிருந்தும் அனுபவம் நிறைந்த ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் நீதியான சமாதானத்தை வேண்டும் எமது இலட்சியம் உயர்ந்தது, உன்னதமானது. உங்களுடைய பங்களிப்பும் கூட்டுமுயற்சியும் அதற்கு இன்றியமையாதது.

நீங்கள் சிறீலங்காவிலிருந்து மிகத் தொலைவில் உள்ள ஒரு அந்நிய நாட்டில் வாழ்ந்து வருகின்றீர்கள். ஆனால் இந்த நாடு, யுத்தங்களை நிறுத்துவதிலும், மனித உரிமைகளைப் பாதுகாத்து நீதியை நிலைநாட்

டுவதிலும், தேசியப் பிரச்சினைகளுக்கு முடிவுகள் காண்பதிலும் முக்கிய பங்கெடுத்து வருகின்றது. இந்நாட்டின் தலை நகரங்களில் பல சர்வதேச அமைப்புக்கள் தமது தலைமைப் பீடங்களை வைத்திருக்கின்றன. அவை களுக்கு நீங்கள் எமது நாட்டுப் பிரச்சினையின் உண்மை நிலைமையை எடுத்துக்கூறி, எமக்கு நீதியான சமாதானத்தை அடைய ஊக்குவிப் பதில், நீங்கள் முக்கிய பங்களிக்கலாம். உங்களிடம் உள்ள பல்வேறு திறமைகளை எமது இலட்சியத்திற்காக இணைத்து செயற்படுத்தலாம். இம்முக்கிய கட்டத்தில் எமது அழைப்பிற்கு செவிமடுத்து உங்களால் ஆனதைச் செய்வீர்களென்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு.

என்னை உங்கள் விருந்தின் பிரதம விருந்தினராக அழைத்ததற்கு நன்றி. இறைவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப பாராக.

*கடந்த 13 வருடங்களாக ஆயிரக்கணக்கான தமிழ்மக்களின் சுயநிர்ணயத்திற்காகப் போராடும் போராளிகளின் இறப்பைவிட, தமிழ் மக்களின் கழுத்தை நெரிக்கும் பொருளாதாரத்தடை, தொடர்புச் சாதனங்கள், போக்குவரத்து, கல்வி, சமூக வாழ்வு மீதான மறுப்புகள் இவை எல்லாம் ஒட்டு மொத்தத்தில் படிப்படியான இன அழிப்பு அன்றி வேறு என்ன என்று நான் கேட்கவிரும்புகின்றேன்? ஆகையால் தங்களின் அடிப்படை மனித உரிமைகளுக்கான தமிழர் போராட்டம் இன்று அவர்கள் உயிர்தப்பி வாழ்வதற்கான மக்கள் போராட்டமாக மாறியுள்ளது.*

# தமிழ் மக்களின் மாபெரும் வெளியேற்றமும் சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல்களும்

எமது மக்களாம் இலங்கைத் தமிழர் படும் இன்னல்களை தங்கள்முன் எடுத்துரைப்பதற்கும், இன்று வாழ்வின் உயிர்நாடி ஊசலாடிக் கொண்டிருக்கும் மக்கள் சார்பாகவும் இவ்வறிக்கையை உங்கள்முன் சமர்ப்பிக்க அனுமதியளித்தமைக்காகத் தங்களுக்கு நன்றி கூறிகின்றேன்.

இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் முடிவுகாணாததும், பெரும் கொடுமை மிக்கதுமான இனப்பிரச்சனையானது உலக சமாதானக் குழுவினருக்குப் பெரிதும் குழப்பமானதாக இருந்து வருகின்றது. இந்நாட்டிலுள்ள வடக்குக் கிழக்கு மக்கள் அனுபவித்துவரும் துன்பங்கள் பற்றிய எமது சாட்சியத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுகின்றோம். நான் யாழ் மாறைமாவட்ட கத்தோலிக்க குருமுதல்வராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறேன். கடந்த சில வருடங்களாக எமது நாட்டில் நடந்துவரும் துயரம் தரும் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவன் என்ற முறையிலும், எமது மக்கள் அனுபவிக்கும் அவலங்கள், அழிவுகள், திடீர் மரணங்கள் என்பவற்றை மக்களுடன் சேர்ந்து அனுபவித்தவன் என்ற ரீதியில் அவர்கள் சார்பில் சாட்சியாக நிற்கிறேன். இலங்கை அரச படைகளின் அத்துமீறல்களும் அதர்மத்தின் விளைவும் எம்மக்களைப் பெருமளவில் வெளியேறி அகதிகளாகக் குடிபெயரவைத்தது. மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாட்டுக் குழுவிடம் நான் எடுத்துக் கூறுவது, எம்மக்கள் சுதந்திரத்துடனும், பாதுகாப்புடனும் உரிமையோடு வாழ உதவிபுரிய வேண்டுமென்பதே.

மனித உரிமைக்கான ஐ.நா.வின் 58வது ஆணைக்குழுவின் முன் 1994ம் ஆண்டில் உள்நாட்டில் (இலங்கையில்) அகதிகளாக்கப்பட்டோர் என்ற அறிக்கையில் திரு பிரான்சிஸ் டெங் பின்வருமாறு கூறுகிறார். நாட்டின் நிலைமை இன்னும் மோசமான சீர்கேடாக இருக்கிறது. 50,000 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த நீண்ட யுத்தத்தினால் பல கோடிச் சொத்துக்கள் வடக்கிலும், கிழக்கிலும் அழிக்கப்பட்டுள்ளன.

மனிதநேயமற்ற வெளியேற்றங்களும், அகதி வாழ்க்கையும் அதிகரித்து விட்டன. அது இன்னும் தொடர்கதையாகவேயுள்ளது.

### ஒக்டோபர் 1995ல் முதலாவது பாரிய வெளியேற்றம்.

நீண்ட பொருளாதாரத் தடைகள் காரணமாகச் சாதாரண வாழ்வைக் கூட வாழமுடியாத நிலைக்குத்தள்ளியபின் சமாதானத்திற்கான போர் என்ற பெயருடன் எம்மக்கள் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டது. யூலை 7ல் தொடங்கப்பட்ட 5 தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கையால் மக்கள் தம் இல்லங்களிலிருந்தும், வாழ்வுமுறைகளி லிருந்தும் வலுக்கட்டாயமாகத் தம் சொந்த நாட்டிலேயே அனாதைக ளாக்கப்பட்டனர். யாழ்நகரைக் கைப்பற்றும் நோக்குடன் சிறீலங்கா அரச படையினர் வன்முறையுத்தம் ஒன்றை ஆரம்பித்தனர். தொடர்ச்சியான குண்டு வீச்சுக்களும், எறிகணைத் தாக்குதல்களும் யாழ்குடாநாடு முழுவதையும் ஆட்டங்காணவைத்தது. இரவு நேரத்திலும் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்றது. பயங்கர ஒசைகளுடனும், அழிவுகளுடனும் கூடிய இத்தாக்குதலால் யாவரும் பயந்து நடுங்கினோம். அக்டோபர் 30ல் எங்களாற் தாங்கமுடியாது என்ற நிலையுடன், எங்கள் உயிரைக்காக்கும் நோக்குடன் எமது சொந்த இடங்களிலிருந்து, வீடுவாசல்களை விட்டு இரவோடிரவாக வெளியேறினோம். போத்துக்கீச, ஒல்லாந்த, ஆங்கி லேய காலனித்துவ அரசுகள் 450 வருடகாலமாக ஆண்ட பொழுதிலும் நாம் யாழ்நகரை விட்டு வெளியேறவில்லை. ஆனால் மனிதாபிமானமற்ற இலங்கை அரசபடைகளின் வெறித்தனமான தாக்குதலிலிருந்து எம்முயி ரைக்காக்க ஒரே இரவில் அரை இலட்சம் மக்கள் பெருமளவில் வெளியே றினார்கள். அவர்களுடன் ஒருவனாக நானும் வெளியேறினேன்.

### யாழ்நகர் அழிப்பு:

பழமைவாய்ந்ததும், பெருமைக்குரியதுமான யாழ்நகர் சிறீலங்கா அரச படைகளின் வன்செயல்களால் நிர்மூலமாக்கப்பட்டது இன்று வரலாற்றுப் பதிவாகிவிட்டது. யாழ்நகரை அரசபடைகள் கைப்பற்றிவிட்டோம் என்ப தைச் சிங்கக்கொடியேற்றிக் கொண்டாடியது மட்டுமல்ல, தலைநகரான கொழும்பில் சனாதிபதி தலைமையில் அந்த வெற்றிவிழாவைக் கொண் டாடியமை, சிங்கள அரசின் சர்வாதிகாரப்போக்கு, யாழ் மக்களையும், மண்ணையும் பழிவாங்கிய தன்மையையும் பறைசாற்றியது. யாழ்நகரில் 80 விழுக்காடான வீடுகள் குண்டு வீச்சினால் அழிக்கப்பட்டன. தமிழர் பண்பாட்டை வெளிப்படுத்தி நின்ற ஆசியாவின் பிரபல நூலகம்

அரசபடையினரால் திட்டமிட்டுத் தீயிட்டு அழிக்கப்பட்டது. இதுமுன்னர் மறுக்கப்பட்டுப் பின்னர் அரசபிரதிநிதிகளால் ஒப்புக் கொள்ளப்பட்டது. வரலாற்றுச் சிற்பங்கள் அடித்து நொருக்கப்பட்டன. இப்படி அழிக்கப்பட்ட வற்றில் யாழ்நகரை ஆண்ட இறுதித் தமிழ்மன்னன் சங்கிலியனின் சிலையும் ஒன்று. யாழ்நகர் கற்பகதருவாம் பனைமரங்களை வேரோடு வெட்டி வீழ்த்தியது மட்டுமல்ல, மாவீரர் துயிலும் இல்லமும் பாரிய இயந் திரங்களின் உதவியுடன் தகர்க்கப்பட்டன.

## இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்த வலுக்கட்டாயம்.

தாங்கள் வெற்றிகொண்டதும், அழிக்கப்பட்டதுமான யாழ்ப்பிரதேசத்தில், அங்கிருந்து வெளியேறிய மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான வலுக் கட்டாய முயற்சியொன்றை இராணுவத்தினர் மேற்கொண்டனர். 1996 ஏப்ரல் 19ல் கிளாலிக் கடலேரிப் பகுதியில் படகுகளை குண்டு வீச்சி னால் சேதமாக்கியதன் விளைவாக யாழ்நகரை விட்டுத் தற்காலிகமாக வெளியேறக் காத்திருந்த மக்களை, வலுக்கட்டாயப்படுத்தி இராணுவத் தினர் யாழ்நகர் கொண்டுவந்தனர். தினமும் ஊரடங்கு உத்தரவு, பரவலான இராணுவ நடமாட்டம், மக்கள் நடமாட்டத்திற்குத் தடை விதித் தல், இன்னும் மிக்க கேவலமானது அடிக்கடி இடம்பெறும் பெண்கள், பள்ளிச்சிறுவர் மீதான பாலியல் வல்லுறவு என்பன இன்றைய அன்றாட நிகழ்வாகிவிட்டது. இந்நிலையில் மக்கள் பெரும் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர். பாலியல் வல்லுறவினாற் பாதிக்கப்பட்ட இளம் பெண்கள் மர்மமாகவே காணாமற்போய் பின்பு சடலங்களாக மீட்கப்படும் நிகழ்ச்சிகள் மக்களைப் பயங்கர வாழ்வுக்கு இட்டுச் செல்கிறது.

## யூலை 1996ல் இரண்டாவது வெளியேற்றமும் காடுக ளில் வாழ்தலும்.

அரசசார்பற்ற உதவிநிறுவனங்களின் நிவாரண உதவிகளைக் கூட யூலை 18ம் திகதியுடன் சிறீலங்கா அரசு நிறுத்திவிட்டது. இதன் பின் யூலை 25ல் ஊரடங்கு உத்தரவை அமுற்படுத்தியதனால் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் கூட முற்றாகத் தடுக்கப்பட்டன. இத னால் எவ்வித செயற்பாடுகளுமின்றி, உபகரணப் பொருட்களற்ற நிலை யில் வெறுமனே இருக்கமுடியாதென அரச சார்பற்ற நிறுவனங்கள் யாழ் நகரை விட்டு வெளியேறிவிட்டன. யூலை 26ல் 'சத்ஜெய' என்ற அரச படையின் நடவடிக்கை பெரும் குண்டுவீச்சுகளுடனும், செல் தாக்குத லுடனும் மிகக் கொடூரமான முறையில் ஆரம்பிக்கப்பட்டது. இதனால்

பீதியடைந்த மக்கள் காடுகளுக்குள் தம்முயிரைக் காப்பாற்றும் நோக்குடன் ஓடிச்சென்றனர். இம் மக்களுக்கு இருப்பிடவசதியோ, அல்லது எவ்வித உதவிகளோ அளிப்பதற்கு ஒருவருமில்லை, அரசசார் பற்ற நிறுவனங்கள் கூட இல்லை. இந்த மக்கள் குடிப்பதற்குத் தண்ணீர் மொள்ளக் கூட ஒரு கிணறு இல்லை. ஆயிரக்கணக்கான மக்கள் பசியோடு மரங்களின் கீழ் வாடி வதங்கியதை என் கண்ணாற் கண்டதை உங்களுக்குச் சாட்சியாகச் சொல்கின்றேன்.

### எடிபல நடவடிக்கை (முன்னோக்கிப் பாய்தல்)

வன்னிப் பகுதியிலிருந்த மக்கள் பொருளாதாரத் தடையினால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தங்களுடைய பெரும் உழைப்பினால் உருவான நெல்விளைச்சலை அறுவடைசெய்ய நம்பிக்கையோடு காத்திருந்த வேளையில், மனிதாபிமானமற்ற அரசபடையினர் எடிபல என்ற குறியீட டுப் பெயருடன் ஒரு இராணுவ நடவடிக்கையைத் தொடங்கினர். இந் நடவடிக்கையினால் அறுவடைக்காய்க் காத்திருந்த ஆயிரக்கணக்கான நெல்வயல்கள் முற்றாக அழிக்கப்பட்டன. 15,000 மக்கள் திரும்பவும் அகதிகளாக்கப்பட்டு மடுவிற்கு அண்மித்த காடுகளில் அகதிகளாக வாழ்கின்றனர்.

## புலம்பெயர்தல்

### இலங்கையிலிருந்து தமிழரின் வெளியேற்றம்

1983 யூலை தமிழினப்படுகொலையின் பின் 8 இலட்சம் தமிழ்மக்கள் இலங்கையிலிருந்து தம்முயிர் காக்கும் நோக்குடன் வேற்று நாடுகளுக்கு அகதிகளாகச் சென்று வாழ்கின்றனர் என்பதை இவ்விடத்தில் தங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இம் மக்கள் வெளியேற்றத்திற்கும், சிதறிவாழும் நிலைக்கும் அரசபடையின் வன்செயல்களே காரணம், அவர்கள் தங்கள் உரிமை வாழ்வை இழந்தார்கள், உறவினர்களை இழந்தார்கள், தங்கள் சொத்துக்களை இழந்தார்கள், இன்னும் கூறுவதாயின் நாட்டைவிட்டு வெளியேறியவர்கள் அந்நிய நாட்டுச் சிறைகளிலும், உற்றார் நண்பர்களை இழந்தும் வாழ்கின்றார்கள்.

சிறீலங்கா அரசின் கொடூரத்தாக்குதலிலிருந்து உயிர் காக்கும் நோக்குடன் இலங்கையை விட்டுப் புறப்பட்ட ஆயிரக்கணக்கானோர் தங்கள் பயணத்தில் மாண்டமை எம்மால் என்றும் மறக்கமுடியாது. இன்னும் பலர்

சமாதானத் தாயகம் ஒன்று கிடைக்கும், அங்கு நாங்கள் திரும்புவோம் என்ற நம்பிக்கையுடன் வாழ்கின்றனர்.

## நாம் விடுக்கும் வேண்டுகோள்.

பூட்டப்பட்ட கதவுகளுக்குப் பின்னால் நடைபெறும் சமாதானத்திற்கான போர் என்னும் நடவடிக்கை நிறுத்தப்படவேண்டும். இக்கொடிய போரினால் பெருமளவு துன்பங்களையும், சாவுகளையும், இழப்புகளையும், அழிவுகளையும், இடம்பெயர்வுகளையும் தமிழ்மக்கள் அனுபவிக்கின்றனர். இவை சர்வதேச சமூகத்தின் தலையீட்டால் நிறுத்தப்படவேண்டும். இதனால் சர்வதேச சமூகத்தைக் கேட்டுக் கொள்வது.

1. இந்த போரை ஒரே குரலுடன் கண்டிக்க வேண்டுமென்றும். இந்த போருக்கு சர்வநாடுகளால் வழங்கப்படும் போர் நுட்ப ஆலோசனைகள், போர்த்தளபாடங்கள், நிதிவளங்கள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

2. உண்மை நிலையை அறியும் பொருட்டு நாட்டின் வடகிழக்குப் பகுதிகளுக்கு ஒரு சர்வதேசக்குழு அனுப்பப்பட்டு அங்கு சாவின் மடியில் சிக்கியிருக்கும் மக்களைக் காப்பாற்ற உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. மனித உரிமைகளுக்கான ஐ.நா தலைமை உயர் அதிகாரிகளின் உதவியுடன், இலங்கை அரசாங்கத்தை யுத்த நிறுத்தத்திற்கு நிர்ப்பந்திக்க வேண்டுமென்றும், சம்பந்தப்பட்ட குழுக்களுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படவேண்டுமென்றும் தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

# சிறீலங்காவில் நடைபெறும் மௌனக் கொடூரங்களின் சாட்சி

## உண்மையும் நீதியுமே எமக்குச் சமாதானம் அளிக்கும்

எனது சாட்சியம் ஒருசிலருக்குக் குறிப்பாக ஆட்சியிலிருப்போருக்கு ஏற்றுக்கொள்ள முடியாமலிருக்கலாம். ஆனால் கிறிஸ்தவன் என்ற வகையில் இயேசு கூறிய 'உண்மையே எம் எல்லோரையும் விடுதலை ஆக்கும்' (யோண்.8:32) என்ற மறைநூலில் கூறிய வாக்குக்கு ஏற்பவும் திருச்சபையின் தலைமை ஆயராக இருக்கும் 2ம் அருள் சின்னப்பர் சொன்ன 'சமாதானம் எமக்கு வேண்டுமாயின் நாம் நீதிக்காக உழைக்க வேண்டும்' என்பதற்கு ஏற்பவும் இந்த சாட்சியத்தை அறிவுறுத்த வேண்டிய நிலையில் உள்ளேன்.

எனது நாட்டு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் நன்மை கருதி என் மனதில் எமது ஆதங்கங்களைத் திடநம்பிக்கையுடன் பேச விரும்புகிறேன். நான் எனது மக்கள் சார்பாகச் சாட்சியம் கூறாவிடில் எனது சொந்த நன்மை கருதியும் பாதுகாப்புக்காகவும் இருப்பேனாகில் கடவுள் பேரால் எந்த மக்களுக்குச் சேவை செய்கிறேனோ அந்த மக்களைக் காட்டிக் கொடுத்தவன் ஆவேன். இனப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மக்களை வரலாற்றின் உண்மையை எதிர்நோக்கும் படியும் இன்றைய துன்பியல் யதார்த்த நிலையைப் புரிந்து கொள்ளவும், நடவடிக்கைகளின் மாற்றங்களின் போது துணிவுடன் செயற்படவும், ஒருவருக்கொருவர் பெருந்தன்மையுடன் இருக்கும்படியும், உண்மையும் சமாதானமும் கூடிய சமாதானத் தீர்வைத் தேடுகையில் நேர்மையாய் நடந்து கொள்ளவும் அழைக்கிறேன்.

யதார்த்தத்தை மறைக்கும் எமது தலைவர்கள் எம்மை ஒரு தேசிய அழிவுக்கே இட்டுச் செல்கிறார்கள். சமீப காலங்களில் எமது அரசியல் வாதிகளும், அரசாங்கங்களும் பதவிப் பற்றும், அதிகார மோகம் கொண்டிருக்கிறார்கள். எம் நாட்டிலுள்ள புத்திஜீவிகளும் மதத் தலைவர்களும் தீவிரவாதிகளாகவும், முரண்போக்குக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இதனால் யதார்த்தத்தை அறிவதில் குருடராகவும் காரணங் காட்டமுடியாதவராகவும் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை வரலாற்றுடன் கணக்கிடத் தவறியவர்களாகவும் அல்லது நிராகரிப்பவர்களா

கவும் இருக்கிறார்கள். உள்நாட்டிலேயே அவர்கள் சம்பவங்களை மறைக்க முயற்சி செய்கிறார்கள்.

உலக நாடுகளின் அழுத்தத்தையோ, அவை மத்தியஸ்தம் வகிப்ப தையோ தங்கள் பொய்ப் பிரச்சாரத்தால் தடைசெய்து போரைத் தொடர்வதற்கு உதவிகளையும் ஆயுதங்களையும் பெற்றுக் கொள்வதில் முயன்று வருகிறார்கள்.

சிறீலங்கா அரசு நடைமுறைப்படுத்தி வரும் செய்தித் தணிக்கை உள்ளூர், வெளிநாட்டுப் பத்திரிகையாளரையும் போர் நடக்கும் இடங்க ளுக்குச் செல்லவிடாது தடுத்ததுடன் மறைவினில் நடக்கும் 'சமாதா னத்திற்கான போர்' என்ற போர் நடவடிக்கை பற்றி இராணுவ அதிகாரி களினால் கொடுக்கப்படும் அரசியல் வெற்றிக்கான செய்திகளை மட் டும் வெளியிடுவதோடு, இராணுவம் செய்யும் அட்டூழியங்களை மூடிம றைப்பது மட்டு மல்லாமல், நேசநாடுகளின் மத்தியஸ்தத்தைத் தங்களது கடும் போக்கினால் தடுத்து வருகிறது. ஒரு சில மதத்தலைவர்களும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் விடுக்கும் இனவாத அறிக்கைகள் எம்மைப் பெரிதும் பாதிக்கிறது. இவர்கள் வடக்குக்,கிழக்குப் பற்றி ஏதும் அறியாதவர்கள், அங்கு நடக்கும் சம்பவங்கள், அழிவுகள் எதுவுமே தெரியாதவர்கள். உலக நடவடிக்கை பற்றி முதிர்வடையா விளக்கம் கொண்டவர்கள், தங்களுடைய சொந்தப் பிள்ளைகளை விட்டுவிட்டு மற்றைய சிங்கள இளைஞர்களை இனத்துவேச ரீதியிலும், தீவிரவாத முறையிலும் நாட்டின் ஒற்றுமைக்காகவும், அரச உரிமைக்காகவும், மேன்மைக்காகவும், நாட்டைக்காத்துக் கொள்ளவும் வரும்படி அழைப்பு விடுகிறார்கள். மூடப்பட்ட கதவுகளுக்குப் பின்னால் நடக்கும் தேசியத் தற்கொலைக்கு ஒத்த அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் தன்னின வாதிகளுக்கு இவர்கள் ஓர் எடுத்துக்காட்டு.

குறைந்தபட்ச வாக்குறுதிகளை, ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்கு அரசுக்குத் துணிவு வேண்டும். நாட்டின் கடந்த கால நிகழ்வுகளையும் வரலாற்று யதார்த்தங்களையும் சுழற்சியான வன்செயல்களையும் கருத்திற் கொண்டு ஆழமான புரிந்துணர்வுடன் அரசமட்டத்தில் சமாதானத்திற்கு இசைய வேண்டுமென்று எம் தலைவர்களைக் கேட்கின்றேன்.

## தமிழ் மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கையே நாட்டின் அமைதி வாழ்விற்கு வழிவகுக்கும்.

காலனித்துவ அரசியலுக்கு முன்னர் தனிஇராச்சியமாகச் சகல உரிமையோடு அரசர்களால் ஆளப்பட்ட வரலாற்றுப் பின்னணி கொண்ட இனமாக இருந்த தமிழ் மக்கள் தற்பொழுது அதே நிலையையடைய விரும்புகின்றனர். கடந்த நாற்பது ஆண்டு கால அனுபவத்தில் ஏற்பட்ட பலத்த வாக்குவாதங்களும், கடும் போக்குகளும், எதிர்ப்புகளும் தமிழ் மக்களை இந் நிலைக்குக் கொண்டுவரக் காரணங்களாயிருந்தன. மக்களாக வாழ நாம் பெரும் சிரமப்பட வேண்டியிருந்தது. மக்களாக வாழ நாம் எமது உயிர்களைப் பலி கொடுக்கவேண்டியிருந்தது. தற்போது நாம் மக்களாக வாழவிரும்புகிறோம்.

## 1977ல் பாராளுமன்றத் தேர்தலில் வைக்கப்பட்ட தமிழ் மக்கள் உடன்பாட்டையும், 1985ல் திம்புப் பேச்சுவார்த்தை முடிவையும் முன்னெடுப்பவர்கள் விடுதலைப் புலிகள்.

தமிழ் மக்களின் கோரிக்கைகள் விடுதலைப் புலிகளின் ஓர் கண்டுபிடிப்பல்ல. நீண்டகாலமாக அழிவுகளையும், இடம்பெயர்வுகளையும், உயிரிழப்புகளையும் சந்தித்து மனவிரக்தியடைந்த மக்களின் தீர்மானங்களே இக்கோரிக்கைகளாகும். இவை அரசியல் இலாபங்களினாலோ, இராணுவ எதிர்ப்புகளாலோ முறியடிக்கப்படமாட்டா. தமிழ் மக்களின் தலைமைத்துவத்தை ஏற்ற விடுதலைப் புலிகள் இக்கோரிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துச் செயற்பட்டு வருகின்றனர். முன்னரும் தற்போதும் விலைபோகக்கூடிய அரசியல்வாதிகளைப் போலல்லாது, எந்தவிதமான நயவஞ்சகப் பேச்சிற்கும் தம் கொள்கைகளை விட்டுக் கொடுக்கமாட்டார்கள். இந்த அரசு இத்தலைமைத்துவத்தை முற்றாக அழித்திடவோ அன்றில் பலவீனப்படுத்திவிடவோ முனைகிறது. எப்படியெனில் அடிமைப்போக்குள்ள தமிழர் ஒருசிலரின் ஒத்துழைப்பைப் பயன்படுத்தி போலித்தலைமைத்துவத்தை உருவாக்கி, தமிழர் பிரச்சினைக்கு சிங்கள அரசியல் தீர்வைத் திணிக்கப் பார்க்கிறார்கள். இதுவே தற்போதைய அரசின் மறைமுகமான திட்டமாக இருக்கிறது.

## வட பகுதிச் சீரழிப்பு

தமிழ் மக்களின் பண்பாட்டுப் பெருமைவாய்ந்த யாழ் நூலகம் 1982ம் ஆண்டு சிங்கள இராணுவப் படையினரால் எரித்து அழிக்கப்பட்டதைத்

தொடர்ந்து தமிழர் தாயகச் சீரழிப்பு தொடங்கியது. யாழ் நகரிலும் சுற்றுப்புறத்திலுமுள்ள 80 விழுக்காட்டுக்கு அதிகமான வீடுகள், கட்டி டங்கள் அழிக்கப்பட்டது மாத்திரமன்றி பொது இடங்களில் நிறுவப்பட்ட வரலாற்று ஞாபகச் சின்னங்கள் அடித்து நொருக்கப்பட்டன. யாழ் மக்க ளின் உதிரம் சிந்திய உழைப்பிற்கு எவ்வித மதிப்பும் கொடுக்காத விதத்தில் அவர்கள் உணவுத் தேவைக்காகப் பயிரிடப்பட்ட அறுவடை நிலையில் இருந்த நூற்றுக்கணக்கான நெல் வயல்கள் அழிக்கப்பட்டன. இராணுவத்தினர் தம் சொந்தப் பாதுகாப்பிற்காக இவ் வயல்கள் மத்தியில் முகாம்களை அமைத்தனர். இவ்வுணவுற்பத்தி தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் ஊக்கத்தினால் செயற்படுத்தப்பட்டது குறிப்பிடத் தக்கது. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக் கருதி பனை, தென்னை மரங் களை வெட்ட கடும் எதிர்ப்புக்காட்டுவதுடன் விடுதலைப் புலிகள் அம்மரங்களைப் புதிதாக நடுவதில் மக்களுக்குப் பெரிதும் ஆர்வம் கொள்ளச் செய்து வந்தனர். ஆனால் சிங்கள இராணுவம் தமது முகாம் களை அமைப்பதற்கு ஆயிரக்கணக்கான பனை, தென்னை மரங்களை வெட்டியழித்தனர். போரில் வீரமரணமடைந்தவர்க்கு மதிப்புக் கொடுக் கும் விதத்தில் கட்டப்பட்டிருந்த மாவீரர் துயிலும் இல்லமான கல்லறை களை எவ்வித மரியாதையுமின்றி கனரக இயந்திரங்கள் மூலம் அழித்துவிட்டனர். இது தமிழ் மக்களைப் புறக்கணித்தும், அலட்சியப் படுத்தியும் அவர்கள் வாழும் தாயகமான யாழ் நகரைக் கற்பழிப்புச் செய்த செயலேயல்லாமல் வேறொன்றுமல்ல. இச் செயல் அந்நிய நாட்டுப் பணத்தினால் யாழ் நகர் புனரமைக்கப்படுவதினாலோ அல்லது மீளக் கட்டியெழுப்பப்படுவதினாலோ இலகுவில் மறக்கப்படக்கூடியதல்ல.

## மனித உரிமை மீறல்கள்

எனது மக்களின் தலைவிதியை விவாதிக்க வேண்டியிருக்கிறது. இத னைச் சர்வதேச சமூகம் அறியும் ஆவலும், அதன்மேல் பரிவுமுள்ள படியால் நான் சில கேள்விகளைத் தமிழ் மக்களைக் காப்பாற்றும் நோக்குடன் உங்களிடம் கேட்கிறேன்.

1. அரசும், சட்டத்தின் காவலர்களும், மக்களின் பொதுவான உரிமைக் கொதிரான மீறல்களை நடத்துவதுடன் அவற்றைப் பூசிமெழுகி வருவதும் ஏன்?

2. சர்வதேச கண்டனத்துக்கும், விசாரணைக்குமுள்ளாகாமல் மூடி மறைக்கப்படும் பயங்கரவாதமாக இருப்பது ஏன்?

3. அரசியல் ஏதேச்ச அதிகாரமும் இராணுவ எதிர்ப்பு நடவடிக்கைகளும் வருடக்கணக்காக வெளிநாடுகளும், அரசுகளும், ஆயுதங்களையும் நிதியுதவிகளையும் கொடுத்துக் கொண்டு, அதே நேரத்தில் போலிக் கண்டனங்களைத் தெரிவிப்பது ஏன்?

4. தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் தனது மக்களைக் குண்டுவீச்சி னாலும், எறிகணைகளாலும் தாக்கிக் கொண்டும், அரசாங்கம் தான் விரும்பியவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு அரசியல் ரீதியான நிலை அவர்கள் மிது திணித்து, மக்களைப் பட்டினி போட்டுக் கொன்று குவித்துக் கொண்டிருக்கையில் ஜனநாயகத்தின் பாதுகாவலர்கள் என்போர் எங்கே போய் இருக்கிறார்கள்?

நான் முழு உலகத்தையுமே இக்கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். கொழும்பு நகரில் ஒரேயொரு குண்டு வெடித்தாலோ, அல்லது உலகின் வேறு பாகங்களிலோ, ஒக்லாகோமா குண்டு வெடிப்பு உட்பட ஒரு சம்பவம் நடந்துவிட்டால், மக்களும் நாடுகளும் பெருங்குரல் கொடுப்பது ஏன்? அதே நேரத்தில் கட்டாயத் தணிக்கையை அமுற்படுத்திக் கொண்டு, பயங்கரவாதிகளின் தளங்களை அழிக்கிறோம் என்ற அடை மொழியுடன் இரவும் பகலும் நூற்றுக்கணக்கான குண்டுகளைப் போட்டும், ஆயிரக்கணக்கான எறிகணைகளை ஏவியும் பொதுமக்கள் வாழும் பகுதியை அழித்தும் கோவில்கள், தேவாலயங்கள், பாடசாலை கள் இவற்றை அழித்துக் கொண்டும், அப்பாவிப் பொதுமக்களை வருடக்கணக்காக சிறீலங்கா அரசாங்கம் கொன்று குவிப்பதையிட்டு ஏன் எதுவித எதிர்ப்பையும் காட்டாமல் வெளியுலகம் மௌனம் சாதிக்கிறது.

வருடக் கணக்காகப் பொருளாதாரத்தடைகளூடாக தனது மக்களைச் சமூகவியல் ரீதியாக குரல்வளையை அமுத்தி நசுக்கும் இந்நடவடிக் கையால் சிறீலங்கா அரசாங்கத்தின் கொடுமையும், மனிதாபிமானமற்ற தனமும் தெரியவில்லையா? மக்களை வெல்வதற்கு அவர்களின் அத்தி யாவசியத் தேவைகளை மறுப்பது, தங்கள் அரசாங்கக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காக அவர்களை மண்டியிடவைப்பது சரியா?

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான அவசியத் தேவை களைச் செய்துவரும் அரச சார்பற்ற நிறுவனங்களைக் கட்டுப்படுத்துதல் முறையா? போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆகக் கூடிய உதவிக

ளைச் செய்துவரும் நிறுவனங்களுக்கும் தலையீடற்ற போரிடும் இருசாராரிற்கும் சுதந்திரமும், உதவியும் தேவை. போர்ச் சூழலில் பணிபுரிந்துவரும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்புடையவன் என்ற முறையில் அவைகள் தங்கள் பணிகளைச் செய்வதில் மோசமான நிலைமையை எதிர்நோக்கியுள்ளார்கள் என்பதை நான் அறிவேன். போதியளவு நடமாட்டச் சுதந்திரமும், தொடர்புச் சாதனங்களும், மருந்து வகைகளும், மூலப்பொருட்களுமின்றி அந்நிறுவனங்களில் பெரும்பாலானவை விரக்தியும், செயற்திறனும் இழந்தவையாகவும் இருக்கிறது. ஆகவே அரச சார்பற்ற நிறுவனங்களுக்குக் கூடுதல் வசதிகளும், ஊக்குவிப்பும், நம்பகத் தன்மையுடன் சுதந்திர நடமாட்டமும், மக்களுக்கு உதவியளிக்கக் கூடிய முறையில் போதுமான மூலப்பொருட்களும் கொடுத்துதவ வேண்டுமென்று போராடும் இருசாராருக்கும் நான் கோரிக்கை விடுக்கிறேன்.

## எனது வேண்டுகோள்

கடந்த நாற்பது ஆண்டுகாலமாகத் தமிழ்மக்கள் அனுபவித்து வரும் சொல்லொணாத் துயரங்களிலிருந்தும், சாவு, அழிவு, இடம்பெயர்வு என்பவற்றிலிருந்தும், தமிழ்மக்களின் இனப்படுகொலையின் தேசிய அழிவையும் பற்றி இந்த அரசாங்கத்திற்கு அறிவுறுத்த வேண்டியவனாக இருக்கிறேன். தமிழ் மக்களின் பெரும்பான்மையான மனித உரிமை மீறல்கள் பற்றி சர்வதேச சமூகம் கவனமெடுக்கும்படி கேட்கிறேன்.

நல்லெண்ணங்கொண்ட மக்கள் அனைவரையும் சிறீலங்காவுடன் சிநேகபூர்வமான தொடர்புகளைக்கொண்ட அரசுகளையும், கடவுள் பெயராலும், உண்மை நீதியின் பெயராலும் நான் கேட்டுக் கொள்வது:

1. தாங்கள் போகும் பிழையான ஆபத்தான பாதையை, எமது நாட்டுத் தலைவர்கள் உணர்ந்து கொள்ள உதவவேண்டும்.
2. வடக்குக் கிழக்கில் நடைபெறும் சரமாரியான குண்டுவீச்சுக்களையும், எறிகணைத் தாக்குதல்களையும், சமாதானத்திற்கான போர் என்ற நடவடிக்கையையும் உடன் நிறுத்த உதவவேண்டும்.
3. பொருளாதாரத் தடையை உடன் அகற்றுவதுடன் உணவு மற்றும் மருந்து விநியோகங்களும், அரச கட்டுப்பாடில்லாத இடங்களுக்கும் கொடுபட உதவவேண்டும்.
4. ஐ.நா ஸ்தாபனமோ அல்லது வேறு பிற அரசாங்கக்குழுக்களோ மூன்றாவது மத்தியஸ்தம் வகித்து இனப்பிரச்சனைக்குத் தீர்வுகான

உடனடியாகச் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க உதவ வேண்டும்.

5. போர்ச்சூழலில் உதவிடும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது பணியைச் செய்வதற்குக் கூடியளவு சுதந்திரமும், சலுகையும் தருவ தில் உறுதியளிக்க உதவவேண்டும்.

ஒற்றைத் தனியாட்சியுள்ள நாட்டுக்குள்ளேயே சர்வதேச சமூகத்தின் கவனமின்றித் தமிழ்மக்கள் மோசமான நிலையையடைந்துள்ளனர். அரச பயங்கரவாதத்தினாலும், பாகுபாட்டாலும் நீண்டகாலமாகப் பாதிக்கப் பட்டு வரும் தமிழ்மக்கள் தமதினத்திற்கு இழைக்கப்படும் மனிதஉரிமை மீறல்களைப்பற்றித் தமது எதிர்ப்பைச் சர்வதேச சமூகத்தின் முன் எடுத்துச் சொல்ல இடமின்றி (ஐ.நா.ஸ்தாபனங்கள் போன்ற) கண்ணீர்க் கவலைகளுடன் பலம்பொருந்திய அரசுகளினதும், நாடுகளினதும் முன் நிற்கிறார்கள். இந்த மக்களின் கூக்குரலைக்கண்டு, அவர்களைக் காப்பாற்றாது, பலமான அரசாங்கங்கள் கண்ணை மூடிக்கொண்டிருத் தலாகாது. நீதியையும் சமாதானத்திற்கான நடவடிக்கையையும் பின்தள் ளும்விதத்தில் ஆயுதங்கள் விற்பனை செய்வோர், பொருளாதார முதலீடு செய்வோர் செயற்படக்கூடாது.

இவ் அமெரிக்க நாட்டில் வாழும் நீங்கள், உங்கள் நாட்டில் நீதிக்காக வும், சமாதானத்திற்காகவும் ஏங்கும் உங்கள் உடன் பிறப்புக்களின் கூக்குரலை இந்த நாடறியச் செய்து இந்தப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்குச் செய்விக்க வேண்டுமென்றும், எமது நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒருவருக்கொருவர் பிரச்சி னைப்படாது, நல்ல நண்பர்களாகவும், அயலவர்களாகவும் இருக்கும்படி செய்வதற்கு உங்களாலானவற்றைச் செய்யுமாறும் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(சிக்காக்கோ 01.06.1997)

# சமாதானத்திற்காக யாழ். திருச்சபையின் கோரிக்கை

யாழ் திருச்சபை அரசுக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் 1996ம் ஆண்டு ஏப்பிரல் 15ல் விடுத்த சமாதானக் கோரிக்கை

யாழ் மறைமாவட்ட ஆயரும் குருக்களுமாகிய நாம், எமது மக்கள் படும் சொல்லொணாத் துன்பங்களையும், வேதனைகளையும் அவர்களுடன் அனுபவிக்கும் இவ்வேளையில் தற்போதைய போர் இன்னுமொரு ஆபத்தான அழிவுக் கட்டத்திற்கு மக்களை இட்டுச் செல்கிறது என்பதைச் சமாதானத்தின் பெயரால் தங்களுக்குக் கோரிக்கை விடுக்கிறோம்.

தங்கள் சொந்த மண்ணிலேயே கடந்த 40 ஆண்டுகாலமாகத் தம் மனித உரிமைகளுக்காகப் போராடும் தமிழ் மக்களின் ஓரங்கமே கிறிஸ்தவத் திருச்சபையாகிய நாம்: துர்அதிஷ்டவசமாக இப்போராட்டம் பதவிக்கு வந்த அரசாங்கங்களினால் நல்லதொரு தீர்வைக் அடையாமையினால், அரச படைகளுக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான மோதலுக்கு வழிவகுத்துவிட்டது.

சுயநிர்ணயம், தேசியதனித்துவம் பாரம்பரிய தாயகம், இவைகளுக்காகப் போராடிவரும் தமிழ் மக்களின் போராட்டத்தை ஆதரிக்கும் அதே வேளையில், போரைக் கண்டிக்கிறோம். 'சமாதானத்துக்கான போர்' என்றாலும் தன்னளவில் அழிவை விளைவப்பதுடன் பதிலழிவையும் கொண்டுவரக் கூடியது. யுத்தத்தினால் இரு பகுதியிலும் இழந்த மிகப் பெறுமதிமிக்க உயிர்களுக்காக நாம் பெரிதும் வருந்துகிறோம். வடக்கிலுத் தெற்கிலும் அநியாயமான முறையில் சித்திரவதைபடுத்தல் அல்லது மர்மமான முறையில் காணாமற் போதல், மனித உரிமை மீறல்கள், சட்ட விரோத ஆக்கிரமிப்பு ஆகியவற்றை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந் நாட்டின் இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு உருப்படியான தீர்வாக அமையாது என்பதை நாம் ஆணித்தரமாக அறிவுறுத்துகிறோம். அரசிற்கும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளினதும் சமாதானப் பேச்சு ஒன்றுதான் தான் நீண்டகால இனப்பிரச்சனைக்கு ஒரு சுமூகமான தீர்வுக்கு வழிவகுக்கும்.

# எனது நிலைப்பாடு

கிறிஸ்தவனும் குருவும் என்ற வகையில் சாவுக்கும், அழிவுக்கும், இனப்பாகுபாட்டிற்கும் உள்ளாயிருக்கும் மக்கள் சார்பாக நடந்த உண்மைகள் பற்றிச் சாட்சியம் கூற நிற்பந்திக்கப்பட்டுள்ளேன். நான் சாட்சியம் கூறுவதை யாராலும் தடை செய்யமுடியாது. நான் ஏற்கனவே கட்டுரை வழியாகவும், சிறு பிரசுரங்கள் வழியாகவும் இலங்கை மக்களின் அமைதிக்காகவும், நீதிக்காகவும் எனது சொந்த எண்ணங்களை எனது பெயரில் வெளியிட்டுள்ளேன். சிங்களச் சகோதரர்களை அவமதிக்க வேண்டுமென்று நான் எண்ணியதில்லை. நான் தரும் சாட்சியத்தின் உண்மைகளால் அரசாங்கத்தில் ஆட்சியிலிருப்பவர்கள் பாதிக்கப்படலாமேயொழிய சாதாரண மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள். நான் உண்மையை மறைக்கமாட்டேன், நான் சாட்சியம் தருவதற்கு எந்த இயக்கங்களுடனோ அல்லது எந்த அரசியல் கட்சிகளுடனோ சார்ந்திருக்கவில்லை, ஏனெனில் உண்மை ஒருபக்கம் சாராதது.

இயேசுவும், அவரது வழிவந்த திருச்சபையும் நெறிப்படுத்தும் நீதியும் சமாதானம் பற்றிய கிறிஸ்தவக் கோட்பாடுகள் நான் சாட்சியம் கூறுவதற்கு உந்து சக்தியாகவுள்ளது.

**உண்மைக்கு மட்டுமே நான் சாட்சி.**

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

K. [illegible]

c/o Mrs. செல்வத்துரை

37 win Laton road

Promly kend

London br 15 PU

T.P.NO 0044-181-461 3335

mobilNO: 70-500 93351

2500

அன்பளிப்பு

அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)

அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.



யாழ்.மறைமாவட்டத்தின் தற்போதைய குருமுதல்வரான அருட்தந்தை எஸ்.ஜே. இம்மானுவேல் 1934ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்தார். இவர் யாழ்.நகரில் நற்சமூக நடுநிலையத்தின் தோற்றுவிப்பாளரும் இயக்குனரும். இரு, இரு-மாத தமிழ்ச் சஞ்சிகையின் ஆசிரியரும் இவரே. கடந்த 10ஆண்டு காலமாக யாழ். புனித பிரான்சிஸ் சேவியர் உயர் குருத்துவக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றினார். ஆசிய-ஆயர் அமைப்பின் இறையியல் ஆலோசனைக்குழு உறுப்பினராக 1986ம் ஆண்டு தொடக்கம் கடமையாற்றிவரும் இவர் இறையியல் பற்றி எழுதி வெளியிட்ட பல ஆய்வுகளில் 'இலங்கையில் திருச்சபை, அரசியல் போர்' என்ற தலைப்பில் குறுநூல் வெளியிட்டார். பொது நிலையினர் வாழ்வும் பணியும் என்ற பேரவை அமர்வின்போது சர்வதேச ரீதியில் ஆங்கிலத்தில் வெளியான இறையாக்கங்களில் அடிகளாரின் சிந்தனை சிறப்பானது என்று பிரபலமான கொன்சீலியம் (Concilium) என்ற இறையியல் சஞ்சிகை விதந்துரைத்தது குறிப்பிடத்தக்கது.

கல்வித்துறையில் சிறந்து விளங்கிய இவர், பௌதிக விஞ்ஞானத்துறையில் 1958ல் இளங்கலைமாணிப் பட்டதாரி (இலங்கை) ஆசிரியராகக் கடமையாற்றியபின் பொது நிலையினர் உருவாக்கத்தில் பணிபுரிந்து, உரோமைக்குச் சென்றார். 1963, 1966ல் மெய்யியல், இறையியல் பட்டம் பெற்று, முடிவில் உரோம் நகரில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். தாயகம் திரும்பியதும் இல்லறத் தொண்டர்கள்-மறையாசிரியர்களுக்கும் பொறுப்பாளராகவும் இயக்குனராகவும் 5 வருடகாலம் பணிபுரிந்தார். 1976ம் ஆண்டு உரோம் நகர் ஊர்பன் பல்கலைக்கழகத்தில் இறையியல் கலாநிதிப்பட்டம் பெற்று, அம்பிற்றியா, இலங்கைத் தேசிய குருத்துவக் கல்லூரியில் இறையியல் பேராசிரியராகவும் இறையியற்துறைத் தலைவராகவும் பணிபுரிந்தார். அதைத் தொடர்ந்து யாழ் உயர் குருத்துவக் கல்லூரி அதிபரானார். முன்ஸ்ரர், யேர்மன் சர்வகலாசாலையில் இறையியலில் இடைக்கால விரிவுரையாளராக 1983-84ல் கடமையாற்றினார்.

இவரது வாழ்வியல், உரைகள் கருசூலங்கள் 'தமிழ் ஈழ இறையியல்' உருவாகிவிட்டது என்பதை தெளிவுபடுத்தி நிற்கிறது இதன் சூத்திரதாரி அடிகளார் இம்மானுவேல் என்பதை யேர்மன் தமிழ் ஆன்மீகப் பணியகம் எவ்வித சந்தேகமுமின்றி இங்கு பொறித்து வைக்க விரும்புகிறது.